வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 சித்திரை திங்கள் 8-ம் நாள் (21—4—1963) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 26 | இதழ் 47



# திரண்டது சன சமுத்திரம்

## யாழ் நகரில் விடுதலை வேட்கையின் பிரதிபலிப்பு

வெள்ளம்போல் தமிழர் கூட்டம், அதுவும் வீரம் கொள் தமிழர் கூட்டம், உடலால் பல்லாயிரவராயினும் உள்ளத்தால் ஒருவராகி நின்ற இந்த கண்கொள்ளாக் காட்சியைக் கடந்த புதன்கிழமை மாலை யாழ். கோட்டை மைதானத்தில் காண முடிந்தது.

மாலை நாலு மணிக்கு யாழ் நகரின் ஐந்து பிரதான வாசல்களிலுமிருந்து மக்கள் வெள்ளம் ஆறுகப் பெருக்கெடுத்தோடும் ஊர்வலங்களாகப் புறப்பட்டு ஒன்றுடன் ஒன்று சங்கமமாகி, பேராருகப் புரண்டோடி, யாழ் கோட்டை மைதானத்தில் குழுமியிருந்த மக்கள் சமுத்திரத்துடன் கலந்தது.

மைதானத்தில் குழுமி வழிந்த மக்கள் கூட்டமோ அறப்போர் முரசு கேட்டு இனம் காக்க வீறு கொண்டெழுந்து விரைந்த மறவர் சமுத்திரமாகக் காட்சி தந்தது.

1961ம் ஆண்டு மொழி காக்கத் தோள் புடைத்து, கச்சேரி வாசலிலே தவங்கிடந்து, இரத்தத்தால் தங்கள் சரித்திரத்தை எழுதிய நிகழ்ச்சியை நினைவு கூருவதற்காகக்கூட்டப்பட்டகூட்டமாகும்இது. ஆனல் அங்கு திரண்ட மறப்படை எங்கே அடுத்த போராட்டம், அடக்குமுறையை துடைத்தெறிய ஆண்மையுடன் போராடுவோமென, துடிதுடித்து நின்றதைக் கண்ட எந்தத் தமிழ் மகனும் உணர்ச்சி மேலீட்டினல் தமிழ் வாழ்க—தமிழரசு வாழ்க என்று குரலெழுப்பாமல் இருந்திருக்கமாட்டான்.

ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் ஆறுகால் மடத்தடியில் திரண்டு, திருவாளர்கள் அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா ஆகியவரின் தலைமையில் யாழ் நகர் நோக்கி ஊர்வலம் வந்தனர்.

காங்கேசன்துறை, உடுவில் தொகுதி மக்கள் குளப்பிட்டிச் சந்தியில் குழுமி,

(9-ம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலையை அகற்றி அமைதியை நிலைநாட்ட முடியுமா?

### ஆட்சியாளருக்கு தமிழரசுத் தலைவர் சவால்

சிறுபான்மையினரின் ஒத்துழைப்பின்றி இந்த ஆட்சிபீடம் ஒரு நிலையான, அமைதியான ஆட்சியை நடத்த முடியாது. வேண்டுமானல் அவசரகால நிலையை அகற்றி விட்டு, அமைதியான ஆட்சியை நடத்திக் காட்டும் சக்தி இன்றைய ஆட்சிபீடத்திற்கு உண்டா என்று பார்ப்போம். இது முடியாத காரியம் என்பதை அவர்களுக்குக் கூறிவைக்க ஆசைப்படுகிறேன்.

இவ்வாறு சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரக நினைவுநாள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இங்கு குழுமியிருக்கும் மக்களில் தொண்ணூறு சத விகிதத்தினர் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற மாபெரும் சத்தியாக்கிரக இயக்கத்தில் நிச்சயமாகக் கலந்திருப்பீர்கள். எனவே உங்களுக்கு நடந்து முடிந்த விடயங்களைப்பற்றி எதுவும் விபரமாகக் குறிப்பிடத் தேவையில்லை. என்றுலும், இரண்டுமாதங்களாக நாங்கள் நடாத்திய இந்த மாபெரும் இயக்கத்தை முறியடிக்க, வட, கிழக்கில் செயலற்று இருந்த அரசாங்க நிர்வாகத்தைப் பழையநிலைக்கு கொண்டுவர, இந்த நாட்டின் ஆட்சிபீடம் இராணுவத்தையும் பொலீசாரையும் துணைக்கு அழைக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. நமது போராட்டம் எத்தகைய வலுவுடையது என்பதையே இந்நிகழ்ச்சி பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகிறது.

#### ஒற்றை ஆட்சி முறை உகந்ததல்ல

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனம் தனது இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும், பெற்ற உரிமைகளைப் பேணிக் காப்பாற்றுவதற்கும் இன்று நடைமுறையில் இருக்கும் ஒற்றை ஆட்சி முறை உகந்தது அல்ல.

ஒற்றை ஆட்சியின் கீழ் நாம் நமது உரிமைகளைப் பெற முடியாது. பலதரப்பட்ட மக்கள், ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள், வாழும் நாடுகள் அனைத்திலும் ஒற்றையாட்சி முறை

(8-ம் பக்கம் பார்க்க)



யாழ் முற்றவெளிமைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சத்தியாக்கிரக நினைவு தினக் கூட்டத்தை நோக்கி வரும் மாபெரும் ஊர்வலக்காட்சிகள். அரியாலை ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கிய திரு. [illegible], திரு. ஜி. பி. வின்சன்ற், திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. பிரான்ஸிஸ் பெரேரா ஆகியோரையும் காண்க.

படம்:- அரசு, செல்லத்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிசாய்ந்த மன்னர்களின் அவலக் குரல்

## பெற்ற பதவியைக் காப்பாற்றப் பேச்சு வார்த்தையா?

## விட்டபதவியைத்தொட்டுக்கொள்ள வட்டமேசை மாநாடா?

### வேண்டாம் விபரீதம்—விலகியிருங்கள்

வீட்டுக்குள்ளே ஒரு கள்வன் புகுந்தான். அவனைப் பார்த்தாலே மிகவும் பயங்கரமாக இருந்தது. அவன் வருகிற வரவைப் பார்த்தால், நம்மைக் கொன்று விடுவான் போலத் தெரிகிறது. அவ்வளவு தூரம் நம்மைப் பயமுறுத்துகிறான். எனது தம்பிமார் இருவரும் மெதுவாக கோடிக்குள்ளே பதுங்கிக் கொள்கிறார்கள். மூன்று மணித்தியாலங்களாக அவனோடு சமர் புரிகிறோம். சில வேளைகளில் நாம் வெல்லுகிறோம். சில வேளைகளில் அவன் வெல்லுகிறான். இரு பகுதிக்கும் பலத்த காயங்கள். அண்டை வீட்டுக்காரர்கள் எல்லாரும் ஒரே கூச்சல் போடுகிறார்கள். களைத்துப்போன நாம் கொஞ்சம் மூச்சு விட்டுக்கொண்டு அடுத்த தாக்குதல் ஆரம்பிக்கிறோம். கள்வனும் கொஞ்சம் யோசனை பண்ணுகிறான். இந்த நிலையில் நமது தம்பிமார் தலையைக் காட்டி "அண்ணே, அண்ணே! கள்வன் நம்மைக் கட்டாயம் கொன்றே முடிப்பான். நமக்குத் தோல்வி என்ற பெயர் ஏற்படும். இந்தா கயிறு, நாங்களாகவே கொடி மரத்திலே தூக்குப் போட்டுக்கொண்டு செத்து விடுவோம். அப்பொழுது கள்வன் நம்மை எப்படிக் கொல்ல முடியும்?" என்று சொல்லி அண்ணனைக் கோடிக்கு இழுத்துக் கொண்டு போய் அவனுக்கும் கழுத்திலே கயிற்றை மாட்டித் தாங்களும் சுருக்குப் போட்டுக்கொண்டு செத்து விட்டார்கள், கள்வனோடு ஒத்துழைத்து.

இந்த நிலைதான் இப்பொழுது இலங்கையின் சிறுபான்மையினரின் அரசியல் நிலை. தமிழினத்துக்கு நேர்ந்த கதி இன்று நேற்று நிகழ்ந்ததல்ல. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு தொடக்கமாகவே ஆயத்தம் செய்யப்பட்ட ஒரு சதி—அந்தச் சதி இப்பொழுது படிப்படியாக நிறைவேறி வருகிறது. 1956-ம் ஆண்டு சிங்களம் மாத்திரம் சட்டம் நிறைவேறியதும், திரு. சு. நடேசன் அவர்கள் பாராளுமன்றத்திலே மணி மொழியுரை வழங்கிக் கண்ணீர் பெருக்கிவிட்டு யூ.என். பிக் கட்சியைவிட்டு வந்தார். பலாலி, ஆகாய விமானத்திலே அவர் ஒரு பவனியை ஆரம்பித்தார்கள். அன்று தொட்டு இன்றுவரை, பொதுத் தேர்

**மீசைக்காரன்**

தலுக்கு நின்றதைத் தவிர வேறேதாவது தமிழர் பிரச்சினைக்கு வழி கண்டாரோ என்றால், இல்லை இல்லை. நான் திருவாசகத்தை ஆராயப் போகிறேன். இனிச் சிவ சிந்தனையே என் தவம் என்று மௌனியாகி விட்டாரா? திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஒன்றிரண்டு கூட்டம் போட்டார். கடை திறப்பு—கடையடைப்பு வைபவத்தில் பொருதார்; பின்னர் மௌனியானார். எதிர்ப்புக் காட்டும் தமிழரசுக் கட்சிக்கு ஏதாவது சதி செய்து அதை உடைப்பது தான் அவர்கள் கைங்கரியமாயிருந்தது.

#### ஏழு வருடங்கள் பொருதோம்

பொருதோம், பொருதோம், 7 வருடங்கள் பொருதோம். இந்த வருடம் ஜூன் மாதம் 5-ம் திகதியோடு ஏழு வருடங்கள் பூர்த்தியாகின்றன. பொருதோம், பொருதோம் ஏழு நீண்ட ஆண்டுகள் பொருதோம். படைப் பலமும் அரசாங்க அதிகாரமும், காட்டிக்கொடுக்கும் நடேசன், துரையப்பா போன்ற கயவர்களின் துணையும்கொண்ட ஒரு பெரும் மலைபோன்ற சக்திக்கு எதிரே ஆயுத பலமின்றி ஆன்ம பலத்தால் எதிர்த்தோம். தள்ளாத நடைபோட்ட கிழவரும், பொல்லையும் பிடித்துக் கொண்டு சத்தியாக்கிரகிகளாகக் கச்சேரி செல்வதைக் கண்டோம். கிராமங்களிலிருந்து அலையலையாய் பெண்களும், குழந்தைகளும் உருகுந் தாரிலே கிடந்து உருக்குலைந்தோம். இராணுவத்தின் வாளையும் துப்பாக்கியையும் எதிர்த்துப் பள்ளி மாணவர்கள் நடுத்தெருவிற் புழுவாய்த் துடித்துக் கிடந்தார்கள். சிங்கள அரசாங்க அதிபர், கச்சேரி வாயிலைத் திறந்தபோது முருகா முருகா என்று பாடிக்கொண்டு அடியும், மிதியும் பட்டனர் எமது பெண்மணிகள். பச்சையாகப் பெற்றோல் ஊற்றி எமது குருக்கள் சாம்பராக்கப்பட்டார். பால்மணம் மாறாத பச்சிளங் குழந்தைகள், தமிழ்க் குழந்தைகள் என்றமைக்காக பாறையிலே சிதற அடிக்கப்பட்டார்கள். அடுக்கிக்கொண்டு போனால் அப்பப்பா—இவ்வளவையும் நாம் சமாளித்துக்கொண்டு பொருதோம், பொருதோம் ஏழு நீண்ட ஆண்டுகள் பொருதோம். சிறையிருந்தோம். பொல்லடி பட்டோம், கற்பைப் பறிகொடுத்தோம், இரத்தத்தைக் கொடுத்தோம், உடைமையைக் கொடுத்தோம்.

#### அப்பொழுது நீங்கள் எங்கே?

அப்பொழுது எங்கே? சுப்பையா நடேசன் எங்கே? ஒத்துழைப்புக் கரம் நீட்டும் சிங்களவர் கண்டுங் கூம் தனிப் பெருந் தலைவர் எங்கே? சு. நடேசன் அவர்களும் வடக்கேயிருக்கும் கல்வி அதிபர் அவர்களும் ஒரு கைங்கரியம் செய்தார்கள். பள்ளிக்கூடங்களை இராணுவங்களுக்குப் பறித்துக் கொடுத்தார்கள். எங்கெங்கே எதிர்ப்பு இருந்ததோ அதையெல்லாம், படையதிபருக்கு தம் கையாட்கள் மூலம் அறிவித்தார்கள். இந்த இக்கட்டான நிலையிலே, சு. நடேசன் அவர்கள் ஒரு பெரிய அரும் தொண்டைச் செய்தார்கள். இந்தியாவெங்கும் இந்த அநியாயத்துக்குக் கண்டனக் குரல் எழுந்த போது அங்கே சென்று இலங்கையில் மொழிப் பிரச்சனை தீர்ந்துவிட்டது, அங்கே சமயப் பிரச்சனைதான் இருக்கிறது என்று அறிக்கை சமர்ப்பித்துவிட்டு மீண்டு வந்து எப்படி என் சமர்த்து என்று ஸ்ரீமாவோ அரசாங்கத்துக்கு ஒரு புன்னகை போட்டார். சபாஷ் என்று தட்டிக் கொடுத்தார். இராணுவ அடக்குமுறைக் காலத்திலே, திரு. சு. நடேசன் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த முறையைப் பாராட்டிய அறிக்கை அச்சாகவே அன்று வந்ததைத் தமிழ் பேசும் மக்கள் அறிவார்கள். அந்தச் செல்வத்தைத்தான் இன்று [illegible]




"ஒ ளைமை கசப்பானது" என்று பலர் கூறுவார்கள். நான் இந்தப் பகுதியில் எழுதி வரும் உண்மைகள் அவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கசப்பாகவும், சம்பந்தப் படாதவர்களுக்கு இனிப்பாகவும் இருக்கின்றன. பயமுறுத்திக் கடிதங்கள் எழுதுவதினால், நான் இப்படி எழுதுவதை நிறுத்துவேன் என்று நினைப்பது மகா முட்டாள்தனம்.

முன்பு வெளியான கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சில எழுத்தாளர்கள் கார சாரமாகக் கடிதம் எழுதியுள்ளனர். வேறு சிலர், தாங்கள் அப்பாவி போல் நடித்துக்கொண்டு, தங்களுக்காகப் 'போர்க் கொடி' உயர்த்தும்படி தங்களுடைய 'வால்'களைத் தூண்டி விட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் ஒரேயொரு பதிலை நான் அளிக்கின்றேன், வேண்டுமென்றே நான் உங்களை வம்புக்கிழுக்கிறேன்.—பெரிய மனிதரைப் போல் நடித்துக் கொண்டு கீழ்த்தரமாக நடக்கிறீர்கள். உங்களுடைய தீச்செயலை நான் அம்பலப்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது? உங்களைப் பற்றி எழுதுவதை நான் நிறுத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், நீங்கள் நேர்மையுடனும் சத்தியத்துடனும் நடவுங்கள். அதை விட்டு விட்டு, பெரிய மனிதப் போர்வையில் இருந்துகொண்டு, சின்னத்தனமான வேலைகளைச் செய்தால், நான் உண்மையை அம்பலப்படுத்தத்தானே வேண்டும்.

"ஆறு மாதங்களுக்கு மேல் மக்கள் எதையும் நினைத்து வைத்திருப்பதில்லை" என்று திரு. சு. நடேசன் அழகாகத் தன் பக்த கோடிகளுக்குக் கூறுவாராம். அந்த நம்பிக்கையில் தான் இன்று ஸ்ரீமாவோடு தஞ்சம் புகுந்தார் போலும்.

#### திரு. ஜி. ஜி. யின் முரண்பட்ட வாதம்

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் இத்தனை அட்டூழியங்களையும் எண்ணித்தான் இரண்டே இரண்டு வழிகள் உள்ளன என்கிறார். ஒன்று, ஆயுதமெடுத்துப் போர் செய்ய வேண்டும். அது சாத்தியமில்லை; ஆனபடியினால் ஒத்துழைக்க வேண்டும். ஆயுத மெடுத்துப் போர் செய்ய வேண்டிய அத்தனை ஆத்திரமும், அநியாயமும் நேர்ந்திருக்கிறது என்பதைத் திரு. பொன்னம்பலம் மறுக்கவேயில்லை. எதிர்க்க வேண்டும் என்பதையும் அவர் மறுக்கவேயில்லை. ஆனால், இந்த இடையிலே ஒருஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும் என்கிறார். அந்த ஒத்துழைப்பு நாம்முன் கூறிய கள்வனுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்பாகத்தான் இருக்கும். அநியாயத்தை எதிர்க்க வேண்டும். தோல்வி போலப்பட்டால், எதிரி கொல்ல வருவதன் முன் நாமே நம்மைக் கொன்றுவிட வேண்டும். இதுதான் பொன்னம்பலத்தின் வாதம்.

பொருதோம் பொருதோம் ஏழு நீண்ட ஆண்டுகள் தியாகத்தைச் சொரிந்து, வன்னியசிங்கத்தை பறிகொடுத்த, இரத்தம் சிந்திப் பொருதோம். இன்றும் மூச்சு விட்டுக்கொண்டு அடுத்த முனை ஆரம்பிக்கிறோம். இந்த நிலையில்வட்ட மேசையில் பேசுவோம் என்கிறார் திரு. பொன்னம்பலம். அடிப்படை உரிமைச் சாசனம் என்கிறார் திரு. நடேசபிள்ளை அவர் சிங்களம் மாத்திரம் சட்டத்தை நூற்றுக்கு நூறு ஏற்றுவிட்டேன், அதை இனிமேல், யாரும் மாற்ற முன்வரமாட்டார்கள், அதைக்கேட்பது வீண், ஆனபடியால் வேறு அடிப்படையாக ஏதாவது செய்யலாமோ என்று அம்மையாரைக் கேட்கப் போகின்றாராம். திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு நாடு முழுவதும் மொழிச் சமத்துவம்.

(15-ம் பக்கம் பார்க்க)

செய்த நன்றியை மறப்பதென்பது சில எழுத்தாளர்களுடன் கூடப் பிறந்த குணம். இலங்கையிலுள்ள முற்போக்கு எழுத்தாளர்களைப் பொறுத்த வரையில், அவர்களிடம் நன்றியுணர்ச்சியை மருந்துக்குக் கூட எதிர்பார்க்க முடியாது. இதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும் என்றாலும், சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் இப்போது எடுத்துக் காட்டுகின்றேன்.

ஈழகேசரிப் பொன்னையா நினைவு விழாவைச் சில நாட்களுக்கு முன் குரும்பசிட்டியிலுள்ள சன்மார்க்க சபையைச் சேர்ந்தவர்கள் கொண்டாடினார்கள். இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி இருந்தார்களாம். அந்த விழாவில் எடுத்த படங்களைப் பத்திரிகையில் பார்த்த எனக்குத் துக்கமும் வெட்கமும் ஏற்பட்டது.

இலங்கையில் தமிழ் எழுத்தாளர்கள் என்ற ஒரு இனம் தோன்றுவதற்குக் காரண கர்த்தாவாக இருந்த ஒரு பெரும் மனிதரின் நினைவு விழாவில் ஆக எட்டோ பத்தோ எழுத்தாளர்கள் தான் கலந்து கொண்டதென்றால்...? போயிருந்த அத்தனை எழுத்தாளர்களும் 'கமரா'விற்குள் அகப்பட்டிருக்க மாட்டார்கள் என்று நானே என் மனதைத் தேற்றிக் கொண்டு, மேற்படி விழாவில் கலந்து கொண்ட ஒரு எழுத்தாள நண்பரை விசாரித்தேன். அவர் கூறிய செய்தி அதிர்ச்சி தருவதாக இருந்தது: "இன்று முற்போக்குப் பேசும் எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தனது பத்திரிகையில் வெளியிட்டு ஊக்கமளித்தார் திரு. நா. பொன்னையா. சிலருக்கு பணவுதவி கூடச் செய்திருக்கிறார். 'ஈழகேசரி'யில் வெளியான 'ஈழத்துப் பேனா மன்னர்கள்', 'தமிழ் வளர்க்கும் செல்வர்கள்' என்ற தொடர்களில் கூட இந்த முற்போக்கு எழுத்தாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் "நன்றி கெட்ட இந்த நாய்களில் ஒன்றாவது அங்கு வரவில்லையே" என்று மன வருத்தத்துடன் கூறி முடித்தார் அவர்.

இப்படியான தான்தோன்றிகள் அடுத்த மாதம் மகா நாடு ஒன்றினை நடத்தப் போவதாக இப்போது அறிவித்திருப்பதைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

### சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**'மருதூர் இசைவாணன்', மருதமுனே 1.**

கே: நான் ஒரு அரை மந்திரியாகப் போகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

*ப: பிரதமரைச் சந்தித்து தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது பற்றி பேச்சு வார்த்தை நடத்துங்கள். அத்தோடு தமிழரசுக் கட்சியை எதிர்ப்பதாகவும் சொல்லி வையுங்கள். இல்லேயேல் தனிப் பெரும் தலேயுடன் சேர்ந்து கூச்சல் போடுங்கள், வட்ட மேசையைப் பற்றி!*

ஃ

**வி. எச். குப்பைத்தம்பி, கிண்ணியா.**

கே: தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளே அழைக்காமல் பட்டத்திற்கும் பதவிக்கும் வால் பிடிக்கும் வாய் வீச்சுக்காரர்களே அழைத்து மகாநாடு கூடினுல்?

*ப: ஓரிருவருக்கு அரை முழு மந்திரிப் பதவிகளே வழங்குவதில் முடிவடையும்.*

ஃ

**செல்வி. நமசிவாயம், கொக்குவில்.**

கே: சுதந்திரனுக்கு கதைகள், கட்டுரைகள் எழுதி அனுப்பும் எழுத்தாளர்களுக்கு சன்மானம் வழங்குகிறீர்களா?

*ப: அவற்றைச் சுதந்திரனில் பிரசுரிப்பதே ஒரு பெரிய சன்மானமாயிற்றே!*

ஃ

**எஸ். எல். அரியரெட்னம், அம்பாரை.**

கே: நானும் உங்களுடைய அலுவலகத்தில் வேலே பார்க்க முடியுமா?

*ப: என்னிடத்தில் கேள்வி கேட்பவர் ஒவ்வொருவரும் எனது அலுவலகத்தில் வேலே பார்ப்பவராகவே கருதுகிறேன்.*

ஃ

**சு. பொன்னுத்துரை, நோர்வூட்.**

கே: இப்பொழுது இலங்கையில் கூடுதலாக விற்கும் தமிழ் பத்திரிகைகளில் தினசரிப் பத்திரிகை எது? வாரப் பத்திரிகை எது?

*ப: தினசரிகளில் தினகரன்—வாரப் பத்திரிகைகளில் சுதந்திரன்.*

ஃ

**சூ. மரியதாசன், உருத்திரபுரம்.**

கே: அடுத்த பொதுத் தேர்தலில் நீர் பிரதமமந்திரியாக வந்து,சீனி விலேயை 25 சதமாக்கக் கனவு கண்டேன்.

*ப: விலேயைக் குறைத்தாலும் பாவி மக்களே ஏமாற்ற முடியவில்லேயே! அரிசி விலேயை 25 சதமாக குறைத்தும்கூட டட்லியைக் காலே வாரிவிட்டவர்கள் தானே இந்த மண்ணுங்கட்டி மக்கள்!*

கே: திருமதி சிறிமாவோ தமிழர்களுக்குச் செய்த ஒரு நன்மையைக் குறிப்பிடுங்கள் பார்க்கலாம்.

*ப: மலேயகத்துக்கு ஒரு தமிழனே பாராளுமன்றத்துக்கும், வட இலங்கைக்கு ஒரு தமிழனே செனட்சபைக்கும் நியமனம் செய்திருக்கிறுரே! அகில உலக தமிழினத்துக்கும் அது போதாதா என்ன!*

ஃ

**நா. வடிவேலு, சாவகச்சேரி.**

கே: சில புல்லுருவித் தமிழர்கள் அடிக்கடி சிறிமாவைக் காண ஓடுகிறுர்களே ஏன்?

*ப: ஏதாவது எலும்பு கிலும்பு கிடைக்குமா என்று தேடிப் பார்க்கவோ!*

கே: தமிழர் போராட்டம் என்றுல் தான் தனிப் பெருந் தலேவர் தமது கட்சி மகாநாட்டைக் கூட்டுகிறுர். மற்ற நேரங்களில் கூட்டுவதில்லே. ஏன்?

*ப: போராட்டம் இருந்தால்தானே போராட்டத்தை எதிர்க்க மகாநாடு கூட்ட முடியும்!*

ஃ

**ஆர். கணபதி, கேகாலே.**

கே: இலங்கை அரசாங்கம் ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு தமிழருக்கும் சிங்களவருக்கும் பகையை ஏற்படுத்துகிறதே. இது ஜனநாயக ஆட்சியில் நடப்பதா? அல்லது சர்வாதிகார நாட்டில் நடப்பதா?

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> **கொழும்பு-12.**
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

*ப: இரு இனங்களே மோதவிட்டால் சர்வாதிகாரம் செலுத்த வழி பிறக்கும். சர்வாதிகாரம் வந்தால் பாஸிஸம் தலே தூக்கும்.*

ஃ

**எஸ். கே. சண்முகநாதன், வண்ணுர்பண்ணே.**

கே: குயுக்திமாமா! திடீரென ஓர் அறிக்கையை விட்ட, "அடுப்படி முன்னணி"த் தலேவர், இவ்வளவு காலமும் எங்கேயிருந்தார்?

*ப: அதுதான் "அடுப்படி" என்று நீங்களே கூறிவிட்டீர்களே!*

கே: ஜி. ஜி. யாரும், டட்லியாரும், ஒரே மாதிரிப் பேசுகின்ற மர்மமென்ன?

*ப: இருவரும் இழந்துபோன பதவிகள் மீண்டும் கிடைக்காதா என்று தவம் கிடப்பவர்கள். எனவே ஒரே பாதையில் செல்கிறுர்கள்.*

சாணுதாணு, அல்வாய்.

கே: அடிப்படை என்ற சொல்லே 'அடுப்படி' என்று கூறியது, அம்மாளு அல்லது மருமகளு?

*ப: இருவருமல்ல! மக்கள்.*

கே: காலகண்டரைக் கவனமாக உலாவக் கூறுங்கள். சரிதானே!

*ப: நீர்தான் கவனமாக உலாவவேண்டும். காலகண்டரிடம் சிக்கிக் கொண்டீரோ, சாயம் வெளுத்துவிடும்.*

ஃ

**க. சுந்தரேஸ்வரி, கொடிகாமம்.**

கே: குயுக்திமாமா! இறந்தவர்களின் ஆவி கொஞ்சக்காலத்திற்கு உலாவித்திரிகின்றதென்று சிலர் கூறுகின்றனர். இது உண்மையா?

*ப: உண்மைதான். கணவனின் ஆவி உலாவித் திரிவதாலன்ருே திருமதி சிறிமா இன்னும் பதவியிலிருக்க முடிகிறது?*

ஃ

**இராசரத்தினம், அம்பாந்தோட்டை.**

கே: தமிழ் பேசும் மக்களின் சம்மதமின்றி இந்த நாட்டில் அமைதியான ஒரு ஆட்சியை ஏற்படுத்த முடியுமா?

*ப: முடியாது. ஆகையால் தானே குழப்பமான ஒரு எதேச்சாதிகார ஆட்சியை நடத்துகின்றனர்!*

ஃ

**எஸ். லூர்துமரியான், கொழும்பு-13.**

கே: திரு. குயுக்தியாரே! தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் பொழுது போக்கு என்ன?

*ப: தமிழ் பேசும் இனத்துக்கு மனதாரத் தெரிந்தும் துரோகம் செய்யும் சில தமிழர்களின் சுயநலத்தை எண்ணி மனத்துள் சிரித்துக் கொள்வது.*

ஃ

**கே. என். சற்குணம், காத்தான்குடி.**

கே: சில பெண்கள் அடிக்கடி கடைத் தெருவுக்குப் போக ஆசைப்படுவதன் காரணம் என்ன?

*ப: தேன் தேடிப் போகும் தேனீக்கள் அவர்கள்.*

**திருமதி. ஆர். நடராஜா, யாழ்ப்பாணம்.**

கே: தமிழ் மக்கள் தங்கள் சாத்விகப் போராட்டந் தொடங்க இருக்கும் இந் நேரத்தில் "கப்பலோட்டிய தமிழன்" திரையிடப்படுவதால் போராட்டத்திற்கு ஆதரவு கூடிவிடுமென்றும், இப் படத்தைத் தடை செய்யும்படியும் ஒரு தமிழ்ப் பிரதிநிதி அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கிறுராம். இது உண்மையா?

*ப: இதில் ஆச்சரியமென்ன?- அம்மாதிரியான பிரதிநிதிகளுக்கு நம் மத்தியில் பஞ்சமில்லேயே!*

ஃ

**ஜோதி மலர், கொழும்பு-2**

கே: அருந்ததியர் தமிழர்களா?

*ப: சிலர் தமிழர்-சிலர் தெலுங்கர். ஆனுல் அனேவரும் திராவிடர்களே!*

ஃ

**நா. வடிவேலு, சாவகச்சேரி.**

கே: இலங்கை அரச கருமமொழிச் சட்டம் இப்போது என்ன நிலே அடைந்திருக்கிறது?

*ப: எல்லாம் தமிழ் இயக்கத்துடன் மோதுண்டதில் அதில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.*

ஃ

**மு. சுப்பிரமணியம், மாவிட்டபுரம்.**

கே: ஆனேப்பந்திக் காங்கிரசின் தலேவர் திரு. ஜி. ஜி. யாழ்ப்பாணத்தில் காங்கிரஸ் கட்சி மகாநாட்டில் பேசும்பொழுது சிங்களம் படிக்கும்படி கூறினுரே...?

*ப: சிங்களவரைத் திருப்திப்படுத்த அவர் கையாளும் முறை அது.*

கே: இலங்கை வானெலியின் தமிழ் ஒலிபரப்பில் தமிழ் மூலம் சிங்களத்தை ஒலிபரப்புகிருர்கள், அப்படியே சிங்கள ஒலிபரப்பிலும் சிங்கள மூலம் தமிழை ஒலிபரப்புகிறுர்களா?

*ப: இல்லே...இல்லே-இன்னும் சமஷ்டி ஆட்சி உதயமாக இல்லேயே!*

கே: இன்று உலகம் இருக்கும் நிலேயில் நடு நிலேமை நாடு எனக் கருதக் கூடிய நாடு எது?

*ப: எதுவுமில்லே.*

ஃ

**சிந்தனேச்செல்வி, ஏழாலே மேற்கு.**

கே: அரசியலில் இனிமேல் ஈடுபட மாட்டேன் என்று பொது மக்களுக்கு உறுதி கூறி, அதைப் பாதுகாக்க முடியாதவர், தமிழினத்தின் பிரச்சினேயைத் தீர்க்கப் போகிறுராம். இதையும் தமிழினம் நம்பும் என்று நினேக்கிறுரா?

*ப: மக்களுக்கு மறதி அதிகம்-எதையும் நம்புவார்கள் என்பது அவர் எண்ணம்.*

---

*'கப்பலோட்டிய தமிழன்' திரைப் படத்தினேப் பார்த்தேனும் நாட்டுப் பற்றும், விடுதலே யுணர்வும் பெறுமாறு அடிமைத் தமிழனுக்கு ஆண்மைத் தமிழன் 'அடலேறு' எழுதிய அஞ்சல். —ஆ-ர்*

# சிதம்பரன் வழியில்..!

*''கவிஞர் அடலேறு''*


முந்தையோர் வாழ்ந்த வகையெலாம் மறந்து
மூண்டிடும் அடிமையின் மிடிக்குள்
சிந்தை நொந்துழலும் சிறுமதித் தனயா,
சிங்கமென்றெழுந்து நில்; துயராம்
கந்தையைத் தூர வீசிடு கணத்துள்
கனலெனக் காய்ந்திடும் சுதந்த்ர
மந்திரம் முழங்கு, மானமே காத்து,
மாளினும் பெருமையே மலியும்!

பண்டுள வீரம் எங்குதானுறுமோ,
பகைவருக் கஞ்சிடல் தகுமோ
குண்டுளவரையும் கொன்று நம்முயிரைக்
குருதியைக் குடித்திட முனேவோர்
கண்டு நின்றேங்கக் களத்திடைப் புகுவோம்
காயமோர் பொய்யடா, கனலாய்க்
கொண்டுவா, விடுதலே முரசினே யார்க்க
கொடியருக் குணர்த்துவம் வீரம்!

பார்த்தனேயோ நீ சிதம்பரனுரின்
படத்தினேப், பைந்தமிழ்ப் பண்பை
ஆர்த்தெழுந்திடடா, அலேகடல் முகட்டில்
அன்னேயின் மணிக்கொடி பொறித்த
போர்த்தொழிற் கப்பல் புறப்படச் செய்வோம்
பூதலம் நம் விரற் கடைக்குள்
கீர்த்தியே வேண்டும், அதற்கெது விலேயோ
கிடைத்திடுஞ் சிதம்பரன் வழியில்

கப்பலோட்டிய தமிழனின் மரபீர்
கவலேயும், அடிமையும் ஈங்கு
எப்பகற் போதும் இருக்குமென் றெண்ணும்
ஈனருக் கொன்றுரைத்திட வேண்டும்
"இத்தமிழ் நிலத்துள்ளவரெல் லாம்
ஏழையர் மனக் கோழையரல்லர்
சத்தியம் இது; தாய்த் தமிழாணே
சரித்திரம் புதிதாக்குவம் நானே!"



பணக்காரன் முதல் பாட்டாளி வரை
எல்லோரும் புகைப்பது
**கமலா பீடி**
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
**கமலா ஸ்டோர்ஸ்,**
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலேபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எல்லாம் தமிழியக்கம் அரசாங்கத்துக்கோ அல்லது வேறு எந்த அரசியல் கட்சிக்கோ விரோதமாக நடத்தப்படும் ஒரு இயக்கமல்ல. தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழியின் அவசியத்தை உணர்ந்து அந்த மொழியில் அவர்கள் செயலாற்றுவதற்கு ஏவுதலே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த முயற்சியில் நாம் வெற்றி பெறுவோம்.' என்று தமிழியக்க வாரத்தையொட்டி தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், திருக்கோணமலைப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.ந.இ. இராஜவரோதயம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

### மாற்றுக் கட்சிகளின் நிலை

திரு. இராஜவரோதயத்தின் கூற்று முற்றிலும் உண்மையானது. இதைச் சிலர் உணர்கிறார்களில்லை. தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக் கூடிய மாற்று அரசியல் கட்சிகள் ஏதாவது இன்றுவரை இந்த இயக்கத்தில் கலந்து கொண்டிருக்கின்றனவா? என்றால் இல்லை.

### வேடதாரிகள்

இவர்கள்எல்லாம் அடுத்த தேர்தல் எப்பொழுதுவரும் என்று எதிர்பார்த்திருப்பவர்கள். தேர்தல் வந்ததும் வரிந்து கட்டிக்கொண்டு முன்னுக்கு வந்துவிடுவார்கள் தாங்களே தமிழியக்கத்தின், தமிழ் மொழியின் இரட்சகர்கள் என்று.

### எது வகுப்புவாதம்?

தமிழ் பேசும் மக்களைப் பார்த்து உங்கள் கருமங்களைத் தமிழ் மொழியிலேயே செய்யுங்கள் என்று கூறுவது வகுப்புவாதமா? ஏன் திருமலையில் நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தையும் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

திருமலை மத்திய அஞ்சல் நிலையத்தின்முன் தமிழியக்கத் தொண்டர்கள் தமிழியக்கப் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுது, சிங்களச் சகோதரர் ஒருவர் ஆங்கில மொழியில் தந்தி ஒன்றை எழுதினார். அவரைத் தமிழியக்கத் தொண்டர்கள் பணிவாக வேண்டி அவரது தாய் மொழியாகிய சிங்களத்தில் அந்தத் தந்தியை அனுப்பச் செய்தார்கள்.

# தமிழியக்கம்

## "தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

### தமிழியக்கத்தின் நோக்கம்

இந்நிகழ்ச்சி எதைக் காட்டுகிறது? தமிழியக்கத்தினர் மொழி வெறி கொண்டவர்கள் அல்ல என்பதையும், விடுதலை பெற்ற நாடு என்று வீம்பு பேசிக்கொண்டு மேலும் ஆங்கில நாகரிகத்தின் அடிமைகளாக வாழ முயலும் மாற்றவர்களைப் போல் அல்ல நாங்கள் என்பதையும் இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

நமது இயக்கம் வகுப்புவாத நோக்கம் சிறிதேனும் உடையது என்றால்; திருமலை போன்ற இடங்களில் இதுவரையில் தமிழியக்கம் ஒரு வகுப்புக் கலவரத்தை உருவாக்கியிருக்க வேண்டுமே?

### தமிழியக்கத்தின் பலன்

நமது நோக்கம் புனிதமானது. தமிழியக்கத்தில் இரு புனிதமான நோக்கங்கள் அடங்கியுள்ளன. ஒன்று, இந்த இயக்கம் வெற்றிகரமாகச் செயல்படும்பொழுது வகுப்புவாத வெறி பிடித்த ஆட்சியாளரின் 'சிங்களம் மட்டும்' சட்டம் உடைத்தெறியப்படும். இதன்மூலம் தமிழ் மொழி அரியாசனத்தில் சரியாசனம் பெற வசதியையும் வாய்ப்பையும்பெறுகிறது. அடுத்து இந்த இயக்கத்தின் மூலம் நமது மக்களிடம் மண்டிக்கிடக்கும் வேற்று நாட்டு நாகரிகம், ஆங்கில மொழி மோகம் அனைத்தையும் களைந்தெறிய வசதியுண்டு. அதன் மூலம் நம் மக்கள் மத்தியில் அருகிவரும் நமது பழம்பெரும் நாகரிகம், கலாச்சாரப் பழக்கவழக்கங்களை மீண்டும் புத்துயிர்பெற்றுப் பொலிவுடன் திகழச் செய்ய முடியும். இதனால் நாம் எங்கு வாழ்ந்தாலும் தமிழன் என்ற நாமத்துடனும் பெருமையுடனும் வாழ வசதி யேற்படுகிறது.

இதனால் தமிழ்மொழியும், தமிழ் பேசும் மக்களும்உலக மக்கள் மத்தியில் பெருமை மிக்கவர்களாக வாழ முடியும்.

### புரியாமலில்லை

இவற்றையெல்லாம்தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மாற்றுக் கட்சி நண்பர்கள் புரியாமலில்லை. அப்படியானால் அவர்கள் ஏன் இன்று வரை இதில்கலந்துகொள்ளவில்லை என்ற கேள்வி எழுகிறது.

### அவர்கள் நோக்கு

'வீடு கட்ட மாட்டார்கள் ஆனால் கட்டிய வீட்டில் குறை கூறுவதில் சிலர் சமத்தர்கள்' என்று கூறும் முதுமொழியொன்று நம் மத்தியில் உண்டு.

இதே மனப்பான்மையுடைய சில அரசியல் வாதிகளும் உளர். இவர்கள்தான் அண்மையில் வாண வேடிக்கையுடன் மாநாடு கூட்டிய மாவீரர்கள். நமது காங்கிரஸ் தலைவரும் அவரது கோஷ்டியினரும், தனி நபர் வணக்கத்தில் தன்னிகரற்று விளங்கும் காங்கிரஸ் வாதிகளும், அவர்களின் தலைவரும், என்றும், எதையும் உருப்படியாகச் செய்ததுகிடையாது. ஆனால்நல்லதைச் செய்யும் யாரையும் நையாண்டிபண்ணவும் தவறமாட்டார்கள். இந்த அளவில், காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளாததின் உண்மை புலனாகியுள்ளது.

### இடதுசாரிகள் நிலை

அடுத்து- நம் மத்தியில் இருக்கக்கூடிய ஒரு சில சமசமாஜ, பொதுவுடமைவாதிகள், சுருங்கக்கூறின் நமது இடதுசாரி ஐக்கிய முன்னணித் தோழர்கள்.

இவர்கள் தமிழியக்கத்தில் கலந்துகொள்ள அவர்கள் தலைமைப்பீடம் இடம் கொடுக்காதே. காரணம் அவர்கள் மொழிச் சமத்துவம் என்று கூறிய நிகழ்ச்சி என்றோ மறைந்து மண்ணோடு மண்ணாகிவிட்டதே. அவர்கள் மொழிச் சமத்துவம் என்று கூறியது பழைய வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது. எனவே அவர்கள் எப்படி தமிழியக்கத்தில் கலந்து கொள்வது? அப்படியாயின் எசமானனின் ஏச்சுக்கும், எரிச்சலுக்கும் ஆளாகவேண்டுமே. நம் மத்தியில் இருக்கக்கூடிய இடதுசாரிக் கட்சியினர் மனச்சாட்சியை அங்கே தலைவர்களிடம் அடைவுவைத்துவிட்டு வாழ்பவர்களாச்சே!

### பரந்த நோக்கு

எனவே நாம் எப்படி அவர்களை எங்கள் இயக்கத்தில் சேருவார்கள் என்று எதிர்பார்ப்பது? வேண்டுமானால் தேசியம் என்ற போர்வையில் அவர்கள் ஆங்கிலத்திலோ அல்லது சிங்களத்திலோ கூடத் தங்கள் கருமங்களைச் செய்ய துணிவார்கள்.

### வெற்றி நமதே

தமிழ் பேசும் மக்களுக்கு தமிழியக்கம் கூறக் கூடியது இதுவேதான். 'நமது கடமையை நாம் செய்வோம், புனித நோக்குடன் செய்வோம், வெற்றி நம்மை நாடி வரும்!'

# சந்தித்து வந்தவை

காலைக்கண்டன்

## ஸ்ரீ லங்கா கிழிந்த சாக்குக் கோப்பரேஷன்

பழைய சாக்கு, போத்தல், பேப்பர்முதலியவற்றை வாங்கி விற்கும் வியாபாரம் இந்தியர்களதும், மலை நாட்டுத் தமிழர்களினதும் கைகளில் உள்ள தெனவும், அதனை இலங்கையர் மயமாக்க வேண்டு மெனவும், அதற்காக ஒரு பழஞ் சாக்குக் கோப்பரேஷனை ஏற்படுத்த வேண்டுமெனவும் கறுப்புக் கொடிக்குப் பயந்த மந்திரி கூறியதாகக் கேள்விப்பட்டநான், இதுபற்றி அம்மானுடைய ஆலோசனையை நாடினேன். அதற்கு அம்மான் தெரிவித்த புத்திமதிகள்:

கூட்டுத்தாபனத்தின் பெயர்:- ஸ்ரீலங்கா கிழிந்த சாக்குக் கோப்பரேஷன்.

தலைவர்:- பிரதமரின், அல்லது மந்திரி ஒருவரின் உறவினர். சிங்களவராக இருக்க வேண்டும். கைலஞ்சம் வாங்கும் குணம் வரவேற்கத் தக்கது.

உப தலைவர்:- செனட்டர். சுப்பையா நடேசபிள்ளை. இவரும் இந்தியர் என்றால், திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி.

ஊழியர்கள்:- எக் குற்றம் செய்து என்னவித தண்டனையாகிலும் பெற்றிருக்கலாம், ஆனால் அரசாங்க பக்கமுள்ள ஆளாக இருந்தால் போதும்.

திறப்பு விழா:— பிரதமர் சிறிமாவோ, தனது பிள்ளைகள், தாயாரின் நேசனுக்கனைய்த் தின்று முடித்த சொக்லேட் ஈயங்களை மந்திரி இலங்கரத்தினவுக்கு விற்பார்.

விற்கப்பட்ட சொக்லேட் ஈயப் பொட்டலம் தாபனத்தின் ஸ்டோரில் போடப்படும். மறுநாள் அது மறைந்துவிடும்.

மூன்று மாதங்களின் பின் இச் செய்தி வெளியாகி சொக்லேட் ஈயம் மறைந்த மாயத்தை விசாரிக்க உயர் ... அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்படும்.

விசாரணைக் குழு மூன்று மாத விசாரணையின் பின் எலிகள் பழஞ்சாக்குடன் சொக்லேட் ஈயத்தையும் தின்றுவிட்டதாக அறிக்கை சமர்ப்பிக்கும்.

ஸ்டோரினுள் எலிகளை ஏவி எம் சிங்கள நாட்டை இந்திய தூதுவராலயம் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்கிறதாக டெல்லிக்கு முறைப்பாடு செய்ய வேண்டுமென்று திரு. ராஜரத்தினக் கோனர் அறிக்கை வெளியிடுவார்.

இது அமெரிக்காவின் சதி என்த் திரு.பீட்டர்கெனமன் அறிக்கை விட, மொஸ்கோ வானொலி அதனை ஒலிபரப்பும்.

பிற்போக்கு சக்திகளான எலிகளின் திட்டமிடப்பட்ட நாச வேலை காரணமாக ஸ்ரீலங்கா கிழிந்த சாக்குக் கோப்பரேஷன் 15 லட்ச ரூபா நட்டமடைந்துள்ளது என்று வருடாந்த அறிக்கை கூறும்.

(உண்மையில் நட்டத்திற்குக் காரணம் மந்திரியின் இனத்தவரான பெரும் பெருச்சாளி என்பது மூடி மறைக்கப்படும்.)

## திருக்கோணேசர் பெயரில் திருட்டா?

திருக்கோணேசுவரக் கோவிலின் கும்பாபிஷேகத்திற்காக நிதி வசூல் செய்வதற்கு, ஆலய பரிபாலனக் குழுவினரால், நிதி வசூல் செய்யும் பத்திரங்களுக்குக் கையொப்பமிடுவதற்கு, பொருளாளர் திரு. சி. ஆறுமுகநாதனுக்கு மாத்திரம்தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

அவருடைய கையொப்பமில்லாமல், அரசாங்கத்திற்குக் காவடி தூக்கும் இரண்டு பிரமுகர்கள் ஏறக்குறைய ரூபா 7000/= வரையில் வசூல் செய்தது உண்மையா? அந்தப் பணத்திற்கு இதுவரையில் கணக்குக் காட்ட வில்லையென்பது உண்மையா? இவர்களில் ஒருவர் அரசியல் வாதியா? இவர் கள்ளக் கடத்தலில் அகப்பட்டு ஆயிரக் கணக்கான ரூபா குற்றம் செலுத்தியதும் உண்மையா? மற்றவர் மூதூர் தொகுதியில் 1960, 62-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஒரு வழக்கறிஞரையும் ஒரு முன்னாள் அமைச்சரையும் தூண்டிவிட்டு, பின்பு அவர்களுடைய கால்களை வாரிவிட்டது உண்மையா? இவர் அரசாங்கத்தில் முக்கிய பதவி வகிக்கும் ஒருவரா? என்ன விதப்பட்டும் கோணேசர் ஆலயத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்வது உண்மையா? அரசாங்க பணியிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற ஓர் உயர்தர அதிகாரியையும் தங்கள் சூழ்ச்சிக் குழுவுக்குள் இழுப்பதற்கு முயற்சித்தது உண்மையா? அண்டிக் கெடுக்கும் இவர்களுக்குத் திடீரெனச் சமய பக்தி ஏற்பட்டதன் நோக்கமென்ன?

தமிழரின் தலை நகராம் திருமலையில் திக்கெட்டும் காட்சியளிக்கும் கோணேசரின் பெயரைப் பகுதிகளாகப் பயன்படுத்தச் சில சுயநலமிகள் முற்பட்டிருப்பதேன்?

திருகோணமலை மக்களே! சிந்தியுங்கள்! சிந்தித்து உண்மையை அறிந்து செயலாற்றுங்கள்.


கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்
14, டாம் வீதி, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 21-4-63 ந் திகதி இக்பால் தினம். அதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.

# மகா கவி அல்லாமா இக்பால்

## இந்திய இலக்கியச் சோலையில் என்றும் மணம் வீசும் மலர்

—ஐ. செய்யது ஏ. மௌலான—

நாடு நலம் பெற நல்லதோர் அரசியல் ஞானி தோன்றுவான். மக்கள் மத்தியில் மறுமலர்ச்சி மலர்ந்து மணம் வீச, எழுத்து வேந்தனும், சொல்லின் செல்வனும் உருவாகுவர். வையகம் வாடி வதங்காது, வளமுற்று மிளிர சிறந்ததொரு சிந்தனைச் சிற்பி உதயமாவான். புத்துலகு மாந்தர்க்கு புதுமையைப்புகுத்தி-புத்துணர்ச்சியூட்ட ஒரு புரட்சிக் கவி உதிப்பான். ஆனல் இவை யாவுங்கலந்த ஒரேயொரு மொத்த உருவமாக மகா கவி டாக்டர் ஸர் அல்லாமா இக்பால் விளங்கினர் எனக் கொண்டால் அது மிகையாகாது.

### இளமையும் இக்பாலும்

பாரத நாட்டின் பஞ்சாப் பகுதியான ஷியால்கோட்டை எனும் இடத்தில் ஷேக் மூஹம்மது அவர்களின் இளைய புதல்வனக 1873ல் இக்பால் பிறந்தார். பிறந்த பொன்னுட்டிலே கற்பவை கற்றுத் தேறி லாகூர் சென்று, எம்.ஏ. பட்டத்தை தனதாக்கிக் கொண்டார். 1905ல் மேற்படிப்புக்காக மேல்நாடு சென்றவர் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை மாணவராயிருந்து ஈராண்டில் பி. எச். டி. பட்டத்தையும் பெற்ருர். இது வேளையில் அவர் ஆராய்ச்சித் திறனல் ஆக்கப்பட்ட 'பாரசீகத்தில் தத்துவ சாஸ்த்திர வளர்ச்சி' என்ற நூலை ஆங்கில பரிபாஷையில் எழுதினர். இந்நூல் ஜேர்மனி மூனிச் சர்வகலாசாலையில் சமர்ப்பிக்கப்பட்டு இக்பால் அவர்களுக்கு 'டாக்டர்' என்ற கௌரவப் பட்டமும் நல்கப் பட்டது. லண்டனில் பாரிஸ்டர் பட்டமும் பெற்ருர்.

### இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு

முகலாய மன்னர் ஆட்சியின் பின் இந்தியாவில் உர்துக் கவிதை தன் உன்னத நிலையிலிருந்து வீழ்வடைந்திருந்தது.

அவ்வமயம் எத்தனையோ உர்துக் கலைஞர்களிருந்தும் உர்துக் கவிதை தன் பழைய நிலையை எட்டிப்பிடியாது ஏங்கி நின்றது. அன்று வாழ்ந்த ஹாலி, ஆஜாத், சிப்லி ஆகிய பிற பெரும் புகழெய்திய கவிஞர்கள் உயர்வடைவதற்கு உறுதுணை புரிந்தும் கட்டியும், கட்டாத கட்டிடம் போலக் காட்சியளித்தது. இந்நிலையை இக்பால் அவர்கள் அறுத்தெறிந்து, அரிய ஆழ்ந்த கருத்துச் செறிவுள்ள கவிதைகள் இயற்றி அதன் உரிய ஆசனத்துக் கப்பாலும் ஓரிடத்தைத் தேடிக் கொடுத்துப் பா வல்லுனர் என்ற பரிசையும் ஈட்டினர். உர்து இலக்கியத் துறையில் கவிஞரின் புதுமையும்-புரட்சியும் புதிய அத்தியாயம் ஒன்றையும் அண்ட வைத்தது என்பது கண்கூடு.

கவிஞர் இக்பால் எல்லோருக்கும் தேவையான இயற்கை-மதம்-அரசியல் - பொருளாதாரம் அனைத்தையும் தம் கற்பனை ஊற்றிலிருந்து வடித் தெடுத்துத் தந்தார். கவியாகவும்—தத்துவஞானியாகவும் மிளிர்ந்து அன்றைய—இன்றைய மக்கள் மனத்திரையில் எந்நாளும் நிழலாடும் நிலையைப் பெற்ருர். அவர் கருத்தும்-கொள்கையும் பல கலாசாலைகளிலும்-அறிஞர் சபைகளிலும்-சற்றேனும் பிறழாது அதி உன்னத நிலை பெற்றுப் பத்திரிகை—புத்தகங்கள் — பல்கலைக் கழகப் பாடத் திட்டங்கள் பலவற்றிலும் பாங்கான பகுதியைப் பற்றிக் கொண்டது. இக்பால் இசைத்த தேசிய கீதங்கள், சோர்ந்த சமூகத்துக்குச் சுறு சுறுப்பூட்டும் வீரத் தாகம் விஞ்சித் திளைத்த கவிதைகள், நாடெங்கும் முழங்கின; முன்னின்று பலராலும் போற்றப்பட்டு புகழ்மாலை அணிவித்து கௌரவிக்கப் படுகின்றன.

### அல்லாமா கண்ட அரசியல்

அரசாங்கம் ஒரு சூன்யக் கலை.

ஆளும் வர்க்கத்தாரால் அது பயிலப் படுகிறது.

ஆளப்படுபவர்களும்- தூங்கிக்கிடப்பவர்களும் விழித்தெழும்போது,

ஆளும் சூன்யக் காரர்கள் மீண்டும் அவர்களை

அறியாமை எனும் உறக்கத்தில் ஆழ்த்தி விடுகின்றனர்.

ஆனல் நசுக்கப் படுபவர்கள்

என்றுமே தூங்கிக் கொண்டிருப்பதில்லை.

சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டல்லாது, உலக சகோதரத்துவமே அரசியல் அமைப்பு. மனித சமூகமனைத்தும் ஓர் குடும்பமாக வேண்டும். சகோதரத்துவம் என்ற ஒரு மதமே அவ்வரசியல் ஆட்சிபீடத்தில் அமர்ந்து அரசோச்ச வேண்டும் என்று சமமான-சமத்துவமான சுபீட்ச சுக வாழ்வு அரசியலமைப்பை அறிவுறுத்தினர். அல்லாமாவின் அற்புத சிருஷ்டிகள் அனைத்தும் துருக்கி-ஜெர்மன்- ஆங்கிலம் -ருஷிய மொழிகளில் உலகமெல்லாம் ஊர்ஜிதப் படுத்தப் பட்டது.

### மகா கவியும் தத்துவ ஞானியும்

கலையின் உண்மையான குறிக்கோள் வாழ்க்கையை வனப்பு மிக்கதாகத் திகழச் செய்வதே. இது தான் ஒரு உண்மையான கவிஞனின் இலட்சியமும்... தலையாய கொள்கையுமாகத் திகழ வேண்டும் எனக் கூறுகிருர் மகா கவி இக்பால். இக்பால் தமது பாணியில்,

'கலையின் லட்சியம்

அமரத்துவ வாழ்க்கையின் நெருப்பாக விளங்குவதுதான்;

ஒரு பொறியைப் போலெழுந்து சட்டென மறையும்

இந்த நிலையற்றமூச்சன்று'

'ஹே வசந்தத் தூற்றலே

அவர்கள் ஆற்றின் இதயத்தை

கொந்தளிப்புக்குள் அகப்படுத்தவில்லையானல்

சிப்பியும்—முத்தும்-இரண்டுமே பயனற்றவையே'.

வளர் மதி போன்ற பிரகாச ஒளியுடன் வளர்ந்தோங்கி வந்த கவி, தான் ஒரு கவிஞன் என்று கூறவிரும்பாதவர். உவகையான உலக ஆசையில் உளம் ஊன்ருத நாடோடியாக— பக்கிராக—தர்வேஷாக—கலந்தராக வாழ்ந்து வந்தார். இவரது தத்துவங்களும் கவிதைகளும் உலகம் உய்ய—மனித சமூகம் மகோன்னத நிலையை அடைய, வழிவகுத்தன. இதோ மகா கவி இக்பால் மனிதனை ஒரு மலருக்கும் அவன் வாழ்க்கையை ஒரு முள்ளுக்கும் உதாரணம் காட்டித் தமது கற்பனைக் கோட்டத்தைக் காட்டுவதோடு வாழ்வின் விளக்கத்தையும் விவரிக்கிருர்:

"இனிய மலரின் ஆடையிலே,
வேதனை தரும் முள்ளும்
இருக்கிறது,
அது முள்ளானுலும் மலரின்
கூட்டாளி,
அதன் வெறிபிடித்த
காதலன்
காதலியோடு ஒன்றி நிற்கும்
அதன்
உற்பத்திக்கு வசந்தமே
காரணம்"

### இக்பால் புகழ்

1926ல் அல்லாமா அவர்கள் அரசியல் ஒரு கபட நாடகம் என்று தெரிந்த போதும்—அதை அன்பர்கள் அன்புக்குப் பாத்திரமான தாக்க, மக்கள் கொள்ளாத ஆசைக்கும் ஆறுதலளிக்க, பஞ்சாப் சட்டசபையில் அங்கம் வகித்தார். ஆட்சியாளர் தகுதியின்மையைக் கண்டு அவற்றை உடைத்தெறியஆயவை ஆற்றினர். ஆளும் வர்க்கத்துக்கு ஆட்சி புரியும் வித்தையை தெளிவு படுத்தினர். அப்பவும் திருந்தாத வேளை இதோ மக்களுக்கு நிலையை விளக்கி உணர்ச்சித் தாகத்தை ஊட்டுகிருர்.

"மனிதன் நாய்ப் பிறவியை
விடக்,
கடையனுகி விட்டான்,
ஒரு நாய் இன்னெரு நாய்க்கு
அடிபணிவதை நான்
கண்டதில்லை"

இப்படியாக இந்தியர் அடிமை வாழ்க்கையைப் போக்கப் புத்துணர்ச்சியூட்டி விட்டுப் புரியாத மக்கள் இனத்துக்கு இப்படிக் கூறுகிருர்:

'ஹே சிந்தையற்றவனே, உன் நாட்டை எண்ணிப் பார்!

மேலே, உன்னை அழிக்கச் சதி நடக்கிறது,

நடப்பதையும் நடக்க விருப்பதையும் பார்!

வெறும் பழங்கதை பேசுவதில் என்ன விருக்கிறது?

இதை உணரா விட்டால்,

இந்திய மக்களாகிய நீங்கள் அழிந்து பட்டுவிடுவீர்கள்;

(13-ம் பக்கம் பார்க்க)




# மெத்தச் சிறந்த தமிழ் இயக்கம் அரசாங்கத்தின் சித்தம் கலக்கி விட்டது

## அரட்டை அடிப்பது முதல் அரசாங்கக் காரியம் வரை தமிழிலேயே செய்வோம்

ஞா. பெ. அல்பிறட்

வட, கிழ் மாகாணங்களிலே 'எல்லாம் தமிழியக்கம்' மடை திறந்த வெள்ளம் போல், கரை புரண்டோடிக் கொண்டிருக்கின்றது. தமிழராய்ப் பிறந்த அனைவரதும் இதயங்களிலே உதயமாகி ஒளி வீசத் தொடங்கி விட்டது, எல்லாம் தமிழ்ப் பற்று. படித்தவர்—பாமரர், சிறியோர்—பெரியோர், இளையோர்—முதியோர், கன்னியர்—காளையர், வாலிபர்—வயோதிபர் யாவரது சிந்தையிலும் 'நாம் தமிழர்' என்ற புத்துணர்வையூட்டிச் சிங்கள அரசாங்கத்தைச் சித்தங்கலங்கச் செய்துவிட்டது, மெத்தச் சிறந்த இவ் 'எல்லாம் தமிழியக்கம்.'

தமிழுக்குச் சம உரிமை கோரும் நாம், தமிழில் காரியங்களையாற்றுவதற்குத் தயங்குவோமேயானல் நமது கோரிக்கைக்கே அர்த்தம் இல்லாமற் போய் விடுமல்லவா? நம் தாய் மொழியின் தலைவிதியானது நம்மிலேயே தங்கியுள்ளது என்பதை நாம் மறக்க வேண்டாம். நமது மொழியை வளர்க்கவோ அன்றி அழிக்கவோ நம்மாற்றான் முடியுமே தவிரப் பிறரால் முடியாது.

நமது அன்னை மொழிக்கு-தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு-நாம் கொடுக்கும் மதிப்பைக் கணித்துத்தான், பிறரும் மரியாதை செலுத்

(12 ம் பக்கம் பார்க்க)

### மே தினக் கூட்டம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் மே 1-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு அட்டன் நகரில் கழகத் தலைவர் திரு. இ. மு. வி. நாகநாதன் அவர்களின் தலைமையின் கீழ் மே தினக் கூட்டம் நடைபெறும்.

மலையகத்தில் கழகத்தின் சார்பில் அட்டனில் மட்டுமே மே தினக் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்திற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு.சா.ஜே.வே. செல்வநாயகம் உட்பட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரமுகர்களும் இக் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

கைவசமுள்ளது

மிகக் குறைந்த விலையில்
ருமேனியன் சிமிந்தி
(B. S. S. 1958க்கு சமதையானது)
திருகோணமலையிலுள்ள பண்டகசாலையிலிருந்து டெலிவரி கொடுக்கப்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட
அஸ்பெஸ்டஸ் தகடுகள்
(சாதாரணத் தகடுகளும், நெளிவுத் தகடுகளும்)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட
முட்கம்பிகள் 14 G

மற்றும்:-
எஸ்லாண்டர் செய்கை முறையுடன்; பூரண செம்புத்தகடு இணைக்கப்பெற்ற புத்தம் புதிய
மீன்பிடிப் படகுகள்
விலை ரூ. 8000/-
"கோல்டெக்ஸ்-10"
(கையால் இயக்கும் கணக்கிடும் கருவிகள்)
மற்றும் விபரங்களுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்:-
ஜபர்ஜி பிரதர்ஸ்,
161, குமார வீதி, கொழும்பு-11.
தொலைபேசி : 78501.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் தமிழ் இயக்கம் நாடெங்கும் பரவி வருகிறது

## கிராமங்கள் தோறும் விஸ்தரிப்பு

எட்டாம் திகதி ஆரம்பமான எல்லாம் தமிழியக்கம் நாடெங்கும் நல்ல முறையில் பரவிவருகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களும், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களும், வாலிப முன்னணி முக்கியஸ்தர்கள், மாதர் முன்னணியினரும் தினம் தினம் அஞ்சல் நிலையங்களின் முன் நின்று பொது மக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறார்கள்.

கடந்த 11ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய அஞ்சல் நிலையத்தின் முன் தமிழரசு மாதர் முன்னணிப் பொதுச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் மாதர் குழு ஒன்று பொது மக்களுக்கு உதவியாகவும், அவர்களைத் தமிழ் மொழியிலே கருமம் ஆற்றும்படியும் வேண்டினார்கள்.



திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

### தமிழரசுத் தந்தை தலைமையில்

இதற்கு முந்திய தினம் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் மத்திய அஞ்சல் நிலையத்தின் முன்னின்று அங்கு வந்தவர்களிடம் தங்கள் கருமங்களைத் தமிழில் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். தினம் தினம் தமிழியக்கத் தொண்டர்கள் யாழ்ப்பாணம் மத்திய அஞ்சல் நிலையத்தின் முன் நின்று தமிழியக்கப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்களாம்.

தமிழியக்கம் இப்பொழுது பல்வேறு தொகுதிகளிலும் பரவி விட்டது. இப்பொழுது கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கப் பட்டு வருகிறது.



திரு. வி. ஏ. கந்தையா

### ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை அஞ்சல் நிலையத்தில், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா அவர்களால் எல்லாம் தமிழியக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பழுதடைந்த நிலையில் உள்ள அம்புலன்ஸ் யந்திரப்படகை திருத்தி விரைவில் அனுப்பி வைக்கும்படி சுகாதார அதிபரைக் கோரும் தந்தியைத் தமிழில் அனுப்பி வைத்து இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார் திரு. வி. ஏ. கந்தையா.

இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மன்னருக்கு ஒரு தந்தியை ஆங்கிலத்தில் அனுப்ப வந்த ஒருவர் தொண்டர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப தானே தமிழில் எழுதி அனுப்பி வைத்துள்ளார் என்றும் நமது நிருபர் அறிவித்துள்ளார்.

### வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டைத் தொகுதியில் பெரும்பான்மையான உப அஞ்சல் நிலையங்கள் முன் தொண்டர்கள் நின்று பொது மக்களைத் தமிழில் கருமமாற்றும் வண்ணம், ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறார்களாம்.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கமும், தமிழரசு மாதர் முன்னணிச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசியும் சகல அஞ்சல் நிலையங்களுக்கும் சென்று தொண்டர்களுக்கு உற்சாகமளித்தும், பொது மக்களைத் தமிழில் கருமம் ஆற்றும் வண்ணம் உற்சாகப்படுத்தியும் வருகிறார்களாம் என்று திரு. சி. முத்தையா அறிவித்துள்ளார்.




திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்

### காங்கேசன்துறை

காங்கேசன்துறையில் தமிழரசுக் கட்சிக் கிளைத் தலைவர் திரு. தெட்சணாமூர்த்தி தலைமையில் எல்லாம் தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'சிங்கள மக்களுக்கு ஈழத்து மண்ணில் எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை தமிழினத்துக்கும் உண்டு. தமிழ் பேசுமினம் சிங்களச் சகோதரருடன் சம உரிமை பெற்று வாழ வழி வகுப்பீர்களாக' என்று கூறும் தமிழ்த் தந்தியைப் பிரதமருக்கு திரு. ஆ. தெட்சணாமூர்த்தி அனுப்பி வைத்து எல்லாம் தமிழியக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

பல தொண்டர்களும், இளைஞர்களும் உற்சாகமாக



திரு. அ. அமிர்தலிங்கம்

தமிழியக்கப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக நமது காங்கேசன் துறை நிருபர் அறிவித்துள்ளார்.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள சகல அரசினர் திணைக்களங்கள் முன்னும் தொண்டர்கள் நின்று பொது மக்களைத் தமிழ் மொழியில் செயலாற்றும் வண்ணம் வேண்டியிருக்கிறார்கள் என்றும் அறியப் படுகிறது.

### பருத்தித்துறை

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள எட்டு உப அஞ்சல் நிலையங்களிலும், கலால் காரியாலயத்தின் முன்பும் தமிழியக்கத் தொண்டர்கள் தமிழியக்கப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சாவகச்சேரி

சாவகச்சேரியிலுள்ள கொடிகாமம் என்னும் கிராமத்தில் 'தேன் தமிழ் மன்ற' உறுப்பினர்களே எல்லாம் தமிழியக்க நடவடிக்கைகளை கவனித்து வருகிறார்கள் என்று திரு. சிறீமுருகன் அறிவித்துள்ளார்.

# மக்களுக்கு உதவாத மக்கள் வங்கியா?

## காங்கேசன்துறைக் கிளை பற்றிப் புகார்

காங்கேசந்துறை மக்கள் வங்கிக் கிளை செயலாற்றும் முறை முற்றிலும் திருப்திகரமற்ற தெனவும், கடன் வழங்குவதில் அக்கிளைக்கு உண்மையிலேயே அக்கறையில்லையெனவும் புகார் கூறி, கிளை மனேஜருக்குத் திரு. ஸ்ரீ பாஸ்கரன் கடிதமொன்று அனுப்பியுள்ளார். இவர் முன்னாள் மயிலிட்டிக் கிராம சங்கத் தலைவராவார். தான் கடன் கோரி விண்ணப்பம் அனுப்பி மூன்று வாரங்களுக்கு மேலாகியும், அது பற்றி வங்கிக்கிளை எதுவித அக்கறையும் எடுத்ததாகத் தெரியவில்லை யென்று அக் கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ள திரு. பாஸ்கரன் காரணமில்லாமல் தன்னைப் பல தடவை படியேற வைத்தும், கடைசியில் கடனை வழங்கவும் வங்கிக் கிளை தயங்குவது தனக்கு ஆச்சரியமாக விருக்கிற தென்று குறிப்பிட்டுள்ளார்.

படித்த தமக்கே, மக்கள் வங்கியிலிருந்து கடன் பெற இவ்வளவு கஷ்டமெனில், பாமர மக்கள், விவசாயிகளின் கதியைச் சொல்லவும் வேண்டுமா? என்று அவர் அக் கடிதத்தில் கேட்டுள்ளார்.

தெற்கிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நிலைமை இங்குள்ள மாதிரி இல்லையெனவும், அங்கெல்லாம் அவர்கள் உடனுக்குடன் கடன் வழங்கி உதவுகிறார்களெனவும் கூறும் திரு. பாஸ்கரன், காங்கேசந்துறைக் கிளையில் மாத்திரம் ஏன் இந்த நிலைமை என வினவியுள்ளார்.

காங்கேசன்துறையில் மக்கள் வங்கிக் கிளையொன்று அமைக்கப்பட வேண்டும் என்று கோரிய [illegible] ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

# மானத்தை இழந்து வாழும் மனித ஜடமல்லத் தமிழன்!

## பண்டா சர்க்காருக்கு இதை அறிய வைப்பார் திரு. செல்வநாயகம்

## மாலைமணியின் கருத்து

மொழியை இழந்து, உரிமைகளை இழந்து வெறும் மனிதஜடமாய் வாழ்வதை விட, மொழியைக் காக்கும் போரிலே மடிவதைத் தமிழன் பெருமையாகக் கருதுவான்! மானத்தை இழந்து வாழும் மனித ஜென்மத்திலே தமிழன் பிறக்கவில்லை என்பதை பண்டா சர்க்கார் அறியும் வாய்ப்பை நிச்சயமாகப் பெறும் என்றே நினைக்கிறோம்.

இலங்கைத் தமிழ்ப் பெரியார் திரு. செல்வநாயகத்தின் வைர நெஞ்சம், தளராத உறுதி வெற்றியைத் தேடித் தரும், சிங்கள வெறியர்களைப் பணிய வைக்கும் என்பதில் எங்களுக்குத் துளியும் சந்தேகமில்லை.

இவ்வாறு தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் மாலை மணி என்னும் அரசியல் வார ஏடு அதன் 7-4-63 இதழ் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் அந்தத் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

சிங்களத்தை ஆட்சி மொழியாக்க இலங்கை சர்க்கார் முடிவு எடுத்துவிட்டது!

இந்தக் கொடுமையான முடிவை எதிர்த்து ஈழத்திலுள்ள தமிழர்களும் போர் முரசம் கொட்டத் துவங்கி விட்டார்கள்!

போராடி அலுத்து விட்ட நிலையில் இன்றைய ஈழத் தமிழர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தூரம் அவர்கள் அறவழிச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் அவர்கள் சென்று பார்த்துவிட்டார்கள். இப்போதும் அவர்கள் மறவழி செல்லவில்லை! ஜனநாயகத்திற்கு உட்பட்ட ஒரு கிளர்ச்சியையே ஆரம்பித்திருக்கிறார்கள்!

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்தப் போராட்டமே இறுதிப் போராட்டமாக இருக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தமட்டில் இதுதான் வாழ்வுப் பிரச்சினை என்பதை அவர்கள் மறந்துவிட மாட்டார்கள்! இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் தோல்வியடைந்துவிட்டால், தமிழ் இனமே இலங்கையில் பூண்டோடு அழிந்துவிடும்! அடுத்து எத்தனை தலைமுறைகள் அழிந்தாலும் அவர்களுக்கு வாழ்வும் கிடைக்காது!

எனவே இலங்கைத் தமிழர்கள் தங்களைத் தானே அர்ப்பணித்துக் கொண்டு இந்த இறுதிப் போராட்டத்தில் இறங்க வேண்டும்!

இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றி பன்னிப் பன்னி நாம் பல முறை எழுதி விட்டோம்! எல்லாம் செவிடன் காதில் ஒலித்த சங்காகவே முடிந்துவிட்டது!

இலங்கையில் திருமதி பண்டா செய்திடும் கொடுமைகளைப் பற்றி பண்டிதரோ, பச்சைத் தமிழரோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை! மொழிப் பாசம்கூட இல்லாமல் இது வெளிநாட்டு விவகாரம் என்று எல்லோரும் ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர்!

எல்லோருமே கைவிட்ட பின்பு தமிழர்களின் கதி தான் என்ன!

(13-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

# கவிதை நெஞ்சம்

யூ. எல். தாவூத்

இயல் 3

பாரஸீகக் கோனணியின் திறனை நாட்டும்
பாவமைத்து மாகாவியஞ் செய்த வித்தால்
பாரேற்றும் பேறுடை பிர்தவ் ஸின்
பாவுக்கு ஆயிரம்பொன் பரிசி லென்று
நேரிய உளத்தோ டறைந்தான் மன்னன்
நிலைக்கவே இல்லையது; அவனின் வாக்கை
வேரோடு சாய்த்திட்டான் மய்மன் தினென்
வேந்தனின் நிதியினைக் காத்து நிற்போன்.

மன்னனி னுறுதியைக் கேட்ட அவனும்
மருண்டிட்டான்; பரிசிலே ஓரா யிரம்
பொன்னனெத் திகைத்தா னுளமு றைந்த
பொறுமையால் சாற்றிட்டான், அரசை யனுகி
மன்னரே! ஆயிரம்பொன் பரிசி லாக
வழங்கவே தகாதவன் பாட லாஞல்
பொன்னல்லவெள்ளியினை அள்ளிப்போமென்று
புகன்றிட்டா னண்ணலு மஃதை ஏற்றுன்.

வஞ்சனையே உருவான மய்மன் தினும்
வார்த்தையால் கவிஞரைத் தூற்றி நின்று
நஞ்சனைய விதிகாட்டி; கவிஞ ருக்கு
நற்பரிசில் பொன்னென்று வேந்து ரைத்த
நெஞ்சினையே மாற்றிட்டான், மன்னர் மஹ்மூத்
நெறியினைப் பிறழ்ந்திட்டார்; வாக்கு மாறி
வஞ்சனையில் சிக்குண்டார், பரிசி லாக
வழங்கவே வெள்ளியை அனுப்பி விட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டப்ளின் நகரையே நிர்மூலமாக்கும்படி பட்டாளத்திற்கு உத்தரவு

### அரங்கம் 21

ஈஸ்ரர் வாரத்தில் தொண்டர்கள் ஆயுதங்களுடன் அணிவகுத்து நிற்கப்படாது என்று தொண்டர் படை முதல்வர் கட்டளையொன்று இட்டிருந்தபடியால் நாட்டுப் புறங்களில் இருந்த தொண்டர்கள் புரட்சியை எதிர்பார்க்க வேயில்லை. ஆனால் புரட்சிச் சபையினர் குறிப்பிட்டபடி டப்ளினில் புரட்சி ஆரம்பமாகிவிட்டது. இதைப் பற்றிய பலவித வதந்திகள் தான் நாட்டுப் புறங்களிலிருந்த தொண்டர்களுக்கு எட்டின. அதனால் அவர்கள் மனக் குழப்பம் அடைந்து என்ன செய்வதெனத் தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்தனர். சேனுபதி

ரும் டப்ளினுக்கு வந்து விட்டதால், வியாழக்கிழமை போர் மும்முரமாக நடைபெற்றது. புரட்சிச் சபையின் மூளை என வர்ணிக்கப் படுபவரும் பிடிவாதக்காரருமான தளகத்தர் ஜேம்ஸ் கொனேலியின் கால்,படைத் துப்பாக்கிகளின் சன்னங்களுக்கு இரண்டு தடவைகள் இலக்காயிற்று. எனினும் சிகிச்சை பெறுவதற்காக மருத்துவ மனைக்குச் செல்ல அவர் மறுத்துவிட்டார். படுகாயம் அடைந்திருந்தும் புரட்சியை வெற்றிகரமாக நடாத்தியே தீர வேண்டும் என்பதற்காகக் கொனேலி, தன்னை வேண்

ருட்படுத்தாது நாட்டின் விடுதலைக்காகப் பம்பரம் போல் சுழன்று கொண்டிருந்தார் கொனேலி.

### அரங்கம் 22

#### அஞ்சல் அலுவலகத்தில் நெருப்பு

வெள்ளிக்கிழமை காலையில் இங்கிலாந்திலிருந்து ஜெனரல் சேர் ஜோண் மக்ஸ்வெல் அயர்நாட்டிற்கு வந்து சேர்ந்தார். டப்ளின் நகரையே நாசமாக்கும்படி இராணுவத்தினருக்கு உத்தரவிட்டார். அவர்கள் அஞ்சல் அலுவலகத்தை நோக்கி மூர்க்கத்தனமாகச் சுட்டார்கள். அதன் மேல்மாடி நெருப்புப் பிடிக்கத் தொடங்கியது.

கடைசி வரை இருந்த மூன்று பெண்கள் உட்பட, எல்லாத் தொண்டர்களும் ஒவ்வொருவராக ஹென்றி வீதியைக் கடந்தனர். கொனேலி காவு படுக்கையொன்றில் கொண்டு செல்லப்பட்டார். அனைவருக்கும் பின் கடந்தவர் சேனுபதி பியேஸ்.

மூஅர் வீதியில் ஆங்கிலேய இராணுவத்தினரின் சன்னமாரி பொழிந்து கொண்டிருந்தது. மோட்டார் வான் ஒன்றை அந்த வீதிக்குக் குறுக்கே இழுத்துப் போட்டு விட்டுத் தொண்டர்கள், ஒவ்வொருவராக வீதியின் மூலையிலிருந்த வீட்டை அடைந்

சரணுகதி

காயப்பட்டிருந்த தளகத்தர் கொனேலியின் படுக்கையருகில் தலைவர்கள் நாட்டு நிலையை ஆராய்வதற்காகக் கூடினர். மக்களுக்கு மேற்கொண்டும் இராணுவத்தினர் இன்னல்கள் விளைவிக்காமல் இருக்கும் பொருட்டு, தொண்டர் படை சரணுகதியடைய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அதன் பிரகாரம், "அயர் குடியரசு இராணுவத்தின் தளகத்தர், பிரித்தானிய இராணுவத்தின் தளகத்தருடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புகின்றார்" என்ற செய்தியை எழுதி ஒரு பெண் தொண்டரிடம் கொடுத்து

## தொண்டர் படைத் தலைவர்கள் கைது

பியேஸ் புரட்சியை ஆரம்பிப்பதற்கான கட்டளைகளை அந்தரங்கத் தூதுவர்கள் மூலம் எல்லாத் தொண்டர் படைத் தலைவர்களுக்கும் அனுப்பியிருந்தும் அவை உரிய காலத்தில் போய்ச் சேரவில்லை.

ஆங்கில ஆட்சிக்கு எதிராக ஆயுதப் புரட்சியை வெற்றிகரமாக நடாத்துவதற்குக் கைவசம் இருக்கும் ஆயுதங்கள் போதாது என்று எண்ணியதினுல் ஈஸ்ரர் வாரப் புரட்சியை நடாத்துவது உகந்ததல்ல என எண்ணியவர் தொண்டர் படையின் முதல்வரான பேராசிரியர் மக்னீல், இதன் காரணமாக, ஈஸ்ரர் வாரத்தில் தொண்டர்கள் ஆயுதங்களுடன் அணிவகுத்து நிற்கப்படாது என்று கடைசி நேரத்தில் தொண்டர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனுல் இவரது விருப்பத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மற்றத் தலைவர்களும் தொண்டர்களும் புரட்சியை ஆரம்பித்து விட்டார்கள். ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக, நடைப்பிணங்களாக நாடற்ற மக்களாக வாழ்வதிலும்பார்க்க, ஆயுதமேந்தி அன்னியருடன் போராடி மாண்டு மடிவதே மகத்தானது என்பதால் தான் அவர்கள் எதிர்ப்புக்களுக்கிடையேயும் புரட்சியை ஆரம்பித்தார்கள். அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்படும்; பட்டாளத்தினர் கொள்ளையடிப்பார்கள், வீடுகளுக்குத் தீ வைப்பார்கள், வீதிகளிற் செல்பவர்கள் எல்லோரையும் மிருகத்தனமாகத் தாக்குவார்கள், மூட்டை இருக்கிறதா என்று கேட்டுச் சென்று பெண்களைக் கற்பழிப்பார்கள் என்பதினுல் புரட்சியை ஆரம்பிப்பதற்கு அவர்கள் அஞ்சவில்லை. இந்த

டிய இடங்களுக்குச் சில்லுப் பூட்டிய நாற்காலியில் வைத்து உருட்டிச் செல்லுமாறு தொண்டர்களைக் கேட்டுக் கொண்டார்.

பொதுப் பணியில் ஈடுபடுவதாகக் கூறிப் பொய் வாக்குறுதிகள் அளித்து மக்களை ஏமாற்றி அவர்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டபின் முக்கியமான நிர்மாணங்களைப் பரிசீலனை செய்யும் செயற்குழுக் கூட்டங்களுக்கு, உற்றார், உறவினர் ஆகியோரின் திருமண, பிறந்ததின, புதுமனை புகும் வைபவங்களில் பங்கு பற்றுவதற்காகவும்

சேனுபதி பியேஸ், போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களைப் பாராட்டி ஓர் அறிக்கையை விடுத்தபின் அஞ்சல் அலுவலகத்தில் இருந்த பெண் தொண்டர்களையும் சாரணச் சிறுவர்களையும் தனித் தனியாகச் சந்தித்து நன்றி தெரிவித்தார். அதன் பிற்பாடு, அவர்கள் அனைவரையும் அஞ்சல் அலுவலகத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு கேட்டுக் கொண்டார்.

'கோமகன்'
'மாமல்லன்'

## அஞ்சல் அலுவலகத்து மேன் மாடி தீக்கிரை!

தனர். இவ்வாறு கடந்து செல்ல முற்பட்டவேளையில் 17 தொண்டர்கள் படைத் துப்பாக்கிகளுக்குப் பலியாயினர்.

இரவு முழுவதும் தொண்டர்கள் பாணல் வீதியை அடைவதற்காக மிகவும் சிரமப்பட்டனர். எங்கு திரும்பினுலும் சன்ன மாரியாக இருந்தது. இதற்குத் தப்புவதற்காக ஒவ்வொரு வீட்டுச் சுவரையும் துளைத்துச் செல்ல முடிவு செய்தனர். அதன்படி, அங்கு வரிசையாக இருந்த பதினைந்து

அனுப்பினர். அவரும் வெள்ளைக் கொடியொன்றுடன் ஆங்கிலத் தளகத்தரிடம் சென்று செய்தியைக் கொடுத்தார்; செய்தியைப் படித்த ஆங்கிலத் தளகத்தர், "அயர் தொண்டர்கள் நிபந்தனையற்றுச் சரணுகதியடைய வேண்டும்" என்று பதில் எழுதி அனுப்பினுர்.

திரும்பவும் ஆலோசனை நடாத்தி, நிபந்தனையற்றுச் சரணுகதியடைவதென த் தலைவர்கள் முடிவு செய்தனர். சேனுபதி பட்றிக் ஹென்றி பியேஸ் பிற்பகல் 3-30 மணிக்குத் தமது போர் வாளை பிரிகடியர் ஜெனரல் லோவிடம் சமர்ப்பித்தார். நாட்டிலுள்ள தொண்டர்கள் அனைவரும் நிபந்தனையற்றுச் சரணுகதியடைய வேண்டும் என்று கட்டளையொன்றையும் பிறப்பித்தார்.

தளபதி டேவி தலைமையிலுள்ள தொண்டர்கள் கட்டளையை ஏற்றுச் சரணுகதியடைந்தார்கள். இரவு 9-00 மணிக்குத்தான் மூஅர் வீதிப் பிரிவிலுள்ள தொண்டர்கள் சரணடைய ஒப்புக்கொண்டனர். கவலையும் ஆத்திரமும் ஒருங்கே அமைந்த முகங்களுடன் அவர்கள், சாள்ஸ் ஸ்ருவட் பாணலின் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்தையடைந்து அங்கு தமது ஆயுதங்களை நிலத்தில் எறிந்தார்கள்.

ஆங்கிலேயரின் கைதியாக இருக்கும் சேனுபதி பியேஸைச் சந்தித்த பின்பே தளபதி மக்டொனு தமது தொண்டர்களைச் சரணடையும்படி உத்தரவிட்டார். போலண்ட் போறனையிலும் ஆலையிலும் தளபதி டி வேலராவின் தலைமையின்




பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் நீதி மன்றங்களுக்குச் செல்வதற்காகவும் ஆலயத் திருப்பணிகளில் பங்கு பற்றுவதற்காகவும் புகைவண்டியைத் தவறவிட்ட காரணத்திற்காகவும் போகாமலிருந்து, அவைகளையெல்லாம் மூடி மறைப்பதற்காகச் செயற் குழுவிற்குப் பொய்த் தந்தியடிக்கும் ஏமாற்றுப் பிரமுகர்களையும் அடுக்கு மொழி வீரர்களையும் அரசியல் அரிச்சுவடி அறியாத பொழுது போக்காளர்களையும் மனைவிமாரின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு கடமையை மறக்கும் கோழைகளையும் போராட்டத்தைத் தவிர்ப்பதற்காக ஒரு சில கையாட்களைத் தூண்டிக் கடிதங்கள் எழுதுவிக்கும் வாய் வீரர்களையும் பெருத

மத்தியானம் ஆனதும் அஞ்சல் அலுவலகத்தின் மேல்மாடி முழுவதும் நெருப்பு பரவி விட்டது. நிலைமை ஆபத்தாகி விட்டதைக் கண்ட பியேஸ் தொண்டர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறத் தயாராக இருக்க வேண்டுமெனக் கூறி, அதற்குரிய திட்டத்தையும் வகுத்தார்:

அஞ்சல் அலுவலகத்திலிருந்து பக்கத்துக் கதவொன்றின் வழியாக ஆங்கிலேயரின் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்து கொண்டிருக்கும் ஹென்றி வீதியில் இறங்கி, மூஅர் வீதிக்குச் செல்ல வேண்டும்; அங்கிருந்து பாணல் வீதியை அடைந்து விலியம் அண்ட் வூட்ஸ் பழப்பாகுத் தொழிற்சாலையை அடைய வேண்டும்.

வீட்டுச் சுவர்களைத் துளைத்துப் பதினுருவது வீட்டை அடைந்தனர். ஆனுல் அவ்வீட்டின் சுவரையடுத்துக் கிடந்த கற்குவியல் அவர்களைத் தொடர்ந்து செல்லவிடாது தடுத்தது. ஆகவே பதினுருவது வீட்டையே தொண்டர் படையின் தலைமை நிலையமாக்கினர்.

சனிக்கிழமை காலையில் தலைமை அஞ்சல் அலுவலகமும் அதனை அடுத்திருந்த கட்டடங்களும் அக்கினிக்கு இரையாகிச் சாம்பல் மேடாகக் காட்சியளித்தது. ஆங்கிலேய இராணுவத்தினர் மக்களுடைய வீடுகளைச் சட்டிப் பீரங்கிகளால் தாக்கத் தொடங்கினர். அத்துடன்

## இரத்தம் வழிய வழிய போராடினுர் தளகர்த்தர்

நிலையை அவதானித்த பேராசிரியர் மக்னீல் தனது மனதை மாற்றி, நாட்டுப் புறங்களிலும் உடனடியாகப் புரட்சியை ஆரம்பிக்குமாறு அங்குள்ள தொண்டர் படைத் தலைவர்களுக்கு உத்தரவு அனுப்பினுர். அவரது உத்தரவு சென்றடைவதற்கு முன்னர் அத் தலைவர்கள் ஆர். ஐ. பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விட்டனர்!

டப்ளினில், தலைமை அஞ்சல் அலுவலகம் ஆங்கிலேயரின் சட்டிப் பீரங்கிகளால் தாக்கப்பட்டதால் அதன் மேல் மாடி வெடிக்கத் தொடங்கியது.

இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட இராணுவத்தின

பேறு பெற்றவர்கள் அயர்நாட்டு மக்கள். அது மட்டுமல்லாது உயிர் போகும் தறுவாயிலும் கொனேலியைப் போல் நாட்டுப் பணியில் ஈடுபடும் தலைவர்களைப் பெற்ற நாடு அயர்நாடு.

கொனேலியின் ஆலோசனைகளைத் தொண்டர்கள் அனைவரும் கேட்டு ஒவ்வொரு வினுடியும் அவற்றை அனுசரித்து வந்தார்கள். தானும் சேர்ந்து வளர்த்த புரட்சிகர நிறுவனத்தின் பெயருக்கு எந்த விதமான ஊறும் ஏற்படக் கூடாது என்ற உயர்ந்த நோக்கம் அவருடைய இரத்தத்தில் ஊறியிருந்தது. அந்த இரத்தமே உடம்பிலிருந்து வழிந்தோடிக் கொண்டிருந்த பொழுதும் அதைப் பொ

பதின்மூன்று இராணுவத்தினரை யுத்தக் கைதிகளாக்கித் தொண்டர்கள் அஞ்சல் அலுவலகத்தில் தடுத்து வைத்திருந்தார்கள். அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்குரிய ஒழுங்குகளை ஓராகிலி செய்து முடித்தார். அதன் பின்பு அவரும் சில தொண்டர்களும் எவ்வித அசம்பாவிதமுமின்றி ஹென்றி வீதியைக் கடந்தனர். அங்கிருந்து மூஅர் வீதிக்குள் நுழையும் பொழுது ஓராகிலி சுடப்பட்டு அந்த இடத்திலேயே மாண்டார்.

இரவு முழுவதும் அஞ்சல் அலுவலகத்தில் பற்றிய நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது.

## நிபந்தனையற்ற சரணுகதி!

வீடுகளுக்குப் பெற்றோலும் மண்ணெண்ணெயும் ஊற்றி நெருப்புவைத்தனர். எதிர்த்தவர்களையும் சந்தேகத்துக்குள்ளானவர்களையும் துடிக்கத் துடிக்க உயிருடன் நெருப்பில் போட்டனர். இவற்றையெல்லாம் தாங்க முடியாது, மக்கள் சமாதானத்தின் சின்னமான வெள்ளைக்கொடிகளை ஏந்திக் கொண்டு வீதிகளுக்கு வந்தனர். ஆனுல் பஞ்ச மாபாதகங்களைத் துச்சமென மதிக்கும் இராணுவத்தினரா இவர்களது சமாதானத்தை ஏற்பவர்கள்? ஈன இரக்கமின்றி மக்களை மாக்கள் போல் சுட்டுத்தள்ளினுர்கள்;

கீழ் இருந்த தொண்டர்கள் தமது படைத்துப்பாக்கிகளைத் தரையில் அடித்து முறித்துவிட்டுச் சரணடைந்தனர்.

(வளரும்)

சுதந்திரன் சந்தா விபரம்
இலங்கை-இந்தியா உட்பட
வருடச் சந்தா ரூபா 10-00
இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஏப்ரல் மாதம் 21-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# போராட்டமே ஓரே வழி!

“வட்டமேசை மாநாடு பயனளிக்காது. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அது உதவாது. ஆனால் சமரசத்துக்கு மாறானவர்களல்ல தமிழரசுவாதிகள்” என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம் இவ்வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் முழங்கியுள்ளார்.

உரிமைகளைப் பெறுதல் சமரசத்தால் சாத்தியமென்றால் அதனையும் ஒரு கை பார்க்கும் கட்சிதான் தமிழரசுக் கட்சி, அதன் கடந்த கால வரலாறே அதற்குச் சான்று.

சமரசப் பேச்சுக்கான ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாகப் பயன்படுத்தியது கட்சி. பன்முறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. குறைந்தபட்ச கோரிக்கையொன்றினையும்கூட சமர்ப்பித்தது கட்சி.

ஆட்சியாளரும் வாக்குறுதிகள் கொடுத்தனர். ஒப்பந்தமும் செய்தனர். இறுதியில் நடந்ததென்ன? அவர்களே அத்தனையும் காற்றில் பறக்கவிட்டனர்.

சமரசப் பேச்சுக்கு அது எந்த மேசையாக இருந்தாலும் சரி—ஆட்சியாளர்கள் கொடுக்கும் பொருள் ஒன்றே ஒன்றுதான். “ஓர் அரசியல் உபாயம்” என்பதுதான் அது.

தமிழ் பேசும் இனத்தை ஏமாற்றும் ஓர் உபாயந்தான் இந்த சமரசப் பேச்சு. இந்த முடிவு வெறும் சித்தாந்தமன்று. அனுபவ பூர்வமாக நாம் கண்ட உண்மை—கற்ற படிப்பினை,

தமிழ் பேசும் மக்கள் எழுச்சி பெற்றால்—போராட்டப் பாதையிலே அணிவகுத்தால் ஆட்சியாளர்களுக்குத் தொடை நடுக்கம் ஏற்படுகிறது. உடனே “பேச்சுவார்த்தைகள்—மாநாடுகள்” என்றெல்லாம் கூச்சலைக் கிளப்புகின்றனர். கூச்சலுக்கு அனுசரணையாக ஐந்தாம்படையை வேறு முடுக்கி விடுகின்றனர். உரிமைகளை வாரி வழங்கப் போவதாகவும் பசப்புகின்றனர்.

இந்த நடிப்பின் நோக்கம் மக்களின் உத்வேகத்தை அடக்குவதே! உணர்ச்சியை ஒடுக்குவதே! “சலுகை” என்றவுடன் நப்பாசையில் “ஆமாம் சாமி” போடுவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு.

உதிரிகளை அழைத்துப் பேசுகின்றனர், மக்களின் உண்மைப் பிரதிநிதிகளுடன் பேசு அஞ்சுகின்றனர். காரணம் நடிப்பு அம்பலமாகிவிடும் என்பதுதான்.

தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதித்துவ ஸ்தாபனமே தமிழரசுக் கட்சி. ஆட்சியாளர் அதனைப் பக்கவாட்டில் கடந்து செல்ல முயற்சி செய்வதிலிருந்தே “சமரசப் பேச்சு ஒரு ஏமாற்றுவித்தை” என்பது புலனாகிறது.

செனட்டர் திரு. நடேசபிள்ளை போன்றோர் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கூறுதல் மற்றொரு கேலிக்கூத்து.

திரு. நடேசன் யாருக்குப் பிரதிநிதி? தமிழ் பேசும் மக்கள் சார்பில் பேச அவருக்கு அதிகாரமளித்தது யார்? அவரோ தனிச் சிங்களத்தை ஏற்றுக்கொண்டவர். இந் நிலையில் அவரது பேச்சுவார்த்தைகளுக்கும் மக்களுக்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாதே!

பழைய வட்டமேசைக்குப் புது மெருகிட முயன்ற திரு. பொன்னம்பலம் மீண்டும் அஞ்ஞாதவாசம் சென்று விட்டார் போலும்! வெறும் சலசலப்புதான்.

ஆனகயால்தான் முயற்சிகளை எதிர்க்க வில்லையெனினும், கண்துடைப்பு சமரசப் பேச்சில் பயனில்லை என்கிறார் கட்சித் தலைவர்.

எனவே உரிமைகளைப்பெற ஓரே வழி போராட்டமே! நமது போராட்டம் சாத்வீகப் போராட்டம், சத்தியப் போராட்டம்! நமது வழி அற வழி—மற வழியன்று.

போராட்டமின்றி – தியாகமின்றி தமிழ் பேசும் இனம் ஓர் இனமாக இனித் தலை நிமிர்ந்து வாழ முடியாது. போராட்டமென்றால் அடக்குமுறை பாயும். அடக்குமுறை கண்டு அஞ்சி அஞ்சிச் சாவதானால், உரிமை இழந்து, மானமிழந்து, இன மழிந்து அடிமைகளாக வாழ வேண்டிய அவல நிலைதான் ஏற்படும். அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க மக்களின் உணர்ச்சியும் பொங்கி எழ வேண்டும்.

கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தக் கட்சி தவறியிருந்தால், இன்றே அந்த அவலநிலை ஏற்பட்டிருக்கும். கடந்த சத்தியாக்கிரகம் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பின் தன்மையை எடுத்துக்காட்டியது. உரிமைக்காக அவர்கள் உயிர்த்தியாகம் செய்யவும் தயங்க மாட்டார்களென்பதை நிரூபித்தது.

இன்று ஒரு மாபெரும் உரிமைப் போராட்டம்—சுதந்திரப் போர்—உருவாகி வருகிறது. அதன் முன்னோடியாகத் “தமிழியக்கம்” எங்கும் பரவுகிறது. போராட்டமின்றேல் இனி விமோசனமில்லை.

போராட்டப் பாதை பட்டு மெத்தையல்ல—கரடு முரடானதுதான். ஆயினும் உறுதியுடன் முன்னேறுங்கள்! தொடர்ந்து முன்னேறுங்கள்!! வெற்றி திண்ணம்.

# அவசரகால நிலையை அகற்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உகந்தது அல்ல, அது நடைமுறைக்கு ஒத்துவராது என்பதை அண்மைகால வரலாறுகள் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளன.

நமது பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுவதற்கு முனைவதாகக் கூறிக்கொள்ளும் சிலர், இன்று வட்ட மேசை மாநாடு என்ற புதியதொரு குரலைக் கிளப்பியுள்ளார்கள். வட்டமேசை மாநாட்டுக்கு நாங்கள் எதிர்ப்பானவர்கள் அல்ல. ஆனால் வட்ட மேசை மாநாடு, எமது பிரச்சினைகளுக்கு முடிவான தீர்வை அளிக்க முடியாது.

வட்டமேசை மாநாட்டில் செய்யப்படும் முடிவை, அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பதே முதலில் பிரச்சினைக்கு உரிய கேள்வியாகும். வட்டமேசை மாநாட்டு முடிவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அதை அமுல் நடத்துபவர்கள் யார்?

### பதில் கூறட்டும்

அரசாங்கத்திற்கு வட்ட மேசை மாநாட்டில் சிறிதேனும் கவலையிருந்தால், இன்று வரை அதைக் கூட்டுவதற்கோ அல்லது அது பற்றி ஏதாவது கருத்தைத் திட்டவட்டமாக வெளியிடுவதற்கோ முயன்றுள்ளதா என்பதை அறிய நாம் மிகவும் ஆவல் கொண்டுள்ளோம். வட்டமேசை மாநாடு கருத்தைத் தெரிவித்தவர்கள் இதற்குப் பதில் கூறுவார்களாக.

நாம் நமது இழந்த உரிமைகளைப் பெற வேண்டுமானால், பாராளுமன்றத்திற்கு வெளியில் நடத்தப்படும் போராட்டங்களே பலனளிக்கும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்களாக உள்ளோம். இப்படியான ஒரு உரிமைப் போராட்டம் சொற்ப காலத்தில் வெற்றியைத் தரமாட்டாது. இதற்குப் பல நாடுகளின் கடந்த கால வரலாறுகள் சான்று பகருகின்றன.

இந்த நாட்டில் அமுலில் இருக்கும் அவசரகால நிலையும் இதையே காட்டுகிறது.

### நமது எதிர்ப்புச் சக்தி

இந்த நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய மோசமான பொருளாதார நிலைக்கும் இதே தான் காரணமாகும். சிறுபான்மையினரின் பிரச்சினைகள் இருக்கும்வரை, ஒரு ஸ்திரமான பொருளாதார நிலையை ஏற்படுத்த முடியாது என்பதையும் ஆளவந்தாருக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்.

மொழிப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டு விட்டது என்று கூறியவர்கள், இன்று அதை ஆராய முற்பட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நமது எதிர்ப்புச் சக்தியேயாகும்.

### நேரடி நடவடிக்கை கைவிடப்படவில்லை

நாம் நேரடி நடவடிக்கையைக் கைவிட்டு விட்டதாகப் பலர் கூறுகிறார்கள். இது தவறு. நேரடி நடவடிக்கையின் முன்னோடியாக இப்பொழுது தமிழியக்கம் நடைபெறுகிறது நேரடி நடவடிக்கைக்கு உரிய காலம் அறிவிக்கப்படும். அப்பொழுது அதில் தீவிரமாகப் பங்கு கொள்ள வேண்டியது உங்கள் கடன்.

### மற்றவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம்

நாம் கொடுத்திருக்கும் இந்த சிறு இடைவேளையைப் புதிய கருத்தைத் தெரிவிக்கும் மாற்றுக் கட்சி நண்பர்களும், ஆட்சியாளரும் பயன்படுத்துகிறார்களா என்பதை நாம் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். இந்தச் சிறு இடைவேளை அவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.

அடுத்து தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது: இவ்விடத்தில் இத்தனை பெரும் திரளாகக் கூடியிருக்கும் உங்களைப் பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்கு விடுதலை பற்றிய ஆவல் உண்டு, அது தணியவில்லை என்பதே புலனாகிறது.

### பூரண வெற்றி

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாம் நடாத்திய சத்தியாக்கிரகம் தமிழ் பேசும் மக்களுக்குப் பூரண வெற்றி என்றே நாம் கருதுகிறோம். இல்லையென்றால் வெளிநாடுகளிலெல்லாம் மொழிப் பிரச்சினை தீர்ந்து விட்டதாகக் கூறிய அமைச்சர்கள், இன்று தொடர்ந்து அவசரகால நிலையின் கீழ் ஆட்சியை நடாத்திக்கொண்டிருப்பார்களா?

நாம் 56 நாட்கள் நடாத்திய சத்தியாக்கிரகத்தில் அகிம்சைக்கு எந்தவித இழுக்கும் தேடாத முறையில் நடந்துகொண்டோம். அப்படி அமைதியான முறையில் நடந்து கொண்ட நம்மீது இந்த நாட்டு அரசாங்கம் இராணுவத்தை ஏவி விட்டது. அமைதியாக இருந்த மக்கள் மீது இராணுவத்தினர் மிருகத்தனமாக நடந்து கொண்டார்கள்.

இந் நிகழ்ச்சியைப் பார்த்து அரசாங்கம் நிச்சயம் வெட்கப்பட்டேயாக வேண்டும். இராணுவம் மிருகத்தனமான முறையில் பொது மக்களிடம் நடப்பது இராணுவ ஆட்சியிலேதான் என்று நாங்கள் அறிந்துள்ளோம். எனவே இந்த நாட்டில் இப்பொழுது நடப்பது இராணுவ ஆட்சியேயாகும்.

இந்த நிலையில் நாம் என்ன செய்வது என்ற கேள்வி எழுகிறது. நாம் இதற்காக நமது உரிமைகளை விட்டுக் கொடுப்பதா?

இப்பொழுது புதிதாக மேற்சபை உறுப்பினர் பதவியை ஏற்றிருக்கும் திருவாளர் சு. நடேசபிள்ளை தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் மக்கள் ஏற்றுக்கொண்டார்களா என்பதுதான் கேள்வி. தனி மனிதன் ஏற்றுக்கொண்டால் அது மக்கள் ஏற்றுக்கொண்டதாக அமையுமா?

### மாநாடு பிரச்சினையைத் தீர்க்க முடியாது

வட்டமேசை மாநாட்டினால் நமது பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள முடியாது. அமைதியான முறையில் சத்திய நெறி நின்று நாம் எடுக்கும் நடவடிக்கைகளாலேயே நமது பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

### தமிழியக்கத்தை ஆதரியுங்கள்

இப்பொழுது நாம் நடாத்தி வரும் ‘எல்லாம் தமிழியக்கம்’ சிங்களம் மட்டும் சட்டத்தை முறியடிக்க ஒரு நல்ல போராட்ட முறையாகும். எனவே பொது மக்கள் தங்கள் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் எல்லாம் தமிழியக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

### விடுதலை பெற மூன்று திட்டங்கள்

அடுத்து ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. அ. கந்தையா கூறியதாவது:— கடந்த காலங்களில் நாமும் ஆட்சியாளருடன் சமரச முறையில் இரு வட்டமேசை மாநாடுகளை நடாத்தியுள்ளோம். அதன் பலனையும் நன்கு அறிந்திருக்கிறோம். எனவே தான் நாம் கூறுகிறோம் வட்ட மேசை மாநாடு பலன் தரமாட்டாது என்று.

நமது அசைக்க முடியாத மனத் திட்பம், ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி இம் மூன்றுமேதான் நமது விடுதலைக்கு வழி வகுக்கும். இதை நாம் என்றுமே மறந்து விடக்கூடாது.

### மீண்டும் ஒத்துழைப்பா?

அடுத்து வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் கூறியதாவது:— தமிழ் பேசும் மக்களும் தலைவர்களும் சிங்கள ஆட்சியாளருடன் இத்தனை காலமும் ஒத்துழைத்துப் பெற்ற பயன் அடிமை வாழ்வேயாகும். இன்று ஒத்துழைப்பு வேண்டும், வட்ட மேசை மாநாடு கூட்டவேண்டும் என்று கூறுபவர்கள் அன்று ஆட்சியாளருடன் ஒத்துழைத்துக் கண்ட பலன் தான் என்ன? எட்டுத் தமிழ் பிரதிநிதிகளை இழந்தோம், வளமான நமது பிரதேசத்தின் பல பகுதிகளை இழந்தோம், மொழியுரிமையை இழந்தோம். மீண்டும் ஒத்துழைப்புப் பல்லவியா?

இன்று புதிதாகப் பதவியேற்றிருப்பவர்களும், வட்ட மேசை மாநாடு கூட்டவேண்டும் என்று காட்டுக் கூச்சல் போடுபவர்களும் அன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைத்து உதைத்துத் தள்ளப் பட்டவர்களேயாகும்.

இவர்களுக்கு இன்று மீண்டும் இந்த ஞானம் ஏற்பட்டிருப்பது ஏனோ?

அடுத்து டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:— தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற வேண்டுமென்றால், முதலில் நாம் நமது நிலையை வலுவான முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். தமிழினம் சுய நிலையில் நின்றால் சுதந்திரம் வலிய வந்து நம்மை அடையும்.

அடுத்து சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது: நம்மைக்குறை கூறுபவர்கள் நல்லதொரு திட்டத்தை முன் வைத்து விட்டுக் குறை கூறட்டும். அத் திட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் தரும் என்றால் நாம் அதை வரவேற்கத் தயங்க மாட்டோம்.

### கனவு காண்கிறார்கள்

அடுத்து மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:- இன்று என்னை வைத்து அரசியலில் முன்னேறிவிடலாம் என்று பலர் கனவு காண்கிறார்கள். அவர்கள் உடன் பிறந்தவர்கள் என்றால் என்ன, நண்பர்கள் என்றால் என்ன நிச்சயம் ஏமாற்றத்தையும் தோல்வி தோல்வியையுமே அடைவார்கள்.

இந்த இக்கட்டான நிலையில் தமிழினம் தவித்துக் கொண்டிருக்கையில் அரசியல் குட்டையைக் குழப்பி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரிவினைவளர்ப்போரை நிச்சயம் ஒதுக்கித் தள்ள வேண்டியது பொது மக்கள் கடன்.

நமது கட்சியின் கடந்த காலவரலாறு நாம் கடந்து வந்த இன்னல்கள், பட்டதுயரங்கள் அனைத்தும் வருங் கால வளமான தமிழர் சமுதாயத்துக்கு உரமாக அமையும்.


நமது எண்ணத்தில், செயலில் என்றுமே சுய நலமோ அல்லது கபடத்தனமோ தலை தூக்கியது கிடையாது.

நமது பாதை புனிதமானது. எனவே இவ்வழி சென்று விடுதலை பெறுவது திண்ணம்.

உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம், வவுனியாப் பிரதிநிதி திரு. த. சிவசிதம்பரம், மூதூர் முதல் பிரதிநிதி ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி ஆகியோர் தாங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துவதாகவும், கூட்டம் சிறப்புடன் நடைபெற வேண்டுவதாகவும் தமிழ்த் தந்தி மூலம் அறிவித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இலங்கையை உருவாக்க வாரீர்



சென்ற புதன்கிழமை பிற்பகல் யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரக நினைவு தினக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம், திரு. செ. இராசதுரை, கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துகின்றார்கள்.

படம் - அரசு. செல்லம்ஸ்.

## திரண்டது சன சமுத்திரம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுத் தந்தை, திரு. இராசமாணிக்கம், திரு. தர்மலிங்கம் ஆகியோரின் தலைமையின்கீழ் புறப்பட்டு முன்னைய ஊர்வலத்துடன் மிட்டாய்க்கடைச் சந்தியடியில் சங்கமமாகிப் பெருகி வழிந்து புத்த கோவில் நோக்கிச் சென்றனர்.

திருநெல்வேலியிலிருந்து திரு. பாலசுந்தரம், திரு. இராசதுரை தலைமையில் புறப்பட்ட ஊர்வலம் கல்வியங்காட்டிலிருந்து டாக்டர் நாகநாதன், திரு. துரைரத்தினம் ஆகியோரின் தலைமையின் கீழ் கிளர்ந்தெழுந்து வந்த ஊர்வலத்துடன் பருத்தித்துறை பலாலி வீதிச் சந்தியில் கலந்து புத்த கோவில் நோக்கி முன்னேறியது.

புத்தகோவில் சந்தியில் ஆனைக்கோட்டை, குளப்பிட்டி ஊர்வலங்களும் திருநெல்வேலி, கல்வியங்காட்டு ஊர்வலங்களும் சங்கமமான காட்சி ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

பொங்கி வழிந்தோடிய இந்த ஊர்வலத்துடன் அரியாலையிலிருந்து திரு. நவரத்தினம், திரு. கதிரவேலுப்பிள்ளை, செனேட்டர் நல்லையா தலைமையில் புறப்பட்ட ஊர்வலமும் கலந்து யாழ். கோட்டை மைதானத்தை நோக்கிச் சென்றன.

இலங்கையைச் சுட்டெரிக்க முற்பட்ட அனுமானின் வால் நீண்டதுபோல், முடிவு தெரியாத அந்தமற்ற நிலையையே காணமுடிந்தது. ஆதியைக் கண்டால் அந்தம் தெரியவில்லை. அந்தத்தைக் கண்டால் ஆதி தெரியவில்லை. அத்தனை நீளம்!

ஊர்வலம் அனுமான் வால் போல் நீண்டு காணப்பட்டது மாத்திரமல்ல, முழு ஊர்வலத்திலும் இலங்கையைச் சுட்டெரிக்க விறு கொண்ட அனுமானின் மன நிலையையும் நாம் காண முடிந்தது. தொண்டர்கள் மத்தியில் ஒரே உற்சாகம், உத்வேகம், உரிமை வேட்கை.

மூவாயிரத்திற்கு மேற்பட்ட மறத் தமிழ் ஆற்றின் முற்பகுதி மைதானத்தை அடைந்தபோது பிற்பகுதி 2ம் குறுக்குத் தெரு வரையில் நின்றதென்றால் ஊர்வலத்தைப் பற்றிக் கூற வேண்டுமா?

யாழ். கோட்டைத் திடலில் காத்து நின்ற பல்லாயிரக்கணக்கானோர் இந்தக் கம்பீர ஊர்வலத்தைக் கண்டு களித்தனர்.

சத்தியாக்கிரகத்தின் பின்னர் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு குறைந்துவிட்டது என்று கூறியவர்கள் வாய் மேல் விரல் வைத்து வாய் அடைத்து நிற்கும் நிலையை ஏற்படுத்திவிட்டது இந்த சத்தியாக்கிரக நினைவுக் கூட்டம்.

அண்மைக் காலத்தில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களில் அன்றைய கூட்டத்திற்கு பெருந்திரளாகப் பெண்கள் சமூகம் கொடுத்திருந்தது எல்லாரதும் கவனத்தை பெரிதும் கவர்ந்தது.

இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மறவர் கூட்டம் இனத்தையும் மொழியையும் காக்க வேண்டுமென்ற தாளாத அவாவினால் உந்தப்பட்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இரவு பத்து மணி பத்து நிமிடத்திற்கு திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் 'தந்தை செல்வா வாழ்விலே' என்ற இன்னிசைக் கீதத்துடன் கூட்டம் முற்றுப் பெற்றது.

கூட்டம் கலைய ஆரம்பித்து அரை மணி நேரத்திற்கு [illegible] யாழ். [illegible] வரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

## அலுவலகத் திறப்பு விழா

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலவாக்கலை மாவட்ட அலுவலகம் மேற்படி தலவாக்கலை பிரதான வீதியில் 32-ம் இலக்க கட்டிடத்தின் கீழ் மாடியில் (கதிரேசன் கோவிலுக்கு எதிரில்) 21-4-63 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கழக உப தலைவர் திரு. ஆர். எம். இராமையா அவர்களால் திறந்து வைக்கப்படும்.

கழக பொதுச் செயலாளர் திரு. பி. எம். கிருஷ்ணசாமி உட்பட அட்டன் தலவாக்கலைப் பகுதி கழக முக்கியஸ்தர்கள் இத்திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொள்வார்கள்.

## மகாதேசாதிபதிக்கு தமிழரசுத் தலைவர் வேண்டுகோள்

### மட்டுநகர் தமிழியக்க நிகழ்ச்சிகள்

தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளாத சட்டங்களையும் அவர்கள் மேல் திணித்துவிட்டு, எந்த அரசாங்கமும் நிம்மதியாக ஆட்சி செலுத்தமுடியாது! எனவே தமிழ்பேசும் மக்களுடைய மொழி, குடி, பிரதேச அரசியல் உரிமைகளைப் பூரணமாக அளித்து இந்த நாட்டில் வாழும் சகல மக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று உண்மையானதொரு ஐக்கிய இலங்கையை உருவாக்க நீங்கள் முயலவேண்டுமென உங்களை வேண்டுகிறேன்.

கடந்த 12-ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு புளியந்திவு அஞ்சல் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட எல்லாம் தமிழியக்கத்தையொட்டி மகாதேசாதிபதிக்குஅனுப்பி வைத்த தமிழ்த் தந்தியில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும், பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை இயக்கத்தை ஆரம்பித்துவைத்து, பிரதமருக்கு அனுப்பியுள்ள தமிழ் தந்தி செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:



திரு. இரா. பத்மநாதன்

'தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் பழம் பெரும் குடியினர். இந்நாட்டிலே அவர்களுக்குரிய உரிமைகளை மறுப்பது அரசியல் சட்டத்திற்கு முரணானது. தமிழ் மக்களின் உரிமைகளை சட்டபூர்வமாக்கி, இரு பெரும் சமூகங்களான சிங்கள—தமிழ் சமூகங்களுக்கிடையே நல்லுறவை உண்டுபண்ணி நாட்டை பஞ்சமும் பசியுமற்ற பொன் கொழிக்கும் பூமியாக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க இதுவே நல்ல தருணமாகும்!'



திரு. செ. இராசதுரை

சனிக்கிழமை காலை புளியந்தீவு அஞ்சல் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் அன்று பிற்பகலே பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. முதல் முதலாக கோட்டைமுனை அஞ்சல் நிலையத்திற்கு இயக்கம் விஸ்தரிக்கப்பட்டது.

திருவாளர்கள்: சி. மூ. இராசமாணிக்கம், செ. இராசதுரை, செனட்டர் மு. மாணிக்கம், இரா. பத்மநாதன், வழக்கறிஞர் சாம் தம்பிமுத்து முதலியோர் இயக்கத்தை விஸ்தரிப்பதிலும், சிறப்புற நடத்துவதிலும் முன்னின்று உழைத்து வருகிறார்கள் என்று நமது மட்டுநகர் நிருபர் அறிவித்துள்ளார்.

தொண்டர்கள் கோஷ்டியொன்று தமிழியக்கப் பிரசார அட்டைகளுடனும் தமிழ் சுலோகங்கள் பொறித்த அஞ்சல் உறைகளுடனும் ஏனைய கிராமங்களுக்கு, குறிப்பாக மேற்குக் கரை கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.





சுகாதாரமான நவீன முறைப்படி கையிடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பனவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை




# கதிர் ஆறு தம்பி எங்கே?

நினைவுகள் 'மாடப் புருக்களா' என்ன?

—எங்கெங்கோ நாள் முழுவதும் அலைந்து திரிந்துவிட்டு மாடத்தையே வந்தடையும் புருக்களாக...

—நிகழ்ச்சிகளை சிரிடப்படுத்தி, நெஞ்சத்தை மாடமாக்கி நினைவுகள் குமையும் போது, வேதனை தாங்க மாட்டாது இதயம் அலறத்தான் செய்கின்றது.

—நடராசா சாய்மனைக் கதிரையில் படுத்துக் கிடந்தபடி, வானத்தையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்...

வானத்திலே அவன் எதைப் பார்க்கிறான்?...

மோனப் பரவெளியான வானத்திலே, மனத்தை வாகனமாக்கிப் பறந்து கொண்டிருக்கிறானா?...

எதைத் தேடிப் பயணமாகின்றான்?...

விழிகள் வானத்திலே மொய்த்து நிற்கின்றன...

சுவரோரப் பல்லி இரை மீட்ட ஓய்வின் பின், இன்னோர் இரைக்காகக் காத்துக் கிடக்கிறது!...

'க் கிக்...க்கிக்... க்கிக்!...'

நடராசா பல்லியாகின்றானா?

அவன் எதனை இரையாக்கி எதற்காகக் காத்துக் கிடக்கின்றான்?...

'கனகம்!'—அவன் அடித்தள மனப்பரப்பிலிருந்து யாரோ தீனக் குரலில் கூவுகின்றார்கள்.

அவன் சுற்று முற்றும் பார்க்கிறான்.

யார் குரல்?...

உற்றுக் கேட்கிறான். வேறு யாருடையதுமல்ல, அவன் குரலேதான்... அப்படி பரிதாபகரமாக ஒலிக்கின்றது.

'கனகம்!'

வாழ்க்கைத் தாக்கங்கள் சுமையாகக் கனக்கும்போது, குழந்தை நினைவுகளில் மனதை லயிக்க விடுவதும் ஓர் ஆறுதல்தான்!...

கால விருக்ஷமாக அந்த மாமரம் வளர்ந்து கிளை பரப்பி, நிழலளித்துக்கொண்டிருக்க, குழந்தைகள் விளையாடுவது எழிலார்ந்த கோலமாக, நெஞ்சை அள்ளுகிறது.

மலடி கூட அந்தக் காட்சியைக் கண்டால், உளம் மகிழத்தான் செய்வாள்!

கனகம் விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவள் சின்னப் பாவாடை காற்றிலே குடை விரிக்க, சின்னஞ் சிறு 'ரிபன்' கட்டப்பட்ட பின்னல் ஜடை ஜாலமொழி பேச, கழுத்தின் மென் சங்கிலி அசைந்து அசைந்து மின்னி ஒளி வீச...

கனகம் விளையாடிக் கொண்டிருக்கிறாள்,

நடராசா அந்தக் கும்பலிலே, அவளைக் கண்களால் விழுங்கிக் கொண்டிருக்கிறான். அது விரசம் கலந்த பார்வையல்ல.

அழகின் ரசிப்பு!

கனகம் எவ்வளவு அழகாக இருக்கிறாள்!

கனகம் அவனைக் கண்டு விடுகிறாள். 'வாடா, நடராசா!...நீயும் வாறியா விளையாட...?'

அவன் மகிழ்ச்சியோடு சம்மதம் தெரிவித்து தலையசைக்க...

'சீ! பொம்பிளையளோடு யாரும் ஆம்பிள்ளையள் விளையாடுவினமோ!...'— யாரோ குறும்புக்காரி குரல் கொடுக்க கேலிச் சிரிப்பு எழும்புகிறது. நடராசா பரிதாபமாகக் கனகத்தைப் பார்க்கிறான். அவள் நெஞ்சம் உருகுகிறது.

'சரிதான்...சும்மா யிராடி.... பாவம்...அவனை புச் சேர்த்து விளையாடினால் தான் நானும் வருவன்!...'—என்று சட்ட மறுப்பு செய்கிறாள். சிறுவர்கள் அவளுக்குப் பணிகிறார்கள்.

'அப்ப அவனை யார் பக்கம் சேர்க்கிறது?...'

'நடராசா என்ர பக்கம் தான்...வாடா நடராசா!...' —என்று அவன் கையைப் பிடித்து தன் பக்கம் இழுக்கும் அவள்—

சிறுமி கனகம்!

'இப்படிக் களங்கமற்றுப் பாசத்தோடு பழகிய நீ எப்படியடி இதயமற்றவளாக மாறினாய்?...'

கனகம் பெரியவளாகி விட்டாள். பெற்றோர்களின் கண்காணிப்பிலேயே வீட்டுக்குள்ளே வளைய வளையவருகிறாள். அவளை இப்போதெல்லாம் நடராசாவினால் இலகுவில் கண்டுகொள்ள முடிவதில்லை, எப்போதாவது, கனகம் வீட்டாருடன் சினிமாவுக்குச் செல்லும் போதோ, நல்லூர் திருவிழாக் காலங்களில் அவள் பெற்றோருடன் செல்லும் போதோ தான் தூர நின்று காண்பதில் ஆறுதல் காணமுடிகின்றது.

அன்று! அந்த நிகழ்ச்சி அவன் மனதில் அழியாமல் இன்றும் நெஞ்சில் நிழலாடுகிறது!...

அவன் வீட்டிற்கு ஏதோவொரு காரியமாகச் செல்ல வேண்டி நேரிடுகிறது. வீட்டு வாசலில் நின்று குரல் கொடுக்கிறான்.

'இஞ்சேருங்கோ.... வீட்டுக்காரர்...உள்ள யாரும் இல்லியே!......'— அவன் குரல் கேட்டு வருபவள்—

தலை முழுகிய ஈரத்தை, தலையைச் சாய்த்து கூந்தலின் ஈரத்தை, உலர்த்தியவாறு வருபவள்—

அவன் உள்ளம் புருவின் இறக்கைகளாக அடித்துக் கொள்ள, வைத்த கண் வாங்காமல் அவன் பார்க்க நிற்பவள்—

குமரி கனகம்!

'என்ன வேணும்?'—என்று அவள் கேட்பது ஜலதரங்கம் மீட்டியது போலிருக்கிறது. அவன் திணறி விடுகின்றான்.

'வந்து... வந்து ...உங்கட அம்மா உள்ள இருக்கிறுவா?... அவவிட்ட ஒரு அலுவலா...ஒருக்கா கூப்பிடுறீங்களா?...'

'கொஞ்சம் இதில இருங்க ...அவ அடி வளவில அலுவலா நிக்கிரு ...... கூட்டிவாறன்!'

—அவள் அமைதியாக நடந்து செல்கிறாள். அவள் பின்னழகில் அவன் ஸ்மரணையடைகின்றான்.

அன்று அவர்கள் வீட்டிலிருந்து திரும்புகையில் அவன் நெஞ்சம் எல்லாம் நிறைந்திருப்பது—அவள் உருவம்!

ஆச்சி அவனுக்குச் சோறு பரிமாறிக் கொண்டிருக்கிருள் அவன் குனிந்த தலைநிமிராமல் உண்டு கொண்டிருக்கிறான்.


'என்ன தம்பி, நடராசா!.. நீ இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படி இருக்கப் போகிறாய்...எனக்கு ஒரு எப்பனுக்கொண்டாலும் இல்லேயே!... நீயும் ஒருத்தியைக் கட்டிக்கொண்டிட்டா பெண்டா....எனக்கும் ஒரு நிம்மதி. நானும் கொஞ்சம் காலைக் கையை நீட்டி ஒய்வெடுக்கலாம் எண்டு பாத்தா...நீ கொஞ்சமும் அசைந்து கொடுக்கிறாயில்லையே!'..

'இப்ப என்னணை ஆச்சி கல்யாணத்துக்கு அவசரம்... தம்பியும் படிச்சு ஒரு வழிக்கு வரட்டுமன்...பேந்து உதுகளைப் பத்திக் கவனிப்பம்!...'

'நீ இப்படித்தான் சொல்லுவாய்!...தம்பி தன்ர பாட்

செம்பியன் செல்வன்

டில படிக்கட்டும்...அதுக்கு உன்ர கல்யாணம் ஒரு தடையே...நீ உழைக்கிற சம்பளம் இன்னொருத்திக்கு கூடச் சாப்பாடு போடாதே...... உனக்கு வர்ரவளும் என்ன சும்மாவே வரப்போறாள்... அவளும் ஏதாவது கொண்டருவள்தானே! ......இவ்வளவு நாள் தான் நாமும் சாதி



சனங்கள் எண்டு இல்லாம இருந்திட்டம்... இனியாவது ஊரோட கூடிக் குலாவி இருக்கிறதில்லையே!—'

'இப்ப நீங்க என்ன சொல்லுறீங்க?...ஏதாவது பெண்ணைப் பாத்து வைச்சிருக்கிறீங்களோ?......'— சந்தேகக் கண்களுடன் ஆச்சியைப் பார்க்கிறான்.

"உதென்ன கதை...உன்ர சம்மதமில்லாமல் நான் பெண் கேட்கப் போகலாமே?...ஏன்... நீ... எங்காவது.. யாரையாவது விரும்புறியே ...அப்படி யெண்டா சொல்லு...உன்ர விருப்பத்துக்கு மாருக நான் ஏதும் செய்திடுவனே!...'

'உன்னை ஆச்சியாக பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள் தான்!'...அவன் மனம் நன்றி உணர்வால் கூவுகிறது.

அவன் [illegible] கள் [illegible] கலை வெளிப்படுத்துகிறான். ஆச்சியின் முகத்தில் கருமேகங்கள் வளைய மிடுகின்றன.

'ஏன் ஆச்சி... என்னமோ போல இருக்கிறாய்...கனகத்தில உனக்கு விருப்பமில்லையா?...'

'நீ என்னமோ சொந்தக்காரர் எண்டு விரும்புறாய்... பொட்டையின்ர மன நிலையும் தெரியாது எங்கிறாய்... கந்தையன் எங்களோட சம்பந்தம் வைச்சுக் கொள்ள விரும்புவானே? என்னமோ போய்ப் பாக்கிறன்...'

அன்றே கந்தையர் வீட்டுக்குப் போன ஆச்சி கவலையோடு திரும்புகிறாள். கந்தையர் ஏழ்மையைச் சுட்டிக் காட்டி ஏளனம் செய்தது அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் கனகம் கூறிய வார்த்தைகள் அவன் இதயத்தைக்கந்தலாக்குகின்றன.

'போயும்...போயும்... நான் ஒரு சுருட்டுக்காரனையே மணக்கிறது...என்னை ஒரு சுருட்டுக்காரனுக்குப் பேசி வர என்ன துணிச்சல் உங்களுக்கு!...'

—என்று கூறிய கல்லூரி மாணவி கனகம்!

'அடி கனகம்!... கனி முற்ற காம்பிலிருந்து விழுவது போல் உன் வளர்ச்சியில் உன் பாச உணர்வுகளெல்லாம் பதவி என்ற போதையிலே கழன்ருேடி விட்டனவா?...'

'அன்று அப்படிக் கூறி என்னை உதாசீனம் செய்த நீ...இன்று யாரோட ஓடினையடி!...ஊருக்கு அவதூருக அவன் பின் ஓட என்ன சுகத்தைக் கண்டாய்...நான் இங்கு உன் நினைவுகளால் வெந்து வேக... பரவாயில்லை ...நீயாவது...எங்காவது.... சுகமாக வாழ்!...'

* * *

கனகத்தை தனக்குத் தர மறுத்து விட்டார்கள் என்றதும், நடராசா தன் வாழ்விலே அனுபவித்தறியாத துன்ப, மன வேதனையை அனுபவித்தான். அப்படி தன் வாழ்விலே நடக்குமென எதிர்பார்த்தவனும் அல்ல!...

'போயும் போயும் ஒரு சுருட்டுக் காரனையா...?'

—கனகத்தின் வார்த்தைகள் அவன் இதயத்தில் என்றும் நீங்காத வடுக்களாக ஆழப் பதிந்து...

'தொழில் மகத்துவம் பற்றி பள்ளிக்கூடங்களில் விசேட வகுப்பு நடத்துகிறார்களாமே... ஏன் கனகம் நீ கூட ஒரு முறை பாடசாலையில் 'தோட்டி' வேலை செய்து தொழில் மகத்துவ வாரம் கொண்டாடிப் பெருமைப்பட்டாயாமே!. ...அப்படிப்பட்ட நீ எப்படி என்னை.. என் தொழிலைக் கொண்டு அவமரியாதை செய்யத் துணிந்தாய்......ஒருவரின் தொழிலாலா உயர்வு தாழ்வு கணிக்கப்படுகிறது...'

அவனது இந்த ஏமாற்றம் அவன் மனதிலே பலத்த வைராக்கியத்தை ஏற்படுத்த...

குடும்பத்துக்காக —தம்பி, ஆச்சி இருவருக்குமாக— வாழத் தீர்மானித்து விடுகிறான். அன்றிலிருந்து அவன் வாழ்க்கைப்பாதையே மாறி விடுகிறது. முன்பெல்லாம் வேலையென்றதும், ஒரு குறிப்பிட்ட நேரமே செய்து வந்தவன் .....இப்போதெல்லாம் நாள் முழுவதும் பாடுபட அவன் தயங்குவதேயில்லை... வேலை அயர்வில், தனது ஏக்கத்தை மறைக்க முயலுகிறான்...அதனையும் மீறி ஏக்கம் ஆதிக்கம் செலுத்தும் போது மனம் சலனமடையவே செய்கின்றது. இப்போதெல்லாம் அவன் லட்சியம்—

'தம்பி படிக்க வேண்டும்... உயர் படிப்பெல்லாம் படிக்க வேண்டும். நான் படிக்காத குறையை அவன் படித்து தீர்க்க வேண்டும். சுருட்டுக்காரன் என்று என்னை இகழும் வாய்கள், பட்டதாரியின் அண்ணன் எனப் புகழ வேண்டும், இப்போது எனக்குப் பெண் கொடுக்க மறுப்பவர்கள் எல்லாம், வீடுதேடி மாப்பிள்ளை கேட்க வர வேண்டும்...'

இப்படிப்பட்ட அவன் நெஞ்சத்திலே மீண்டும், வடுவை ஏற்படுத்திச் சென்றுவிட்டாள் கனகம்!...

'கனகம்!...'

* * *

நினைவுகள் வைரங்கள் போன்றவை. அதிலிருந்து கிளர்ந்தெழும் ஒளிக்கீற்றுகள், பல ஒளிக்கதிர்களுக்கு 'பிறப்பு' சமைப்பது போல, ஒரு நினைவு, இன்னோர் நினைவுக்கு உயிர் கொடுக்க......

நடராசாவின் நெஞ்சம் விம்மித் தணிகிறது!...

அன்று சுருட்டுக் கொட்டிலில் நடந்த சம்பவம் அவன் மனதை 'காளவாய்' ஆக்குகின்றது.

சுருட்டுக் கொட்டிலைப் பற்றி நாகரிக வாடை பிடித்தவர்களுக்கு ஒன்றுமே தெரியாது இருக்கலாம். ஆனால், அது அற்புத உலகம்! அங்கே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காவியமே விரிந்து கொண்டிருக்கும்.

சுருட்டுக் கொட்டிலில் வரிசை வரிசையாக எல்லாரும் அமர்ந்திருக்கிறார்கள். பலரின் முன் புகையிலைத் தூள்களும், நரம்பு வாரப்பட்ட புகையிலைகளும் குமிந்து கிடக்கின்றன. ஒரு மூலையிலே கிடந்து "கோடாஜாடி" புளித்த மணம் பரப்புகின்றது. எல்லார் கைகளும் அசுர வேகத்தில் செயலாற்றுகின்றன. அவர்களுக்கு கூலி அவர்கள் சுருட்டிய சுருட்டுக்களின் எண்ணிக்கைப்படி. எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் ஆவலில் கைகள் பரபரக்க...

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புக் கொடி வேண்டாம் என்னும் பொன்னு!

## வெள்ளைக் கொடி ஏற்றிச் சரணடைய வேண்டுமா?

## உதறித் தள்ளப்பட்ட தலைவருக்கு திரு. நாகநாதனின் பகிரங்கக் கடிதம்

"சிங்கள மக்களின் சிநேகிதத்தையும் விசுவாசத்தையும் பரஸ்பரம் பெற்று அதன் அடிப்படையில் அவர்களது நல்லெண்ணத்தையும் அடைய வேண்டும் என்று கூறுகிறீர். அதே சமயம் தங்கள் அடிப்படை உரிமைகள் அபகரிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் வரை தமிழர் நிம்மதி கொள்ளப் போவதில்லை யென்பதைத் தங்கள் ஏகோபித்த சங்கற்பம் மூலம் சிங்களப் பொது மக்களுக்குக் காட்ட வேண்டும் என்றும் கூறுகிறீர்! இப்படி முன்னுக்குப் பின் முரண்பட்ட அரசியல் தத்துவத்தை உம்மைத் தவிர வேறு யார்தான் காணுவார்?"

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர். இ. மு. வி. நாகநாதன் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. க. கா. பொன்னம்பலம் அவர்களுக்கு விடுத்துள்ள பகிரங்கக் கடிதத்தில் கூறியுள்ளார்.

மேலும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

பாரதூரமான அரசியல் கொள்கை காரணமாகக் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நாம் பிரிந்திருப்பினும் நமது அன்பும் அபிமானமும் நீடித்தே வந்திருக்கிறது. எனவே அதிக நாட்களாக நாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உமது ஆங்கில அறிக்கையை நான் மிகுந்த கவனத்துடனும் அக்கறையுடனும் மீண்டும், மீண்டும் படித்தேன்.

தமிழரசுக் கட்சியை கண்டிப்பதில் அவ்வறிக்கை காட்டிய எச்சரிக்கையான கட்டுப்பாட்டை பாராட்டும் அதே வேளையில் அதன் நிதானமான சாதுரியத்தையும் அவதானித்தேன். இன்றைய அரசாங்கத்தையும் அதன் கொள்கைகளையும் கண்டித்திருப்பதை நான் பூரணமாக ஏற்றுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் விரக்தியுடன் வாழும் மக்களைப் பற்றி தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்த மக்களுக்குப் புது வழி தேட உங்கள் அறிக்கையில் ஒரு பாதையும் காட்டப்படவில்லையே என்பதைக் கண்ணுற்று மிகவும் விசனப்படுகிறேன்.

எம்மை எதிர் நோக்கும் பிரச்சினை என்ன? மொத்தத்தில் நாம் இந்த நாட்டில் சிறுபான்மையினராக வாழ்வதுதான் நமது பிணிக்கு மூலாதாரக் காரணம் அல்லவா?

### பெரும்பான்மையினர் ஆட்சி

ஜனநாயகம் என்றால் பெரும்பான்மையினர் ஆட்சி என்ற கருத்தின் பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் சிங்களச் சமூகத்தவரால் ஆளப்பட்டு அவர்களின் அதிகாரத்திற்குப் பணிய நேரிடும். இன மத வெறி கொண்ட, சுயநலனுக்காக நாட்டை பணயம் வைக்கும் சுயநலவாதிகள் ஆட்சி பீடத்திலிருக்கும் வரை நீதி, நியாயம், தேசிய ஒற்றுமை, பாராளுமன்ற சம்பிரதாயங்கள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்படும்.

நாடு பூராவும் எடுத்துக் கொண்டால் சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். அதே போன்று வட-கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் கணிசமான பெரும்பான்மையினராக வாழ்கிறார்கள்.

### சமஷ்டி அரசியல்

எனவே சமஷ்டி அரசியல் அமைப்பின் கீழ் தமிழ் பேசும் பகுதிகளில் பெரும்பான்மையினரின் ஆட்சி தமிழ் பேசும் மக்களாலேயே நடத்தப்படும். ஆகையால் ஒற்றை ஆட்சியின் கீழ் சிங்களப் பெரும்பான்மை மக்களின் ஆட்சி நாடு பூராவும் சிங்கள மொழியிலேயே நடப்பதைப் போன்று தமிழ் மக்களின் ஆட்சியும் தமிழ் மொழியிலேயே நடைபெறும்.

தமிழ் பேசும் பகுதிகளில் பெருமபான்மையினராகவுள்ள தமிழ் பேசும் மக்களின் ஆதிக்கம் ஏற்படக் கூடிய சமஷ்டி ஆட்சி முறையைத் தவிர வேறு எதுவிதத்திலும் இந்த நாட்டில் தமிழில் நிர்வாகமும் அதன் மூலம் தமிழுக்கு அந்தஸ்தும் ஏற்படமாட்டாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.


"இந்தியாவிலுள்ள 15 தேசிய மொழிக்காரர்களும் தங்கள் பூரண மொழி உரிமையுடனும் பூரண தேசிய உறுப்புடனும் சமஷ்டி ஆட்சிமுறை காரணமாக இனிது வாழ்கிறார்கள் என்பதைத் திரு. பொன்னம்பலம் அவர்களே!- தாங்கள் கொஞ்சம் சிரமப்பட்டு, அரசியல் வரலாறு, அரசியற் கலை ஆகியன பற்றிப் படித்திருப்பீராயின் உணர்ந்திருப்பீர்!

சோவியத்ரஷ்யாவிலுள்ள 69 தேசிய மொழிக்காரர்களும், கனடாவிலுள்ள பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிக்காரர்களும், சுவிட்ஸலாந்திலுள்ள நான்கு மொழிக்காரர்களும், சைப்பிரஸிலுள்ள இரண்டு மொழிக்காரர்களும், பாகிஸ்தானிலுள்ள இரண்டு மொழிக்காரர்களும், இது விதமே சமஷ்டி ஆட்சிமுறையினால் இனிது வாழ்கின்றனர்.

### அறியாமையையே வெளிப்படுத்துகிறீர்

தமிழரசுக்கட்சியினர், எங்கள் மொழி உரிமைக் கோரிக்கையையும், சமஷ்டிக் கோரிக்கையையும் ஒன்றாக அடையாளப்படுத்தியதினால்தான், எங்கள் நீதி நியாயமான மொழிக் கோரிக்கைகளுக்கும் சிங்களப் பொது மக்களின் ஏகோபித்த எதிர்ப்பு ஏற்பட்டது என்று தாங்கள் சொல்லும்போதும் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை என்னும் பலிபீடத்தில் எங்கள் மொழி உரிமைகள் பலியிடப்படுகின்றன என்று தாங்கள் கூறும்போதும், அரசியற் கலை, அரசியற் தத்துவம், அரசியல் விளக்கம் ஆகியன பற்றிய தங்களது அறியாமையைத்தான் நீர் வெளிப்படுத்துகிறீர்.

தமிழரின் உரிமைகளும் கோரிக்கைகளும் மறுக்கப்படும்போது அவர்கள் எப்படி உணர்வுக் கிளர்ச்சி கொள்ள வேண்டும் என்று கூறுகிறீர்? ஆயுதந் தாங்கிய எதிர்ப்புக் காட்டவேண்டும் என்று பைத்தியத்தனமான யோசனை கூறியுள்ளீர். அன்றேல், சிங்கள மக்களின் சிநேகிதத்தையும் பரஸ்பர விசுவாசத்தையும் பெற்று அதன் அடிப்படையில் அவர்களது நல்லெண்



திரு. இ. எம். வி. நாகநாதன்

ணத்தைப் பெற வேண்டும் என்று கூறுகிறீர்.

### விளக்கம் தருவீரா?

எங்கள் உரிமைகளில் கை வைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் நாங்கள் காட்டும் ஒவ்வொரு எதிர்ப்பும், சிங்களவர்களின் மனஸ்தாபத்தை உண்டுபண்ணும் அல்லவா? அதே சமயத்தில் அவர்களின் நட்புறவையும் பரஸ்பரம் விசுவாசத்தையும் நல்லெண்ணத்தையும் சம்பாதிப்பது எங்ஙனம்?

இதனைத் தயை கூர்ந்து விளங்கப்படுத்துவீரா?

தமிழரின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மறுக்கும் அதே சிங்களவரிடமிருந்து அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, இத்தியாதி உரிமைகளைப் பெறும்படி நீர் தமிழருக்குச் சிபார்சு செய்யும் பொழுது, தமிழர்கள், சிங்களவரின் அடிமைகள் என்பதையும், சிங்களவரின் தயவிலும் கருணையிலுமே, முன்னையவர்கள் சீவிக்க முடியும் என்பதையும் நீர் பகிரங்கமாகக் கூறுகிறீர். ஒரு மக்கள், தங்கள் உயிர் வாழ்வுக்கே இன்னொரு மக்களின் தயவில் இருக்கிறார்கள் என்றால், முன்னைய மக்கள் அடிமைச் சனமே. இது ஒரு குழந்தைக்குத்தன்னும் விளங்கும் விஷயமாகும். ஆனால், சுடர் விடும் உமது வாக்குவன்மையில் அவ்வுண்மை உமக்குத் தவறிவிட்டது. நாங்கள் செய்யும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை எதிர்க்கும் நீர், இப்போது சரணாகதிக்கான வெள்ளைக் கொடி வீசுகிறீர்!

ஒரு வட்ட மேஜை மகாநாட்டைப் பற்றி நீங்கள் அதிகம் வற்புறுத்தியிருக்கிறீர்கள். நாம் வட்ட மேஜை மகாநாட்டுக்கு எதிரானவர்களல்ல. இலங்கை அரசாங்கம் அழைக்குமானால் நாம் அதில் கலந்துகொண்டு அதன் வெற்றிக்காக முயற்சிக்கச் சித்தமாக இருக்கிறோம். ஏனைய நாடுகளின் வட்ட மேஜை மகாநாடுகளைக் கவனிக்கும்போது வட்ட மேஜை மகாநாடு பற்றி நாம் அதிகம் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை. பழைய அடிமையாட்சிக் காலத்தில் இந்தியாவில் இரு வட்ட மேஜை மகாநாடுகள் நடைபெற்றன. பாலஸ்தீன், அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் வட்ட மேஜை மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இன்றைய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே சர்வதேச விவகாரங்களில் ஒரு நிரந்தர வட்ட மேஜை மகாநாடேயாகும். நான் அறிந்தவரை வட்டமேஜை மகாநாடுகளால் யாதொரு உண்மைப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டதாக இல்லை.

### சூழ் நிலை

இன்று நீங்கள் ஒரு வட்ட மேஜை மகாநாட்டைப் பற்றிப் பேசுகிறீர்களென்றால் நமது எதிர்ப்பை நாம் இது வரை தளரவிடாது காட்டிக் கொண்டிருந்தது ஒன்றேதான் இதற்குக் காரணமாகும். நமது உரிமைகளைச் சரணாகதியடையச் செய்யவோ அல்லது ஈவிரக்கமற்ற அடக்கு முறைக்குப் பயப்படவோ நாம் மறுத்து வந்திருக்கிறோம். ஆகவே உங்களுடைய வட்ட மேஜை மகாநாட்டு யோசனைக்கான சூழ்நிலையை நாம் சிருஷ்டித்திருக்கிறோம். ஒருவேளை உங்களுடைய பேரப்பிள்ளைகளும் உங்களிடம் கேட்கக் கூடிய ஒரு வினாவை நான் உங்களிடம் கேட்கலாமா? நமது உரிமைகளும் பாத்தியதைகளும் பறிக்கப்பட்டுச் சிதைக்கப்படும்போது கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

நாம் ஐக்கியப்பட்டு எதிர்க்கவேண்டுமென்று நீங்களே சிபார்சு செய்கிறீர்கள். நாம் அரசாங்கத்தின் குதிகாலுக்குக் கீழ் நசுக்கப்பட்டிருக்கிறோமென்றும் நமது வரலாற்றில் இதற்கு முன் என்றுமே இல்லாத விதமாக நாம் பாரபட்சம் காட்டப்படுகிறோமென்றும் நீங்களே கூறுகிறீர்கள். இந்த நிலையில் எதிர்ப்பதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? தமிழ் மக்களால் உதறித் தள்ளப்பட்ட தலைவராக இருந்து கொண்டு, திரும்பவும் வெளிச்சத்துக்கு வர முயலும் நீங்கள், உங்களுக்குத்தான் தமிழர்களுக்காகப் பேச உரிமையுண்டு என்று கருதிக் கொண்டிருக்கிறீர்கள்.

### அவசரகாலச் சட்டம்

சத்தியாக்கிரகம் முடிந்து இரண்டு வருடங்களுக்குப் பிறகும் அவசரகாலச் சட்டம் தொடர்ந்து இருந்து வருவது நமது இயக்கத்தின் வெற்றிக்குப் போதிய சான்றாகும். நமது விருப்பமின்றி நம்மை ஆள முடியாதென்பதையும் அப்படி ஆளுவதென்றால் ராணுவ ஆதிக்கத்தைத் திணித்து அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு மாத்திரம் தான் ஆளமுடியுமென்பதையும் அரசாங்கம் உணர்ந்திருக்கிறதென்பதை இது காட்டுகிறது. நமது உரிமைகளுக்காக நடத்தப்பட்ட மகத்தான சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு உதவி செய்ய நீங்கள் என்ன செய்தீர்களென்று மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன்.

"நான் வேண்டுமென்றே மௌனமாக இருந்தேன்" என்றுதான் உங்களால் சொல்ல முடியும். இது ஒரு தலைவரின் உதாசீன மனப்பான்மையும் இருதயமற்ற தன்மையுமென்பதை ஒப்புக் கொண்டதாகுமல்லவா? இது ஒருபோதுமே மன்னிக்க முடியாதது.

### விவேகமான யோசனை

உங்களுடைய சொற்பொழிவு முழுவதிலும் காணக் கிடக்கும் ஒரே ஒரு விவேகமான-புத்தியுள்ள- யோசனையை நான் ஒப்புக்கொள்கிறேன். மேடை, பத்திரிகை, பாராளுமன்றம் ஆகியவை மூலம், நமது கோரிக்கையின் நியாயத்தன்மையை சிங்களவர்களில் நியாயம் விளங்கும் பிரிவாரின் மனதைத் திருப்பப் பாவிப்பதற்கான ஒரு வேலைத் திட்டத்தை நாம் அமுல் நடத்த வேண்டுமென்பதுதான் உங்களுடைய அந்த யோசனை. போதிய நிதி இல்லாததால் இத்தகைய ஒரு திட்டத்தை அமுல் நடத்த நம்மால் முடியாது போய் விட்டதால் நம்மோடு இக் கட்டத்தில் வந்து சேருமாறு நான் உங்களை அழைக்கிறேன்.

சிங்களப் பொது மக்களோடு நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ள என்னாலான சிறிய வழியில் நான் முயற்சி செய்து வந்திருக்கிறேன். இதன் பலன் உற்சாகமூட்டக் கூடியதாக

(13-ம் பக்கம் பார்க்க)



# ரிஷி லேகியம்

**ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்**

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும் மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# பத்மினியின் மனமாற்றம்

## கலைஞர்களுக்கு நினைவுச் சின்னமாக தங்க மோதிரம் கொடுத்தார்

### தயாரிப்பாளர் ஆகுவாரா?

கல்யாணத்தின் பின் நடிப்பதில்லை என்ற எண்ணத்துடன் 1961ம் ஆண்டு மே மாதம் திரைப் பட உலகை விட்டு குடும்ப



வாழ்க்கையிலீடுபட்ட தென்னகத் திரைவானின் நட்சத்திரமான பத்மினி, ஒரு வருடத்தின் பின் மொடேர்ன் தியேட்டர்ஸாரின் 'காட்டு ரோஜா' படத்தில் நடிக்கத் திரும்பவும் திரைவானில் புகுந்தார்.

மண வாழ்க்கையில் புகுந்த பின் திரைக்குத் திரும்பாத எண்ணத்துடனிருந்த பத்மினி, சிறிது காலத்தின் முன் நடித்து முடித்த 'ராகினி' என்னும் ஹிந்திப் படத் தயாரிப்பில் பங்குகொண்ட ஒலி, ஒளித்துறை வல்லுனர்களுக்கும், உதவி டைரக்டர்களுக்கும், தன்னை நினைவுபடுத்துவதற்காக, ஒவ்வொரு தங்க மோதிரம் பரிசாகக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற ஆண்டு திரை உலகிற்குத் திரும்பியதுடன் ஒக்டோபர் மாதத்தில் அண்ணாமலை மன்றத்தில் அரங்கேற்றிய வள்ளி திருமணம் என்னும் நாட்டிய நிகழ்ச்சியுடன் மேடை நாட்டிய உலகிற்கும் திரும்பியுள்ளார். மணமுடித்து ஒரு குழந்தைக்கும் தாயாரான பத்மினியின் மனமாற்றம் ரசிகர்களை மகிழ்வித்துள்ளது.

பத்மினியும் அவரது கணவர் டாக்டர் ராமச்சந்திரனுமாக பிரேமானந் பிக்சர்ஸ் என்னும் தாபனத்தை ஆரம்பித்ததும், பத்மினி மலையாளப் படமொன்று தயாரிக்கப் போகிறார் என்ற வதந்தி பரவத் தொடங்கியது. எனினும் இதுவரை அவர் படத் தயாரிப்புத் துறையில் இறங்கவில்லை.



தனது மகனின் (பிரேமானந்) பெயரில் ஆரம்பித்த தாபனத்தின்கீழ் தனது நாட்டிய நிகழ்ச்சிகளை பத்மினி அரங்கேற்றி வருகிறார். எனினும் இந்த ஆண்டு படத் தயாரிப்பிலும் இறங்கக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதுவரை இறங்காமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு எனத் தெரிகிறது. ஒன்று மலையாளப் படங்களை நம்பி இறங்கமுடியாத காரணம், மற்றது டாக்டர் வேலையில் ஈடுபட்டுள்ள பத்மினியின் கணவனுக்குப் போதிய அவகாசமில்லாதிருப்பதாகும். 15 வருட காலமாகத் திரையுலகில் பிரகாசித்து விட்டு வெளியேறும் போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. அண்ணாத்துரை பத்மினி மிகப் பழக்கப்பட்ட நடிகையெனவும் அவர் அழுவதிலும் ஒரு கலை மிளிர்வதைக் காணலாம் என்றும் கூறியிருந்தார்.



அதோ, அங்கே பார்! என்று எஸ். எஸ். ஆரிடம் எதையோ சிவாஜி காட்டுகிறார். விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வர விருக்கும் 'ஆலயமணி'யில் சுவையான ஒரு காட்சி.

## வடிவுக்கு வளைகாப்பு

ஆனந்தபுரி சமஸ்தானத்தின் மன்னர் மகேந்திர பூபதி. அவரது வளர்ப்பு மகன் குமாரராஜா அரண்மனை அடப்பக்காரன் வேலப்பனின் மகளை மணக்க முயலுகிறான்.



மன்னரின் இரண்டாம் தாரம் ஜெகதா மன்னனைத் தன் கைப்பொம்மையாக்க முயலுகிறாள். அவள் சகோதரன் ஜெயசிம்மனோ மன்ன



னைக் கொன்று தானே முடிசூடவழிபார்க்கிறான். ஆனால் அவன் மகள் ராஜேஸ்வரி குமாரராஜாவை மணக்க முயலுகிறாள். இப்படியாகக் கதை ராஜா, ராணிக் கதையாகச் செல்லுகிறது.

கதை, வசனம் ஏ. பி. நாகராஜனுடையது. கதையில் விசேடமில்லாவிடினும் நாகராஜனின் வசனத்தில் ஒரு தனித்துவத்தைக் காணலாம். வாக்குவாதத்தின் போது வெட்டி வெட்டிப் பேசும் வசனங்கள் நன்றாக உள்ளன.

சிவாஜி கணேசன் குமாரராஜாவாக வருகிறார். சிறந்த நடிகர், ஆனால் படம் அவ்வளவு இடம் கொடுக்கவில்லை. வாக்குவாதங்களின் போது திறமாகச் செய்கிறார்.

அடப்பக்காரனின் மகள் வடிவு ஆக வருகிறார் சாவித்திரி. அவருடைய நடிப்பை மெச்சத்தான் வேண்டும். குறும்புப்பேச்சில் வெளுத்து வாங்குகிறார்.

அடப்பக்காரனாக எஸ்.வி. சுப்பையா வருகிறார். வாய்ப்புள்ள இடங்களில் நன்றாக நடிக்கிறார். மன்னர் மகேந்திரபூபதியாக வி. கே. ராமசாமி வருகிறார்.

வில்லன் பாகம் டி. கே. ராமச்சந்திரனுக்கு, வில்லி பாகம் ராஜத்திற்கு. இருவரும் ஓரளவு செய்கிறார்கள். அகங்காரம்கொண்ட இளைய ராணியாக எஸ். வரலட்சுமி தோன்றி ஓரளவு கவருகிறார்.

நகைச்சுவைக்கு ராஜகோபால்-முத்துலட்சுமி சோடியும், கருணாநிதி-மனோரமா சோடியும் இருக்கிறார்கள். நகைச்சுவைப் பகுதி பரவாயில்லை.

பாடல்கள் சில இனிமையாக இருக்கின்றன. ஆனால் கருத்துடையனவாக இல்லை. ஒளிப்படிவைக்குறை கூறவே வேண்டும்.

நாகராஜனின் துடுக்கான வசனங்களும் சாவித்திரியின் சிறந்த குறும்பு நடிப்பும் படத்தைத் தேற வைக்கின்றன.

மதி

## கொண்டாட்டம் வேண்டாம்!

### ஆலயமணி 100வது நாள் விழாவில் எம். ஆர். ராதா

(சென்னை நிருபர்)

'ஆலயமணி' படத்தின் 100வது நாள் விழாவில் படத்துடன் சம்பந்தப்பட்டோரைப் போற்றிய பின், பட அதிபர் திரு. ஏ. எல்.



ஸ்ரீநிவாசன் நடிகர்கள் படம் நடிக்கக் கேட்கும் தொகையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கடும் வரிகளைச் சமாளித்து சினிமாத்துறை மீள இது முக்கியம் என்றும் கூறினார்.

எம். ஆர். ராதா ஒளிவு மறைவின்றி உள்ளதை உள்ளபடியே பேசும் சுபாவமுள்ளவர். சில இடங்களில் மற்றவர் முகம் முறியப் பேசியும் விடுவார். இதே விழாவில் பேசிய எம். ஆர். ராதா இப்படியான விழாக்கள் வீண் செலவை ஏற்படுத்துவன என்று கூறி ஒரு பரபரப்பை ஏற்படுத்தினார்.

படங்களின் 100வது நாள் விழாக்கள் பெரும் ஆடம்பரத்துடன் அதிக செலவில் நடக்கின்றன. இந்த வைபவங்களில் பெருந் தொகைப் பணம் வீணாகின்றது. இது போன்ற வீண் செலவுகளைத் தவிர்த்து அப்பணத்தை பலவித கஷ்டங்களை அனுபவித்து வரும் நடிகர்களின் முன்னேற்றத்திற்கு செலவு செய்தால் உபயோகமாக இருக்கும் என்று கூறினார்; விழாவிலேயே கூறி விட்டாரே எனச் சிலர் குறைபட்டாலும் அவர் கூறியதிலுள்ள நல்ல கருத்தை அவர்களும் அவதானிக்கத் தவறவில்லை.





மனோரமாவிடம் கைகாட்டிப் புல்லிளித்து, எங்கே காரியத்[illegible] என்று நாகேஷ் பயப்படுகிறாரோ? சிலோன் எண்டெர்டெயின்மென்ட் திரைகளில் காட்சியளிக்கும் 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தில் ஓர் நகைச் சுவைக் காட்சி.

## தயாரிப்பாளர் தங்கவேலு

தமிழ்த் திரையுலகின் சிறந்த நகைச்சுவை நடிகர் தங்கவேலு மிஸ்ஸியம்மா படத்தில் புகழ்பெற்ற காலம்தொட்டு இன்றுவரை ரசிகர்கள் மனதில் குடிகொண்டுள்ளார். நகைச்சுவைப் பாத்திரம் மட்டுமல்ல, முக்கிய பாகம் கூடத் தாங்கி நடித்துள்ளார்.

இதுவரை காலமாக நடிகர் தங்கவேலுவாக அறிமுகமான தங்கவேலு இப்போது தயாரிப்பாளர் தங்கவேலுவாக மாறியுள்ளார். ஆனந்தம் புரடக்சன்ஸ் என்னும் தாபனத்தை இம்மாதம் 7ம் திகதி நிறுவியுள்ளார் எனத் தெரிகிறது.

தங்கவேலுவின் ஆனந்தம் புரடக்சன்ஸின் முதல் தயாரிப்பிற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவாம். திரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் இயக்கும் இப்படத்தில் தங்கவேலுவே முக்கிய பாகமேற்று நடிப்பாரெனத் தெரியவருகிறது. படத்திற்கான கதை-வசனத்தை திரு. தேவராஜன் பொறுப் பேற்றுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வாயில் அடிபடாத விடயங்களே இல்லை. உலக அரசியலிலிருந்து, ஊரிலே ஒழுக்கக் கேடாக நடக்கும் பொன்னம்மாவின் தட்டுவாணித்தனம் வரை...

பிள்ளைகளுக்கு பள்ளிக் கூடக் காசு கட்டாத கவலையிலிருந்து, ராத்திரி மனைவியுடன் செய்த சல்லாப ரசானுபவம் வரை...

அவர்கள் உரையாடல்கள் பெரும்பாலும் 'சிருங்கார ரசத்'தைத் தழுவியே இருக்கும்...இதற்கு வயது போனவர்களிலிருந்து இளைஞர்கள் வரை விலக்கில்லை...இச் சம்பாஷணைகளே அவர்கள் களைப்பைப் போக்கும் 'ஜீவாம்ருதம்' ஆகும்.

இவர்களிடம் இப்படிப்பட்ட விடயங்கள் அடிபட்டாலும் அவற்றின் சாரம் அவர்கள் இதயத்தில் ஒட்டுமெனக் கூற இயலாது. அவர்களுக்கு கதைக்க விடயம் வேண்டும்-அவ்வளவு தான்!...

அன்று வளமாக அகப்பட்டுக் கொள்கிறான் நடராசா!

சுருட்டுக் கொட்டிலுக்குள் நுழைந்த நடராசாவுக்கு அமர்க்களமாக வரவேற்பு கொடுப்பவர்—

சின்னர் என்று எல்லாராலும் செல்லமாக அழைக்கப்படும் சின்னப்பு ஆகும்.

'என்ன நடராசா சோர்ந்து போய் வாறாய்......என்ன உன்ர மச்சாள் ஓடீட்டாளாமே!...'—என்று அவர் வேடிக்கையாகக் கேட்டாலும், அவனுக்குச் சுருக்கென்று தைக்கிறது.

'சீ! மற்றவன்ர மன நிலை தெரியாத பிண்டங்கள்!'

'என்ன நீங்கள் இப்படி...?'

'ஓ!...ஓ!... நீ கோவிச்சக் கொள்ளாத...என்ன இப்படிக் கனகம் செய்திட்டாள்.. அவளால பாவம் கந்தையருக்கு எவ்வளவு தலையிறக்கம். ஆமாம் என்ன நடந்தது எண்டு கொஞ்சம் சொல்லன்!...'

—நடராசா சுற்று முற்றும் பார்க்கிறான், எல்லாரும் அவனையே ஆவலுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

'...ம்...எனக்கு உண்மையிலே ஒண்டுமே தெரியாது. தெரிஞ்சாலும்...அது உங்களுக்கு தெரிஞ்சளவிலதான் எனக்கும் தெரியும்...அதையே உங்களுக்கு ஏன் நான் திருப்பிச் சொல்லுவான்!...'—எல்லார் முகத்தின் ஆவலும் இறங்கிவிடுகிறது.

'என்ன நீ இப்படிச் சொல்லுறாய்...அவளின்ர வீட்டுக்கு முன்னாலை இருக்கிற உனக்கு ஒண்டுமே தெரியாதெண்டு றியே...அவள் உனக்கு என்ன அன்னியமே!....பத்தாததுக்கு கந்தையரும் உன்ர வீட்ட வந்தாரெண்டு கேள்வி!...'—என்று சின்னர் விடுத்து விடுத்துக் கேட்கிறார்.

நடராசாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது...

'எனக் கொண்டும் தெரியாது...என்னைத் தொந்தரவு செய்யாதீங்க!...'—என்றவாறு தன் வேலையில் கவனம் செலுத்துகிறான்.

'ஓ!...ஓ!...உன்னை நான் கேட்டது தவறுதான்...... என்ன இருந்தாலும் உனக்கும் கவலை யில்லாமப் போகுமோ!...உன்னை மணக்க மறுத்தவள் இண்டைக்குச் சின்னராசாவோட ஓடீட்டாளெண்டு உனக்கு ஆத்திரம்.....'—என்று 'நக்கல்' பாஷையில் அவனைக் கிண்டல் செய்கிறார்.

மற்றவர்களுக்கு அந்த உண்மை அப்போதுதான் புரிகிறது. மற்றவர் பார்வை தன் மீது பரிதாபமாகவும், ஏளனமாகவும் விழுவதை அவனால் உணர முடிகிறது' எதையும் தாங்கும் அவனால் தன் மீது விழும் அந்த ஏளனப் பார்வையையும், பரிதாபப் பார்வையையும் தாங்க முடியாதவாறு உடல் நடுங்குகிறது.

அவனுக்கு ஆவேசம் வந்து விடுகிறதா?

'சாய்!...... கொஞ்ச நேரம் சும்மா இருக்க மாட்டீங்களா?...வீட்டிலதான் நிம்மதியில்லை யெண்டா......வேலை செய்ய வந்த இடத்தில உங்கட வம்பு பெரிய கரைச்சலாப் போச்சு!...சே!....என்ன மனிஷர்கள் நீங்கள்!......'—என்று இரைந்து கத்தியவாறு எழுந்து, சுருட்டுக் கொட்டிலை விட்டு வெளியேறுகிறான்.

'எடி கனகம் நீ ஓடினது தான் ஓடினாய்......உனக்கு அவமானத்தையும் சேர்த்துக் கொண்டு ஓடினாய்...... உன்னுடன் யாது தொடர்பு மற்ற என்னைக் கூட மற்றவர் பார்த்துப் பரிதாபப்பட, ஏளனம் செய்யக்கூடிய விதத்தில் ஓடினாய்...உனக்கு நான் என்ன துரோகம் செய்தேனடி!...'

அவன் மனம் திடீரென விழித்துக் கொள்கிறது. எங்கும் இருள்! சாய்மனைக் கட்டிலை விட்டெழுந்து வீட்டினுள்ளே படுக்கச் செல்கின்றான். அங்கே—

ராஜகோபாலின் கட்டில் காலியாகக் கிடக்கிறது.

'தம்பி எங்கே போய்விட்டான் இந்த நேரத்தில்?...' கேள்வி நினைவில் அவன் சிலையாகி நிற்கின்றான்.

(தொடரும்)

# கறுப்புக் கொடி....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதை நான் கண்டிருக்கிறேன். சிங்களப் பொது மக்கள் உலகிலேயே மாசு மறுவற்ற அன்பு நிறைந்த ஒரு மக்களென்பதை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் அரசியலை அறியாதவர்கள். சமஷ்டியென்றால் நாட்டைப் பிரித்தல் என்ற தவறானதும் விஷமத்தனமானதுமான சுலோகங்களால் தவறாக இழுத்துச் செல்லப்பட்டவர்கள். இது நேர்மையற்ற சிங்கள அரசியல் வாதிகளால் சிருஷ்டிக்கப்பட்ட பிரசாரமாகும். இந்தத் தவறான பிரசாரத்துக்கு உங்கள் பிரசங்கத்தில் நீங்களும் நிறம் பூசியிருக்கிறீர்களென் பதைக் காண்கிறேன்."

# மெத்தச் சிறந்த 'தமிழ்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துவார்கள். நாம் நம் மொழியைப் பேணாது விட்டால், வீணாக அழிவதற்கு வழி வகுத்த பொறுப்பு நம்மையே சாரும். ஆகவே நாம் நமது அன்னை மொழிமேல் அன்பு பூண்டு, அதன் வண்ணமே காரியங்கள் அனைத்தையும் ஆற்றுவதற்கு உறுதி பூண்டு கொள்வோம்.

'எல்லாம் தமிழில்' என்று கூறும்போது, ஒரு குறிப்பிட்ட கட்சிக்காகச் செய்யும் கருமம் இதுவல்ல. தமிழுக்காகச் செய்யும் தொண்டு தான் இது என்பதைத் தமிழர் அனைவரும் உணரவேண்டும்.

தமிழர் என்றால், எல்லோரும் தமிழன்னையின் புதல்வர்கள் தான். உயர்ந்தோன்-தாழ்ந்தோன் என்றோ, மலைநாட்டான்—மட்டக்களப்பான் என்றோ தமிழ்த்தாயின் சமூகத்திலே தனையர்களாகிய நம்மில் பேதங் கிடையாது. ஒரு தாய் பெற்ற பிள்ளைகளிலே ஒருவன் கருநிறமாகவும், மற்றவன் செந்நிறமாகவும் இருக்கலாம். இருப்பினும், இருவரும் பெற்ற தாயாரின் பிறந்த மக்களல்லவோ? பிள்ளைகளின் மேற் தாய்ப்பாசமோ, அல்லது தாயின் மேற் பிள்ளையன்போ மேற்கூறிய பிறப்பினால் இல்லாமற் போவதில்லையே!

எனவே, நாம் தமிழர் என்ற எண்ணத்தோடு, அன்னையாம் தமிழ்த் தாயின் மேல் அன்பு பூண்டு, ஆணையேற்று, மலைநாட்டுத் தமிழ் மக்களும் 'எல்லாம் தமிழ் இயக்கத்தில்' பங்குகொண்டு இதையே தம் பாத காணிக்கையாகத் தமிழன்னைக்கு ஒப்புக் கொடுக்கவேண்டும்.

எல்லாம் தமிழில் தங்கள் காரியங்களையெல்லாம் கருமமாற்றுவதற்கு நல்ல தமிழ் மக்கள் முன் வரவேண்டும். வட, கீழ் மாகாணத் தமிழருக்கு மட்டும்தானா தமிழன்னை தாய்? மலைநாட்டுத் தமிழருக்கும் அவள் தாயே தான். ஆகவே, அவர்கள்-நம் அன்புச் சகோதரர்கள், அன்னை மொழியாம் தமிழுக்காக அடியும் உதையும் பட்டு, அளப்பரிய சேவைகளைச் செய்து, அவளுக்கும் அரியாசனத்திலே சரியாசனத்திற்காகப் போராடும் இவ்வேளையிலே, மலையக மக்களாகிய நாமும், நம்மாலியன்ற நல்ல காரியங்களை நற்றமிழன்னைக்காகச்செய்ய முன்வர வேண்டும்.

முன் செப்பியது போல் எது விதமான இழப்போ, அன்றி எதிர்ப்போ இன்றி, எல்லாம் தமிழில், எல்லா விடங்களிலும் கருமமாற்றத் துணிய வேண்டும். பேச்சிலும், நம் மூச்சிலும், வாக்கிலும், நம் போக்கிலும் தமிழ் மணந் திகழ வேண்டும், தமிழ்ச்சுடர் ஒளிர வேண்டும். வீட்டிலும். மலைநாட்டிலும் தமிழ் முழங்க வேண்டும். தமிழ் தெரிந்த அனைவரிடத்தும் தமிழிலே பேசித் தமிழிலே தொடர்பு கொள்ள வேண்டும். அரட்டை அடிக்கும் காரியம் முதல், அரசாங்கத் தொடர்புவரை அனைத்தும் தமிழிலேயே நடத்த வேண்டும்.

தமிழ்த் தலைவர்கள் வந்து தான் மலையகத்தில் தமிழியக்கம் ஆரம்பிக்க வேண்டுமென்பதல்ல. தன்மானமுள்ள தமிழர்களாகிய நாம் அனைவரும் நமக்கு நாமே தலைமை தாங்கித் தனித் தமிழில் கருமமாற்றுவதற்கு உறுதி பூணுவோமாக. இதன் மூலமாக, வட, கிழ் மாகாணத் தமிழ்ச் சோதரரோடு, மலையக மக்களாகிய நாமும் நம் தமிழ் அன்னைக்குத் தக்க பணி செய்தவர்களாவோம்.

என்றும் எங்கும் தமிழ் மணக்க, இன்றே இங்கே உறுதி கொள்வோம்.

# மானத்தை இழந்து வாழும்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் அவர்களுக்கு நெஞ்சிலே உரமில்லையா? கைகளிலே வலிவு தான் இல்லையா? தன்னைத் தானே நம்பிக் கொண்டு தான் இந்தப் போராட்டத்தில் இறங்க வேண்டும்!

மொழியை இழந்து, உரிமைகளை இழந்து வெறும் மனித ஜடமாய் வாழ்வதை விட, மொழியைக் காக்கும் போரிலே மடிவதை தமிழன் பெருமையாகக் கருதுவான்! மானத்தை இழந்து வாழும் மனித ஜென்மத்திலே தமிழன் பிறக்கவில்லை என்பதை பண்டா சர்க்கார் அறியும் வாய்ப்பை நிச்சயமாகப் பெறும் என்றே நினைக்கிறோம்!

இலங்கைத் தமிழ்ப் பெரியார் திரு. செல்வநாயகத்தின் வைர நெஞ்சம், தளராத உறுதி வெற்றியைத் தேடித்தரும், சிங்கள வெறியர்களைப் பணிய வைக்கும் என்பதில் எங்களுக்குத் துளியும் சந்தேகமில்லை!

நீண்ட நெடு நாளாக இருந்து வரும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைத் தேடித் தந்துவிட வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோளாகும்!

வெற்றியோ, தோல்வியோ, வாழ்வோ, சாவோ அதைப் பற்றி அக்கறைப் பட தேவையில்லை! "வாழ்ந்தால் உரிமையோடு வாழ வேண்டும், இல்லையேல் செத்து மடிய வேண்டும்" என்ற முடிவுக்கு இலங்கைத் தமிழர்கள் வந்துவிட வேண்டும்!

தமிழர்களின் போராட்டம் நியாயமான போராட்டம், நேர்மையான போராட்டம்! என்பதில் எவருக்குமே சந்தேகம் கொள்ள முடியாது!

பண்டா சர்க்கார் மொழி வெறி பிடித்து, தமிழர்களை அழிக்கும் கொடுமையை எந்த மனித உள்ளமும் தாங்கிக் கொள்ளவும் கொள்ளாது!

ஈழத்திலே புறப்பட இருக்கும் வேழப் படையை எல்லோரும் வாழ்த்துவார்கள், போற்றுவார்கள்! பாராட்டி மகிழ்வார்கள்!

திரு. செல்வநாயகத்தின் வாழ்த்தோடு புறப்படும் ஈழத்தின் தமிழ் வேழப் படையை நாங்களும் வாழ்த்தி, களத்திற்கு வழி கூட அனுப்பி வைக்கிறோம்!

ஒழியட்டும் சிங்கள வெறி!

வாழட்டும் தமிழர் இனம்!

# மகா கவி அல்லாமா

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக சரித்திரத்தில் உங்கள்

அடிச்சுவடும் இல்லாது போகும்' எனவும் கூறி புது வேகத்தோடு போராடும்படி தூண்டுகிறார்.

சமயத்தால் வேறுபட்டவராக இருந்தும் 'மதம் ஒருவரோடொருவர் சண்டை போடச் சொல்லவில்லை' என்ற அவரது கொள்கைக் கொப்ப மக்கள் யாவரும் ஒன்றே குலம் என்ற தத்துவார்த்தமாக, புதுக்கோயில் வேதனைச் சித்திரம்—குழந்தைகள் கீதம்—சுவாமி ராம கீர்த்தர்—ராம்- ஹிமாலயம்-பறவையின் குரல்-ஆரியன், ஆதிய அரும் படைப்புகளை நூல் வடிவத்தில் வடித்தெடுத்து சைவ சமயத்தை மதித்து மரியாதை செய்தார்.

### அல்லாமாவின் அந்திவேளை

வாழ்வெனும் வசந்த காலம் முடிவுற்றது. பாங்கே தாரா-பயாமே மஷ்ரிக்-ஸபூரே அஃஜம்-பாயே ஜிப்ரியில்-அர்முகானே ஹிஜாஸ்- அஸ்ராரே குத்யி—ரமூஸே பேகுத்யி—புஸ்ஸாப் பாஸாத்—ஜாவீது நாமா, ஆகிய சிறந்த அதி விசேடமான கவிதைகளைத் தந்த கவிஞர் கரங்கள் சோர்வுற்றன. தத்துவங்கள் பல எடுத்தோதிய நாவு "ஒரு கலந்தரின் (பற்றற்றவரின்) தத்துவத்தை நான் வெளியிட்டுள்ளேன், அதன் மூலம் மதரஸாக்களிலும், காங்காஹ் எனும் தியான மடங்களிலும், சிந்தனை தன் விலங்குகளில் இருந்து விடுபடுமாக" என இறுதியாகக் கூறி வலுவிழந்தது. உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிய மகா கவியின் வீரமான கவிதா கற்பனை மங்கியது. அவரது அறுபத்தைந்தாவது வயதில் இலக்கிய ரசிகர்களையும், இணையற்ற இலக்கியத்தின் இன்பப் பூங்காவையும் பூத்துக் குலுங்க விட்டு விட்டு நாடும்-ஏடும் ஏங்க 1938ம் வருடம் ஏப்ரல் மாதம் 21ம் திகதி இறையடி சேர்ந்தார்.

'இக்பால் அவர்களின் மரணம் இந்திய இலக்கியத் துறையில் ஈடு செய்ய முடியாத ஒரு இடை வெளியை [illegible]

மகா உலக கவி இக்பால் புகழ் என்றென்றும் வாழ்க!





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைத் தமிழரின் இன்றைய நிலை

—கோவைச் சிவன்—

ஒரு நாட்டில் பல மொழி பேசும் இனத்தவர்கள் இருக்கலாம், பெரும்பான்மை, சிறுபான்மை இனத்தவர்கள் இருக்கலாம். ஆனல் அவர்கள் யாவருக்கும் மொழியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை, சமமாக வழங்கப்பட்டு அந்நாட்டில் நடத்தப்படல் வேண்டும். அப்பொழுதுதான் சோஷலிச அரசாங்கம் உருவாகும். சனநாயகம் நாட்டில் தழைத்தோங்கும். இந்த ரீதியிலே இலங்கை அரசாங்கத்தை எடுத்துப் பார்த்தால், உதட்டளவில் சோஷலிஸமும் செய்கையளவில் சர்வாதிகாரமும் கொண்டிருக்கிறது.

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கட்கு மொழியுரிமை பறிபோய்க் கொண்டிருக்கிறது. இலங்கை வாழ் சிறுபான்மை இனத்தவராகிய தமிழ் மக்களை அணு அணுவாகச் சிதைத்துக் கொண்டிருக்கிறது இலங்கைஅரசாங்கம். அது மாத்திரமல்ல. நம் இலங்கைத் தீவின் பொருளாதாரம் சிறந்து விளங்க, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, பாடுபட்டுழைத்த பாட்டாளி மக்கள் பசியால் தவிக்கின்றனர், இருக்க இல்லிடமில்லாமல் தவியாய்த் தவிக்கின்றனர். ஏன்? அவர்கள் தமிழர்களின் ஒரு பகுதி! அவர்களுக்குக் குடியுரிமையில்லை, வாக்குரிமையில்லை, மொழியுரிமையில்லை, எனவே அவர்கள் "நாடற்றவர்கள்" என்ற கோதாவில் அனதைகளாக்கப் படுகின்றனர். சோல்பரிக் கொமிஷனரால் சிறுபான்மையினத்தவருக்கெனச் சட்டத்திலே இயற்றப்பட்ட பாதுகாப்புக்கள் இன்று சரியான முறையில் இலங்கை அரசாங்கத்தாரால் கைக்கொள்ளப்படவில்லை.

இலங்கையிலே தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளை உதாசீனம் செய்துவிட்டே பாராளுமன்றத்திலே சகல மசோதாக்களும் அமுலாக்கப்படுகின்றன. தற்போது தனிச் சிங்கள மசோதா மெல்ல மெல்ல மறத்தமிழரைப் பாதிக்க வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை நீண்டுகொண்டே வருமானல் 1965க்குள் இலங்கை ஒரு தனிச் சிங்கள நாடாகும் என்பது திண்ணம். இந்த நிலையிலேதான் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமையில் கத்தியின்றி, இரத்தமின்றி சாத்வீக முறையில் தனிச் சிங்கள மசோதாவை எதிர்த்துப் போராட போர்க்களம் நோக்கிப் புறப்பட்டிருக்கின்றனர். அதற்குத் தகுந்த முறையில் ஆதரவளிப்பது நம் கடன். பாயமராய், விலங்குகளாய், இகழ்ச்சி சொல, பான்மை கெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றல்ல. தேமதுரத் தமிழோசை இலங்கையெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இப்போராட்டத்திலே சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்!

ஒரு தேசத்திற்கும், ஒரு இனமக்களுக்கும் முதலில் தேவையானது சுதந்திர தேவியின் ஒளி. சுதந்திர மின்றேல் சுபீட்சமில்லை. சுதந்திரமற்ற நாட்டிலே உயிரற்ற நடைப்பிணங்கள் தானுண்டு. செம்மையான அறிஞர்கள் இல்லை. அங்கே ஆக்கம் இல்லை. ஊக்கம் இல்லை. காவிய நூல்கள், ஞானம் பொருந்திய கலைகள், வேதங்கள் இல்லை: சுதந்திர தேவியின் அருளைப் பெருதவர்கள் பாவியர்களாம். இதை நான் கூறவில்லை. பாரதியார் கூறுகிறார்:

"தேவி! நின்னொளி பெருத
தேயமோர் தேயமாமோ?
ஆவியங்குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கம்
உண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்களுண்டோ?
பாவியரன்றோ நின்தன்
பாலனம் படைத்திலாதார்!"

எனவே இந் நாட்டில் தமிழ் மக்கள் சுயாட்சியுடனும், சுய உரிமையுடனும் வாழவேண்டுமானல் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், தமிழரசுத் தந்தையின் தலைமையின் கீழ் நடைபெறப் போகும் சாத்விகப் போராட்டத்தில் சேர்வோம். [illegible] தோடு, நேசக்கரம் நீட்டி அழைப்போமாக!

## தமிழ் மகனே!

க. செல்வநாயகம்,
மாதகல்.

உனது மொழியைத் தமிழ் என்று கூறு!
உனது கலையைத் தமிழ்க் கலை என்று சொல்!
உனது பண்பைத் தமிழ் பண்பு என்று கருது!
உனது நாட்டைத் தமிழ் நாடு என அழை!
நீ தமிழன் என நினை! மறவாதே!
மறந்தால், உனக்கு வாழ்வில்லை.

## முத்துத் தமிழ்

—"அக்கரை மாணிக்கம்"—

முத்துப் போல் மூன்றுதமிழ்
முச்சங்கம் வளர்த்த தமிழ்,
பத்துப் பாட் டெட்டுத்தொகை
பரணி வகை கண்ட தமிழ்.

★

மூவேந்தர் வளர்த்த தமிழ்
முக்கண்ணன் அளித்த தமிழ்,
பாவேந்தன் பாரதியின்
பண்ணில் உறவாடுந்தமிழ்.

★

கம்பனெடு இளங்கோவும்
கவிதை மழை பொழிந்த தமிழ்,
உம்பர்களும் போற்றுகின்ற
உயர்வு மிக்க தெள்ளு தமிழ்!

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 2

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




—க. இராணி நவமணி—

'விட்டு விடுங்கள்! அது தான் நடக்காது. யானை வாய்க்கரும்பும், பாம்பின் வாய்த் தேரையும் திரும்பப் பார்த்திருக்கிருயா? பார்த்திருந்தால் நீங்கள் தப்பலாம். உங்களை எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொணர்ந்து சேர்த்திருக்கிறேன். 'எங்களை விட்டு விடுங்கள்' என்ருல் விட்டு விடுவேன? என் காரியம் நிறைவேற வேண்டும். அதற்காக எவ்வளவு காலமாக எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்து வருகிறேன். இதற்கு முன் பத்து அரசர்களால் செய்ய முடியாத, மடிந்து போன காரியத்தை நான் சாதிக்கப் போகிறேன். சாதித்தே தீருவேன். அதற்கு எத்தனை உயிர்கள் பலியானலும் சரி; எவ்வளவு பணம் செலவழிந்தாலும் சரி; இந்தக் காரியம் நிறைவேறும் வரைதான் நாட்டில் கொள்ளையும், பெண்கடத்தும் நடைபெறும். அதன் பின் இந்தக் காட்டிற்கு நானே இராசா! உங்கள் நாட்டிற்கும் தான்! அது வரை பொறுத்திருங்கள். உங்களுக்கு இன்னும் இரண்டு நாள்தான் இவ்வுலகில் இருக்க முடியும். உங்களுக்காக இயமன் கதவைத் திறந்து காத்துக் கொண்டிருக்கிருன். உங்களைச் சீக்கிரமே அனுப்பி விடுகிறேன். நீங்கள் அங்கு போய்ச் சேரவும் நான் அந்த மலைக்குகை மாளிகையின், பத்து இராசாக்களாலும் திறக்க முடியாமற்போன ராட்சசக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போகவும் சரியாக இருக்கும்.'

'அந்த மலைக்குகை மாளிகையில் விலை மதிக்க முடியாத மாணிக்கம், மரகதம், வைடூரியம், முத்து என்பன இருக்கின்றன. அவற்றை எடுக்க முயன்ரேர் இது வரை மடிந்தனர். முட்டாள்கள்! தேன் எடுக்க வேண்டுமானல் பல ஈக்களைக் கொல்லாமல் எடுக்க முயன்ருல் ஈ கொட்டத் தானே செய்யும்? அதுதான் நான் நூறு கன்னியர்களைப் பலியிட்டு விட்டு எடுக்கப் போகிறேன்.'

'அதில் ஒரு கல்லில், பத்து இராசாக்களையும் நூறு கன்னியர்களையும் பலியிட்டால் கதவு தானகவே திறந்து விடுமென்று எழுதப்பட்டிருக்கிறது. (அதில் எழுதப்பட்டிருப்பது உண்மையில் 10 இராசாக்களும் 100 வீரர்களுமென்றுதான்.) இதற்கு முன் இராசாக்கள் மடிந்து விட்டனர். இன்னும் நூறு கன்னியர்கள்தான் பாக்கி. நீங்கள் 70 பேர் சேர்ந்து விட்டீர்கள், இன்றும் நாளையுமாக மற்ற 30 பேரும் வந்து சேர்ந்து விடுவார்கள்; இன்று 6ம் திகதி. இன்னும் இரண்டு நாட்களின் பின் 9ம் திகதி. சரியாகப் பகல் 12 மணிக்கும் 1 மணிக்குமிடையில் நீங்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக இயமன் கோட்டையை அடைந்து விடலாம், ஞாபகமிருக்கட்டும்.'

'அட பாவி! நீ ஒரு மனிதனு? ஒருவன் சுகத்திற்காக என்ன அநியாயம் செய்யத் துணிந்தாய்? நீ நல்லாயிருப்பாயா? அந்த இராசாக்களுக்கு வந்த கதிதான் உனக்கும் வரும்!' அந்தப் பெண் கதறினுள்.

'என்ன கூறினய்?' என்று கூறிக்கொண்டு பலமுறை அடிக்கிருன் அவன். வலி பொறுக்க முடியாது வாடிய மலர்க் கொடிபோல், அவள் சாய்ந்துவிட்டாள். 'ராசாக்களுக்கு நேர்ந்த கதி எனக்கும் நேர நான் என்ன முட்டாளா? அதற்குப் பதிலாகத்தானே உங்கள் நூறு பேரையும் கொடுக்கப் போகிறேன்!'

(தொடரும்)



மேலே நீந்திக்கொண்டிருப்பவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஜொனி வெயிஸ்முல்லர் என்பவர். நீச்சல் மூலம் புகழ் பெற்ற இவர், ஈற்றில் ஓர் சினிமா நடிகரானுர். அவர் 'டார்ஸன்'கப் பல படங்களில் நடித்துப் புகழீட்டியுள்ளார்.

வீடுகளிலேயே அமைக்கக்கூடிய நீச்சற் குளங்களைத் தற்போது தயாரித்தளித்து வருகிருர் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## "கலைஞன் என்றுமே தனி மனிதன்"

### எழுத்தாளர் சங்க கருத்தரங்கம்

சனிக்கிழமை 30-3-63ல் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் திரு. பொன்னையா நினைவு தின விழாவை ஒட்டி நடாத்திய கருத்தரங்கத்தில் விமரிசனம் பற்றிப் பேசிய திரு. தரும சிவராமு அவர்கள், சோஷலிஸ யதார்த்தவாதம் கலைஞனை வெறும் சமூகத்தின் குரலாக மாற்றி விடுகிறது என்றும், கலைஞன் என்றுமே தனி மனிதன் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், பாரதி அடிக்கடி பராசக்தியைப் பாடியிருக்கிருரே என்று முகத்தைச் சுளிப்பவர்கள் பராசக்தியை அவன் மூலசக்தியாகக் கருதினுன் என்பதையும் அவ்வடிவம் அதைக் குறிக்கும் ஓர் புராணிகக் குறியீடு என்பதையும் மறந்து விட்டார்கள் என்று சொன்னுர்.

புதுமைப் பித்தன், மரபிலிருந்து பிறழவில்லையென்றும் மரபு ஒரு மரத்தின் இலைபோலப் பழுத்தாலும் பச்சையாகியிருந்தாலும் ஒரே தன்மையது என்றும் குறிப்பிட்டார்.

நாடகம் பற்றிப் பேசிய திரு. செ. சண்முகநாதன் சினிமா பாணியைப் பின்பற்றிஅது வளர்ந்து வருவது விசனத்துக்குரியதென்றும் அதிகப் பெண்கள் நடிக்க முன்வரவேண்டும் என்றும் தன்னுடைய பேச்சில் வற்புறுத்தினுர்.

இலக்கணக் கட்டுப்பாடு களைமுழுக்கக் கட்டிக்கொண்டு மாரடிக்கா விட்டாலும் உரைநடை செம்மையும் சிறப்புமுடைத்தாயமைதல் வேண்டும், என்ருர் திரு. பொன் முத்துக்குமாரன்.

திரு. சி. ஸ்ரீநிவாசன் கூட்டத்துக்கு தலைமை தாங்கினுர்.

---

### இந்து மாணவர் மன்ற பொதுக் கூட்டம்

கம்பளை ஸஹிராக் கல்லூரியில் மேற்படி கூட்டம் 31—3—63 சனிக்கிழமை பி. பகல் 2-30 மணியளவில் நடைபெற்றது. திரு. வே. கணேஷ்வரன், பி. எஸ். ஸி. தலைமை வகித்தார். செல்வன் சி. சுதந்திரராஜாவின் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமானது. திரு. கா. சிவத்தம்பி பி. ஏ. "ஏன் சமயங்கள் தோன்றின" என்ற தலைப்பின் கீழ் சொற்பொழிவாற்றினுர். திரு. சா. சபா ஆனந்தர் "மனித வாழ்க்கையும் சமயமும்" என்ற பொருள் பற்றிச் சிறப்புற எடுத்துக் கூறினுர்.

பின்னர் திரு. எஸ். வி. ஆறுமுகம் "சமய சமரசம்" பற்றிச் சொற்பொழிவாற்றினுர். செல்வி. க. விஜயலட்சுமி வயலின் இசை விருந்தளித்தார். தலைவரின் முடிவுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

---

### நீச்சல் வீரனுக்கு தேன் தமிழ் மன்றம் வாழ்த்து

'அன்புள்ள ஆனந்தன் அவர்கட்கு! தாங்கள் என்றும் ஆனந்தமாக வாழ ஆண்டவன் அருள் புரிவானுக!

ஆங்கிலேயர்கள் ஆழ் கடலில் அடியெடுத்து வைக்க அஞ்சிய நேரத்தில் வங்கம் விட்டு தங்கம் சேர்ந்த சிங்கத் தமிழர் நாம் என்பதை தாங்கள் நிரூபித்து தமிழன் பெருமையை தரணிக்கு உயர்த்தி விட்டீர்கள். பாக்கு நீரிணையைக்கடந்தது மல்லாமல் கடலிலே 42 மணி நேரம் வாழ முடியும் என்பதையும் உலகிற்கு எடுத்துக் காட்டி விட்டீர்கள். உங்கள் போன்ற வீரம் மிக்க இளைஞர்களால் தாய்த் தமிழகத்திற்கும் நமக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போகாதென்பதையும், திடமாகக்கூற விரும்புகின்ருேம். தங்களின் இத்துணிவினுல் பல இளைஞர்கள் உள்ளத்தில்,ஊக்கத்தையும், உணர்ச்சியையும் பெற்று, உரிமையிழந்து வாழும் தமிழ் மக்களுக்கு உரிமை பெற்றுவாழ வழிஅமைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. தங்களின் உள்ளத்துணிவு வாழ்க, வளர,வெல்க என வாழ்த்துகிருேம்.'

இவ்வாறு தேன் தமிழ் மன்றம், நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு பாராட்டுச் செய்தி அனுப்பியுள்ளது.

---

### பெற்ருேர் தின விழா

மத்திய மலையகத்திலுள்ள கெங்கல்ல அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை(31-3-63) பெற்ருேர் தின விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடந்த விழாவுக்கு திரு. வை. எம். டபிள்யூ அபயரத்தின அவர்கள் (கண்டி பெரும்பாக வித்தியாதரிசிகர்) தலைமை வகித்தார்கள். அன்னுர் தமது தலைமையுரையின் போது தலைமையாசிரியரின் திறமையையும், ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் மிகவும் பாராட்டினுர். பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட திரு. யூ. பி. வை. ஜினதாச அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர், குண்டசாலை) பாடசாலை விரைவில் ஒரு மாவித்தியாலயமாவதற்கு அங்குள்ள பெற்ருேர்கள் முயற்சியெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அடுத்துப்பேசிய பிரதம விருந்தினரான யோகிராஜ் ஸ்ரீஸ்வாமி சச்சிதானந்தாஜி அவர்கள் ஆத்மீகக் கல்வியின் அவசியத்தையும், சிறப்பையும் தமிழிலும், ஆங்கிலத்திலும் அழகாக எடுத்துக் கூறினுர்கள்.

தமிழ்மொழி வாழ்த்துப் பாவுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. தலைமையாசிரியர் திரு. இ. தம்பிராசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினுர். அதைத் தொடர்ந்து சிறுவரின் ஆலய அமைப்புக் காட்சியும், சிங்களப் பாட்டும் தாள நடனமும், கோலாட்டமும், "கண்டி கண்ட கண்ணப்பன்" வில்லுப் பாட்டும் பூஜா நடனமும், "வெனிஸ் வர்த்தகன்" என்னும் ஆங்கில நாடகமும், "போடியார்" என்னுங் குட்டி நாடகமும், "சுட்ட பழமா? சுடாத பழமா?" என்னும் முருகன், ஒளவை பற்றிய காட்சியும், மாணவியரின் கிராமிய நடனமும் "கடமையும் கண்ணீரும்" என்னும் சமூக நாடகமும், நடை பெற்றன. ஈற்றில் தேசிய கீதத்துடன் பெற்ருேர் தின விழா எல்லோரும் பெருமை கொள்ளும் வண்ணம் நடைபெற்று முடிந்தது.

---

## இப்படியும் நடந்தது!

### மாஸ்டர் சிவலிங்கம்

தமிழரசுக் கட்சியைத் தூற்றுவதையே பொழுது போககாகக் கொண்ட ஒருவர், சத்தியாக்கிரக இயக்கம் தொடங்குவதற்கு முன் ஒருநாள் என்னைக் கண்டதும் "என்ன தம்பி! இந்தத் தமிழரசுக் கட்சிக்காரர்! மேடையில் பேசுவதைவிட ஏதாவது போராட்டங் கிராட்டம் நடத்தினுல் என்ன? துணிவு இருந்தால் தானே இவர்களுக்கு..." என்று கிண்டல் செய்தார்.

சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கி அடுத்த தினத்தில் அவர் என்னைச் சந்தித்ததும், "தம்பி! இவர்களுக்கு ஏன் இந்தத் தேவையில்லாத வேலை? போராட்டமாவது மண்ணுங்கட்டியாவது. இவர்கள் போராடினுற்போல உரிமை கிடைத்துவிடுமா? என்று அலுத்துக் கொண்டார்.

சத்தியாக்கிரகம் உச்சக் கட்டத்தை அடைந்த நேரத்தில்—பல கோணங்களிலுமுள்ள மக்கள் அமோக ஆதரவளித்த நேரத்தில் அந்த விசித்திர மனிதர் "தம்பி! நான் மட்டுமென்ன தமிழனில்லையா? எனக்குத் தமிழ் உணர்ச்சி இல்லையா? வாழ்க சத்தியாக்கிரகம்! வளர்க தமிழ் மொழி!" என்று கூறிக்கொண்டே கச்சேரிப் பக்கத்தில் நடமாடித் திரிந்துகொண்டிருந்தார்.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுத் தொண்டர்கள் நையப் புடைக்கப்பட்டபோது "இவர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும்வேண்டும். இந்தப் போராட்டம் வெற்றி பெருதென்று எனக்கு முன்பே தெரியும். மொழியாவது உரிமையாவது...வயிறு நிறையச் சோறு கிடைத்தால் போதாதா" என்ருர் அந்த விசித்திரச் சாப்பாட்டு ராமன்!

---

### ஆனந்தனுக்கு வரவேற்பு

#### திருக்குறள் நாடக மன்ற தீர்மானம்

திருக்குறள் நாடக மன்றக் கூட்டம் 8—4—63ல் அதன் பணிமலையில் கூடிய போது, எதிர்வரும் 27—4—63ல் தனது 3-வது இறுதி ஆண்டு விழாவைக் கொண்டாடுவதென்றும் நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு வரவேற்பு அளிப்பதென்றும் முடிவு செய்தது. மன்றத்தின் அடுத்த நாடகம் வெளிவிடுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. பின்வருவோர் நடப்பு வருட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. புதுமைலோலன், உப-தலைவர்: திரு. தெல்லியூர் கணேஷ், செயலாளர்: திரு. க. வன்னியசிங்கம், இணைச் செயலாளர்: திரு. சு. குணராசா, பொருளாளர்: திரு. க. சுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: திரு. சு. மரியாம் பிள்ளை. 5 பேர் கொண்ட ஓர் செயற் குழுவும் தெரிவு செய்யப் பட்டது.

---

## முடிசாய்ந்த மன்னர்களின்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### நடேசபிள்ளையும் பொன்னம்பலமும்

தமிழரசுக் கட்சி தன்னுடைய சமஷ்டிக் கொள்கையை விட வேண்டும். அதை எந்தச் சிங்கள அரசாங்கமும் தர மாட்டாது என்கிருர் திரு. பொன்னம்பலம். திரு.நடேசபிள்ளை தமிழுக்கு அந்தஸ்துக் கேட்பதே கூடாது எப்பொழுதோ சிங்களத்தை ஏற்று விட்டோம் என்கிருர். தமிழரசுக் கட்சி கேட்பதைக் கொடுக்கிருர்களா? திரு. பொன்னம்பலம் கேட்பதைக் கொடுக்கிருர்களா? திரு. நடேசபிள்ளை கேட்பதைக் கொடுக்கிருர்களா? பார்ப்போம். இதற்கு ஒரு நல்ல வழி இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு தமிழ் மக்களை அடிமையாக்க வழியிருக்கிறதோ அவற்றைக் கேட்கிறது. உடனே சிங்கள அரசாங்கம் 'வழங்கினேன் வழங்கினேன்' என்று மகிழ்ந்து தருவார்கள். தமிழரசுக் கட்சி தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான உறுதியான, அழிவற்ற ஒரு தீர்வைக் கேட்கிறது. அதனுல் தமிழினம் தலை நிமிர்ந்து வாழப் போகிறது. அதை அவர்கள் வழங்க மாட்டார்கள். தமிழன் தாழ்வுற ஒரு வழி இருக்கிறது, அதை இரண்டு கைகளினுலும் அள்ளித் தந்தால் போகிறது. அதைப் பெற்றுக் கொண்டு 'பார்த்தாயா? நான் கேட்டேன் தந்துவிட்டான் கேட்கிற மாதிரியல்லவோ கேட்க வேண்டும்?' என்று மார்பைத் தட்டிக் கொண்டு மாலை போட்டுக்கொண்டு மந்திரிப் பதவியில் நுழையலாமல்லவா? தமிழரசுக் கட்சி நூறு கேட்கிருர்கள். எண்பதுடனுவது அவர்களைச் சமாதானம் செய்யலாம். ஆனுல் திரு.பொன்னம்பலம் சிங்களத் தலைவர்களுக்குச் சொல்லுவது, 'ஏன் எண்பதைக் கொடுக்கிறீர்கள்? இருபதோடு நான் பிரச்சினையைத் தீர்க்கின்றேனே' என்றுதான். இன்னும் ஒரு படி முன்னே போய், நடேசன் அவர்கள் 'அடேயப்பா ஒன்றும் வேண்டாமே, சிங்களத்தை ஏற்றுக் கொள்கிருேம். அடிப்படை யென்ற பேரிலே ஏதோ ஒன்றைச் சொல்லுங்கள்; மக்களுக்கு ஏதோ ஒன்றைச் சொல்லித் தொலைப்போம்' என்கிருர்கள். உண்மையாக வட்ட மேசை மகாநாடு ஒன்றுகூடினுல் நடக்கப் போவது இதுதான். அந்த வட்டமேசை மகாநாட்டிலே மக்களின் அபிலாஷைகளைச் சொல்ல எத்துணையும் அருகதையற்ற பிரதிநிதிகள் தான் பெரும்பான்மையாக இருப்பார்கள். தமிழ் மக்களை அடிமையாக்கும் சதியிலே ஊறிப்போன சிங்களத் தலைவர்களும், அவர்களின் திட்டங்களை "ஆகா இதல்லவோ வாழ்வு தமிழருக்கு!" என்று சபாஷ் போடும். மக்களால் விரட்டப்பட்ட பழைய செல்லாக் காசான தலைவர்களே பெரும்பான்மையாக இருப்பார்கள். இதிலே, மக்கள் பிரதிநிதிகளாகிய தமிழரசுக் கட்சியினரின் குரல் கேட்காது. ஆகவே, தமிழரின் குரலே அங்கு கேட்காது. தமிழரசுக் கட்சி தன்னுடைய மிகக் குறைந்த பட்சக் கோரிக்கையை அரசாங்கத்துக்கு அறிவித்து விட்டது. அது அவர்களுக்கு முடியாதது என்ருல் வட்ட மேசை மகாநாடு எதற்கு? அதிலும் மிகக் குறைந்தனவற்றைச் செல்லாக் காசான தமிழ்த் தலைவர்கள் சொல்ல எல்லாரும் ஏற்றுக் கொள்வதற்கே.

இது மிகவும் அபாயமான கட்டம். தமிழர்கள் போராடிக் களைத்து மீண்டும் போராட்டத்துக்கு ஆயத்தப் செய்யும் நிலையிலே சிங்கள எஜமானர்களிடம் சென்று 'நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். நாங்களே எங்களுக்குக் கழுத்திலே கயிற்றைப் போடுகிருேம். அது மாத்திரமின்றிச் சமாதானமாக எங்கள் பிறக்காத பிஞ்சுக் குழந்தைகளுக்கும் அடிமைத் தளையைப் பூட்டுகிருேம்' என்று சொல்லத்தான் இந்த வட்ட மேசை மகாநாடு.

### வட்ட மேசை மாநாட்டின் இரகசியம்

தமிழினத்துக்கு ஆபத்தான கட்டம் இது. திரு. பொன்னம்பலம் சொல்லும் இரண்டாவது வழி என்னும் ஒத்துழைப்பு என்பது சரணுகதி. அவர் சொல்லுவது மிகத் தெளிவாகத் தெரிகிறது. 'ஆயுதத்தால் போர் புரிவோம். இயலாது. சரணுகதியடைவோம். அப்படியான சரணுகதிக்கு நான் மாத்திரம் போனதாக இருக்கக் கூடாது. தமிழரசுக் கட்சியினரையும் இழுத்துச் சரணுகதியடையச் செய்து இனம்முழுவதையும்அடிமையாக்கி விடுவோம்.' இது தான் வட்டமேசை மகா நாட்டின் இரகசியம்.

ஐயாமார்களே, தனிப் பெருந்தலைவர்களே, நடேச பிள்ளை அவர்களே உங்களை ஒன்று கெஞ்சிக் கேட்கிருேம். சோல்பரி அரசியலால் நாம் அடைந்த இக்கட்டுகள் கொஞ்சநஞ்சமல்ல. அன்று தமிழினம் முற்றுமே எதிர்த்து நிற்கக் "கிட்ட தாயின் வெட்டென மற" வென்று கூறித் தன்னந்தனியாய் வாக்களித்து அடிமைத் தளையை ஏற்றுத் தந்தீர். அந்த இன்னல்களை அனுபவித்து தியாகத் தீயில் குதித்து நிரந்தரமான ஒரு தீர்வு காணுவதற்கிடையில், சிங்களத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று அரசாங்கத்துடன் இணைந்து பதவி ஏற்றுக் கொண்டீர். அவ்வளவோடு நின்று கொள்ளுங்கள். தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வந்து, பிறக்காமல் இருக்கும் தமிழ்க் குழந்தைகளின் திட்டுக்கு ஆளாகாதீர்கள். இந்தத் தீவிலே உங்களுக்கு எந்தவித அக்கறையுமில்லை. வருங்கால சந்ததி எங்களுடையது. அதை அடிமை நுகத்தில் பூட்டும் கைங்கரியத்தை நிரந்தரமாகச் செய்யவேண்டாம்.

### சற்றே விலகி இரும் பிள்ளாய்

திரு. பொன்னம்பலம் அவர்களே. சொற் சிலம்பம் வேண்டாம். எதிர்ப்பிலே ஒரு ஒத்துழைப்பு, நெருப்பிலே ஒரு தண்ணீர், ஒளியிலே ஒரு இருள், பகலிலே ஒரு இரவு இப்படி அடுக்க வேண்டும், இன்று ஏழுவருடமாக பொருது வைத்த எதிர்ப்புக் கோட்டையை அரை நிமிஷத்தில் தகர்க்க வேண்டும், தமிழரசுக் கட்சியிலே கோபத்துக்காகத் தமிழினத்தை விற்க வேண்டும், என்று பிடிவாதம் பிடிக்காதீர்கள். ஐம்பதுக் கைம்பது போராடிச் சேனநாயக்காவோடு ஒத்துழைத்துக் கண்ட பலன் போதாதா? கொஞ்சம் தமிழர்களாகிய எங்களை உய்ய விடுங்கள். சற்றே விலகியிரும் பிள்ளாய் என்று கூறவேஆசைப் படுகிருேம்.

இந்த வட்ட மேசை மகா நாட்டால், நீங்கள் யூ. என். பி. யில் சேர வாய்ப்புக் கிடைக்கும். திரு. நடேச பிள்ளை ஏற்கெனவே சிறீலங்கா கட்சியிற் சேர்ந்து விட்டால் அப்புறம் திரு. நடேசனுக்கு மந்திரிப்பதவி, உங்களுக்கும் மந்திரிப் பதவி. ஆனுல் தமிழ் மக்களுக்குக் கிடைப்பன இரத்தம், வியர்வை, துப்பாக்கிக் குண்டு, அடிமைத்தளை, கற்பழித்தல், துன்பம், கண்ணீர் என்பனவாம். அத்தனையையும், மீண்டும் பெற்றுத் தரவா இந்தத் திட்டங்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-வது வெற்றி வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ரொக்ஸி** (வெள்ளவத்தை)

**ராணி** (யாழ்ப்பாணம்) **வேல்ஸ்** (கண்டி) **ஜோதி** (திருகோணமலை) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு)




ஸ்ரீதரின்

# நெஞ்சில் ஓர் ஆலயம்

ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெறும்
ஒரே ஒரு தமிழ்ப் படம்

இசை: விஸ்வநாதன்—ராமமூர்த்தி

28 நாட்களில் தயாரித்து 175 நாட்களுக்கு மேல் ஓடிய,
இந்திய ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்.

---

ஆவலோடு எதிர்பார்த்த அதி உன்னத திரைச் சித்திரம்!

# ஏப்ரல் 26ந் திகதி முதல்!

சென்னையில் நான்கு படமாளிகையில்
100 வது நாள் விழா கொண்டாடிய
மகத்தான திரைச் சித்திரம்!


**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)

**மொடர்ன்** (பண்டாரவளை) **லக்ஷ்மி** (இரத்தினபுரி) **விஜிதா** (ஹட்டன்) **ஜெமினி** (ராகலை)



உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்!
உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்!!
ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய
பைந்தமிழ் காவியம்.

சிவாஜி கணேசன்-பி. சரோஜாதேவி
எஸ். எஸ். ராஜேந்திரன்
ஆர். விஜயகுமாரி
மற்றும் பலர் நடிக்கும்



பி.எஸ்.வி. பிக்சர்ஸ்


# ஆலயமணி

---

2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரெக்ஸ்** (பொரளை)
**அசோகமாலா** (நீர்கொழும்பு) **கிங்ஸ்** (பதுளை)
**ரீகல்** (கம்பளை) **வின்ஸர்** (யாழ்ப்பாணம்) **நெல்சன்** (திருமலை)
**இம்பீரியல்** (மட்டக்களப்பு) **ரீகல்** (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், சாவித்திரி,
எம்.என்.ராஜம், எஸ்.வி.சுப்பையா,
வி. கே. ராமசாமி, ஏ. கருணாநிதி,
வி. ஆர். ராஜகோபால், எஸ். வரலட்சுமி,
முத்துலட்சுமி, மனோரமா
தோன்றும் உன்னத சித்திரம்




7 வது வாரமாக
கெபிட்டல் திரையில்

சிவாஜி கணேசன்—சாவித்திரி
சந்திரபாபு—எம். ஆர். ராதா
நடிக்கும்

# பாத காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஏப்ரல் மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.